Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

**AXSHAYA CONSTRUCTION JAFFNA**
கட்டடங்கள் கட்டுதல், வீடு கட்டுதல், பழைய வீடு களைத் திருத்துதல், குளியலறை கட்டுதல்
Plumbing, Electrical, Painting
அனைத்தும் தரமாகவும் குறைந்த விலையிலும் குறித்த காலத்திலும் செய்து கொடுக்கப்படும்.

தொடர்புக்கு: 0776679564

முரசு – 04 | திருவள்ளுவர் ஆண்டு 2045 ஆனி 04 புதன்கிழமை (18.06.2014) | பக்கங்கள் 20 | ஓசை – 260

## ஹன்ரர் வாகனம்மோதி உயிரிழந்தார் பூசகர்

(யாழ்ப்பாணம்)

ஹன்டர் வாகனம் மோட்டார் சைக்கிளை மோதித் தள்ளியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த கோவில் பூசகர் உயிரிழந்துள்ளதுடன் ஹன்ரர் வாகன சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

புன்னாலைக்கட்டுவன் சந்தியில் நேற்று நண்பகல் இவ் விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மல்லாகம் பகுதியைச் சேர்ந்த அ.துரைச்சாமி ஐயர் (வயது 83) என்பவரே உயிரிழந்தவரா வார்.

மல்லாகத்தில் இருந்து வடமராட்சி நோக்கி பயணித்த சுப்பர் கப் மோட்டார் சைக்கிளுடன் புன்னாலைக்கட்டுவன் பகுதியில் இருந்து வந்த ஹன்ரர் ரக வாகனம் மோட்டார் சைக்கிளில் பயணித்தவரை மோதித் தள்ளியுள்ளது.

இவ் விபத்தில் படுகாயமடைந்த பூசகர் யாழ். போதனா வைத்தியசாலை அவசர சிகிச்

(19) ஆம் பக்கம் பார்க்க

## நகரசபையில் அதிகார துஷ்பிரயோகம் உள்ளக முரண்பாட்டால் அம்பலம்

### வல்வெட்டித்துறை நகரசபையில் சீர்கெட்ட நிர்வாகம்

(வடமராட்சி)

வல்வெட்டித்துத்துறை நகராட்சி மன்றத்தில் ஆளும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் உறுப்பினர்களுக்கிடையே உள்ளக முரண்பாடுகள் உச்சக் கட்டத்தை அடைந்துள்ளதுடன் அவர்களின் அதிகார துஷ்பிரயோகங்களும் மோச்டிகளும் வெளிச்சத்துக்கு வர ஆரம்பித்துள்ளன. மேற்படி சபையின் தவிசாளருக்கும் ஏனைய ஆளும்கட்சி உறுப்பினர்களுக்கும் இடையில் முரண்பாடுகள் உச்சத்தில் உள்ளன. அத்துடன் இவர்களுக்கிடையில் இடைவிடாத கெடுபிடி யுத்தம் ஒன்று ஓய்வு இல்லாமல் தொடர்கின்றது.

இதன்காரணமாக இதுவரை இரகசியமாக இருந்த பலமோசடி நடவடிக்கைகளும் அதிகார துஷ்பிரயோகங்களும் மெல்ல மெல்ல அம்பலமாகிவருகின்றன.

மாகாணசபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் மேற்படி சபை மீது திணிக்க முயற்சிக்கும் நிழல் நிர்வாக அழுத்தங்களும், ஆதிக்கம் செலுத்தும் முயற்சிகளும் இப்போது வெளிச்சத்துக்கு வந்துள்ளன.

(19) ஆம் பக்கம் பார்க்க

# சிங்கள பௌத்தர்களுக்கு மட்டும் சொந்தமானதல்ல இலங்கை

## பேராசிரியர் கும்புறுகமுவே வஜிரதேரர் தெரிவிப்பு



இலங்கை என்பது சிங்கள பௌத்தர்களுக்கு மட்டுமே சொந்தமான நாடு என்பதை தான் ஏற்றுக்கொள்ளவில்லை எனவும் உரிமைகளை பாதுகாத்துக் கொண்டு அமைதியாக வாழும் உரிமை, நாட்டில் வாழும் அனைத்து இன மக்களுக்கும் இருக்க வேண்டும் எனவும் பேராசிரியர் கும்புறுகமுவே வஜிர தேரர் தெரிவித்தார்.

தேசிய ஐக்கியத்திற்கான சரவ மத அமைப்பு கொழும்பில் நேற்று ஒழுங்கு செய்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

வதந்திகளுக்கு ஏமாறாது அமைதியை நிலைநாட்ட நடவடிக்கை எடுக்குமாறு மக்களிடம் கோரிக்கை விடுக்கின்றோம்.

இலங்கையில் உள்ள சிலர் நாட்டில் அமைதியையும் நல்லிணக்கத்தையும் சீர்குலைக்க முயற்சித்து வருகின்றனர். இந்த முயற்சிகளில் புதிய பிரதிபலன்களை அளுத்கம பிரதேசத்தில் காணமுடிந்தது.

இனவாதம், மதவாத செயற்பாடுகளினால் ஏற்பட்ட சேதங்களை நாட்டு மக்கள் கடந்த 30 வருடங்களாக அனுபவித்து வந்துளனர். பகைக்கு பகையல்ல என்ற பௌத்த வசனத்தை புரிந்து கொண்டு செயற்பட வேணடுமென மக்களிடம் கோரிக்கை விடுக்கின்றோம்.


யார் தவறு செய்தாலும் அந்தத் தவறுக்கு சட்டத்தின் மூலம் அரசாங்கம் தண்டனை வழங்க வேண்டும் எனவும் வஜிர தேரர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சர்வதேச மனித உரிமை விசாரணை அரசியலமைப்பிற்கு எதிரான செயல்

### அரசாங்கம் தெரிவிப்பு

இலங்கை தொடர்பில் சர்வதேச மனித உரிமை விசாரணை நடத்தப்படுவது நாட்டின் அரசியலமைப்புக்கு எதிரான செயல் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பாக விசாரணை செய்யவுள்ள சர்வதேச குழு நாட்டிற்குள் பிரவேசிப்பதற்கு அனுமதியளிக்கக் கூடாது எனத் தெரிவித்து சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை மீதான விவாதம் நாடாளுமன்றத்தில் நேற்று ஆரம்பமானது.



ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரால் நியமிக்கப்பட்டுள்ள குழுவினர் இலங்கைக்கு எதிரான விசாரணைகளை மேற்கொண்டால் அது, நாட்டின் நல்லிணக்க செயற்

(19) ஆம் பக்கம் பார்க்க

## வடக்கில் தொடரும் வாள்வெட்டு; கிளிநொச்சியில் ஐவர் படுகாயம்

கிளிநொச்சி விநாயகர்புரம் பகுதியில் நேற்று அதிகாலை இரு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் வாள்வெட்டுக்கு இலக்காகி ஐவர் படுகாயமடைந்தனர். சம்பவம் பற்றித் தெரியவருவதாவது, விநாயகர்புரம் பகுதியில் உள்ள கண்ணகை அம்மன் ஆலயத்தில் நேற்று அதிகாலை இடம்பெற்ற திருவிழாவுக்கு வந்திருந்த இரு இளைஞர் குழுக்களுக்கிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் மோதலாக மாறியது. இதில் இடம்பெற்ற வாள்

(19) ஆம் பக்கம் பார்க்க

## மதக்கலவர வன்முறைகள் இடம்பெறாமல் தடுக்கப்படும்

### அரசாங்கம் அறிவிப்பு

எதிர்காலத்தில் மதக் கலவரங்கள் நடைபெறாமல் தடுக்கும் நோக்கில் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் உரிய பாதுகாப்பு அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

களுத்துறை மாவட்டம், அளுத்கமப் பகுதியில் கடும்போக்கு பௌத்த அமைப்பு என்று கருதப்படும் பொதுபல சேனாவுக்கும், உள்ளூர் முஸ்லிம்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதல்களில் குறைந்தது நான்கு பேர் உயிரிழந்த நிலையில், அரசின் உயர்மட்டக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

பிரதமர் ஜயரட்ண தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டதில், பசில் ராஜபக்ஷ, மைத்ரிபால சிறிசேன, டளஸ் அழகப்பெரும, பௌசி உட்பட பல அமைச்சர்கள் பங்கேற்றனர்.

(19) ஆம் பக்கம் பார்க்க

## உரும்பிராயிலும் பதற்றம் 7 வீடுகள் அடித்து உடைப்பு

யாழ்.உரும்பிராய்ப் பகுதியில் ஒரே வீதியில் உள்ள 7 வீடுகள் இனந்தெரியாத நபர்களினால் நேற்று முன்தினம் இரவு அடித்து உடைக்கப்பட்டதுடன், ஒவ்வொரு வீட்டிலும் தலா 5 இலட்சம் ரூபா பெறுமதியுடைய பொருட்கள் சேதமாக்கப்பட்டுள்ளதாக கோப்பாய் பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

குறித்த வீடுகளில் இருந்தவர்கள் வெளியேறியிருந்தமையினால் உயிர்ச் சேதங்கள் ஏற்படவில்லையெனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, உரும்பிராய் மற்றும் கோண்டாவில் ஆகிய பகுதிகளில் பொலிஸாரும்

(19) ஆம் பக்கம் பார்க்க

## இலங்கையரின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவேண்டும்

### ஐ.நா.செயலர் வேண்டுகோள்



இலங்கையிலுள்ள அனைத்து மக்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்தவேண்டுமென ஐ.நா. செயலர் பான் கீ மூன் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக் செயலாளரின் பேச்சாளர் பர்ஹான் ஹக் தெரிவித்துள்ளதாவது,

ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளர் பான் கீ மூன், இலங்கையின் தென் பகுதியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் கவலை வெளியிட்டுள்ளதுடன், சகல இலங்கை மக்களின் பாதுகாப்பையும் உறுதி செய்யுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கையில் முஸ்லிம் சமூகத்தினர் மற்றும் சிறுபான்மை சமூகத்தினர் மீதான தாக்குதல்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அவர்

(19) ஆம் பக்கம் பார்க்க

# மின்சாரத்துக்காக ஏங்கும் மக்கள்; பூநகரியில் இன்னமும் அவலம்

(முழங்காவில்)

பூநகரி தெனிகரை கிராமத்தில் இந்திய அரசின் வீடமைப்புத்திட்டத்தில் கட்டி வழங்கப்பட்ட வீடுகளுக்கு இருவருடமாக மின்சாரம் வழங்கப்படாததால் தமது பிள்ளைகளின் கற்றல் நடவடிக்கையில் பின்னடைவு ஏற்படுவதாக அப்பகுதிப் பொது அமைப்புக்கள் கவலை தெரிவிக்கின்றன.

மின் இணைப்பு செய்யப்பட்ட நிலையில் எப்போ தமக்கு மின்சாரம் கிடைக்கும் என்ற ஏக்கத்தில் இருந்த வண்ணம் ஏமாற்றம் அடைவதாகத் தெரிவிக்கின்றனர்.

விடாந்த காட்டுப்பகுதியில் அமைக்கப்பட்ட இக்குடியிருப்பில் மின்சாரம், குடிநீர் வசதிகள் இல்லாத நிலையில் தாம் இருப்பதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். உரியவர்கள் இதற்குரிய துரித நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (112)

# சோலை வரி அறவீடு

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினரால் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக தவிசாளர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்தார்.

ஆரம்பநாள் நிகழ்வாக கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு சாவகச்சேரி நகர் கோயிற்குடியிருப்புபகுதி மக்களுக்கான நடமாடும் சேவை முகாம் ஸ்ரீ முருகன் சனசமூக நிலைய கட்டடத்தில் நடைபெற்றது.

இவ் நடமாடும் சேவையின் போது சோலைவரி அறவிடப்பட்டதுடன் துவிச்சக்கரவண்டிக்கான இலக்கத்தகடுகளும் விநியோகிக்கப்பட்டிருந்தது. (48)

## திறப்புவிழா பிற்போடப்பட்டுள்ளது

'மகிந்தோதய' ஆய்வு கூடத் திறப்புவிழாவும், 'மகிந்தோதய' தொழில்நுட்ப பீடத்தின் அடிக்கல் நாட்டுவிழாவும் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.வட்டு. இந்துக்கல்லூரியில் இன்று நடைபெறவிருந்த 'மகிந்தோதய' ஆய்வு கூடத் திறப்பு விழாவும், 'மகிந்தோதய' பீட அடிக்கல் நாட்டுவிழாவும் தவிர்க்கமுடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாக வட்டு இந்துக்கல்லூரி அதிபர் எஸ். தனஞ்செயன் அறிவித்துள்ளார்.



பன்மொழியப் புலவர் அருட் கலாநிதி தாவீது அடிகளாரின் 33 ஆவது நினைவுதின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பருத்தித்துறை பங்குத்தந்தை அருட்திரு.யோன்மெனலீஸ் அடிகளார் அஞ்சலி செலுத்துவதையும், தாவீது அடிகள் அறக்கட்டளை நிதியப் பணிப்பாளர் எஸ்.அந்தோனிமுத்து மங்கள விளக்கேற்றுவதையும், இவ்விழாவையொட்டி நடாத்தப்பட்ட போட்டிகளுக்கான பரிசில்கள் வழங்கப்படுவதையும் காணலாம். (01)

# கிராம அலுவலர்கள் நியமனம்

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுக்கு 10 கிராம சேவை அலுவலர்கள் பொது நிர்வாக அமைச்சினால் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

கிராம சேவை அலுவலர்களுக்கான பயிற்சிகளைப் பெற்றுள்ள இவர்களுக்கு பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.ரி. ஜெயசீலன் இவர்களின் செயற்பாட்டுப் பிரிவுகள் பற்றி அறிவித்துள்ளனர்.

ரி.சுவிதா வல்வெட்டித்துறை வடமேற்கு ஜே/388, ஆர்.பாலலோஜினி பொலிகண்டிதெற்கு ஜே/395, எஸ்.விஜிதா அல்வாய் வடமத்தி ஜே/398, ஆர்.அபரஞ்சிதன் அல்வாய் வடக்கு ஜே/400, என்.நதியா பருத்தித்துறை தெற்கு ஜே/402, கே.ஸ்ரீசஸ்கா தும்பளை கிழக்கு ஜே/405, எஸ்.சிவாஜினி புலோலி மேற்கு ஜே/410, ரி.விமல்சினி புலோலி தென்மேற்கு ஜே/411, ரீ.அரவிந்தராம் புலோலி கிழக்கு ஜே/413, எஸ்.ஜெயதுயா தும்பளை வடக்கு ஜே/417. ஆகியோரே நியமிக்கப்பட்டுள்ளனர். (01)


# ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 1066

திகதி 16.06.2014

வெற்றி எண்கள்: 22 43 45 59 — ஆங்கில எழுத்து: T

ஜக்பொட் பரிசு ரூ. 3,11,10,040/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 3,11,10,040/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 11 | 50,000/= | ரூ. 5,50,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 255 | 1,000/= | ரூ. 2,55,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 511 | 1,000/= | ரூ. 5,11,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 11487 | 60/= | ரூ. 6,89,220/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6108 | 40/= | ரூ. 2,44,320/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 151782 | 20/= | ரூ. 30,35,640/= |
| ஆங்கில எழுத்து | 21973 | 20/= | ரூ. 4,39,460/= |
| | | மொத்தம் ரூ. | 67,24,640/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 8 | 50,000/= | 400,000/= |

ரூபா.50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | 606405501-0-20 |
| கம்பஹா | 606412527-4-34 |
| புத்தளம் | 606408939-4-04 |
| மட்டக்களப்பு | 606408514-1-41 |
| இரத்தினபுரி | 606405437-4-14 |
| மாத்தளை | 606402004-1-11 |
| மொனராகலை | 606400043-1-21 |
| பதுளை | 606404227-7-47 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 71,24,640/=

எதிர்வரும் வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா. 31,406,780/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2014.06.19 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

356. கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை. யூனியன் பிளேஸ், கொழும்பு 02. தொலைபேசி: 2 335446/7

(C/3706)



# வாழ்க வளமுடன்

பெயர் : கி.சாருஜன்

முகவரி : 6 ஆம் வட்டாரம் நெடுந்தீவு

அகவை 1 இல்



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்



# JUNE SPLENDOUR

THE TRUTH SHALL MAKE YOU FREE — UDUVIL

190 ஆம் ஆண்டு நிறைவு விழாவையொட்டி உடுவில் மகளிர் கல்லூரி நடாத்தும்

## கல்விக் கண்காட்சி

ஜூன் 18, 19, 20 ஆம் திகதிகள். காலை 9.00 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை.

உடுவில் மகளிர் கல்லூரி சமூகம்.

ஊடக அனுசரணை — தினப்பதிப்பு தினமுரசு THINAMURASU



## சிறு விளம்பரங்கள்

**டயானா பிளாஸ்ரிக்**

*றீசைக்கிள் (மீள் சுழற்சி)*

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.


# வீதி விபத்து

பருத்தித்துறை வீதி, நீர்வேலிச் சந்தியில் கடந்த புதன்கிழமை சைக்கிளும், ஆட்டோவும் நேருக்குநேர் மோதி விபத்துக்குள்ளாகின.

2 பேர் மோட்டார் சைக்கிளிலும், ஆட்டோவில் 4 பேரும் பயணித்தவேளையில் இரண்டு வாகனங்களும் விபத்துக்குள்ளாகின. இதில் ஆட்டோவில் பயணித்த இருவர் படுகாயங்களுக்குள்ளாகிய நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர்.

# சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியை வளர்க்க பாடுபட்டவர் ஆனந்தநடராசா

## ஓய்வுநிலை அதிபர் சிறிகாந்தன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியை முதற்தர பாடசாலையாக்க உயர்ந்த சிந்தனையின் ஊடாக அர்ப்பணிப்புள்ள சேவையை வழங்கியவர் இளையதம்பி ஆனந்தநடராசா இவர் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியில் 19 வருடங்கள் உட்பட 37 வருடங்கள் கல்விப் பணிக்காக முழுமையாக அர்ப்பணித்தவர் என்றால் மிகையாகாது.

இவ்வாறு சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் வ.சிறிகாந்தன் (சர்மா) தெரிவித்தார்.

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் பிரதி அதிபர் இ.ஆனந்தநடராசாவின் சேவை நயப்பு விழாவும் மணிவிழா மலர் வெளியீடும் நேற்று முன்தினம் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் சிறப்பு அதிதியாக கலந்து கொண்ட முன்னாள் அதிபர் வ.சிறிகாந்தன் மேலும் தெரிவிக்கையில்,

இப்பாடசாலையின் ஊடாக இன்று பல மாணவர்கள் பல்கலைக்கழகங்களில் பல துறைகளில் கல்விமான்களாக பொறியியலாளர்களாக வெளியேறிள்ளனர்.

இதனை விட நூற்றுக்கணக்கான மாணவர்களை தனது சொந்த நிதியைச் செலவழித்து பல நிபுணத்துவ துறைகளை உருவாக்கியவர் இளையதம்பி ஆனந்தநடராசா.

இதனை விட 37 வருடங்கள் கல்வி பணி ஆசிரியப்பணி சமூகப் பணி என முப்பணிகளை மிகத் திறம்பட செய்து இறுதியாக சண்டிலிப்பாய் இந்துவின் பிரதி அதிபராக, அதிபரின் துணைவராக, ஆசிரியர்களின் தோழனாக வினைத்திறன் வாய்ந்த சேவைகளை வினைத்திறனாக மேற்கொண்ட உயர்ந்த பண்புடையவர் ஆனந்தநடராசா என்றார்.

மேற்படி விழாவில் முன்னைநாள் அதிபர் க.சிவனேசன், கல்லூரி அதிபர் கு.விமலன் மற்றும் அயற்பாடசாலை அதிபர்கள், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் சிறப்புரையாற்றி வாழ்த்தினர். (92)

# கோப்பாயில் ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

வளலாய் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் வசிக்கும் மக்கள் தமது காணிகளில் மீள்குடியமர்த்துமாறு கோரி நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் கோப்பாய் பிரதேச செயலகத்திற்கு முன்பாக காலை 8.00 மணிமுதல் 11.00 மணிவரை இந்த ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுத்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தின்போது இராணுவமே வெளியேறு, வளலாய், வலி.வடக்கு, தையிட்டி, மயிலிட்டி போன்ற இடங்களில் அப்பகுதி மக்களை மீள்குடியேற்றி மக்களின் காணிகளை அபகரிக்காதே வலிவடக்கு காணி எமக்கு வேண்டும் போன்ற கோஷங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில், வலி. வடக்கு மீள்குடியேற்ற சங்கத் தலைவர், குணபாலசிங்கம், தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஸ் பிரேமச்சந்திரன், சிவஞானம் சிறிதரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் உட்பட முற்போக்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் நாயகம் சுதர்சிங் விஜயகாந் உட்பட பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (25)

## தனியார் பேருந்து சங்கம் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

வட இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் நேற்றுமுன்தினம் முதல் 151C, கச்சேரி நல்லூர் வீதியில் இயங்கி வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே 17/3, கச்சேரி நல்லூர் வீதியில் இயங்கி வந்த வட இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் தற்போது இடம் மாற்றப்பட்டு இயங்கி வருவதாக வடஇலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தலைவர் கெங்காதாரன் தெரிவித்துள்ளார்.

# ஆரோக்கிய உணவு வழங்கும் திட்டம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி 2005 பழைய மாணவர்களின் முதல் நடவடிக்கையாக முல்லைத்தீவு மாவட்டம் வன்னிவிளக்குளம் அ.த.க.பாடசாலை மாணவர்களுக்கு ஒரு நேர ஆரோக்கிய உணவு வழங்குவதற்கான திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதில் பிறந்த தினம் வருகின்ற மாதத்தில் ஒவ்வொருவராக பொறுப் பேற்று அத்திட்டம் நடைபெறுகின்றது.

இரண்டாம் கட்ட நடவடிக்கையாக கிளி.பூநகரி சிறிவிக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் தாய் மற்றும் தந்தையை இழந்த இரு மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டி, பத்து மாணவர்களுக்கு கல்வி பயிலுவதற்கான ஊக்குவிப்பு பணத்தொகை வழங்கப்பட்டது. அத்துடன் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி 2005 பழைய மாணவர்களால் கல்லூரியின் 2012 பரிசளிப்பு விழாவின் போது மூன்று இலட்சத்து முப்பதாயிரம் ரூபா பெருமதியான புத்தகங்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (48)

# வவுனிக்குளம் புனரமைப்பு

(வவுனியா)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட வவுனிக்குளம் நீர்பாசனக் குளத்தின் புனரமைப்பு பணிகள் இவ்வருடத்தின் ஜனவரி மாத இறுதியில் முடிவடைந்துள்ளதாக அம் மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்தது.


முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பாரிய குளங்களில் ஒன்றான இக்குளம் கடந்த 30 வருடங்களாக புனரமைக்கப்படாதிருந்தது.

இந்நிலையில் "முரண்பாடுகளால் பாதிக்கப்பட்ட இடங்களை அபிவிருத்தி செய்தல்" என்னும் திட்டத்தின் கீழ் இக்குளத்தை புனரமைப்பதற்கு 2012 ஆம் ஆண்டு 600 மில்லியன் ரூபா நிதி கிடைத்தது.

இந்நிதியைக் [illegible]ண்டு மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டத்தில் 320 மில்லியன் ரூபா செலவில் இக்குளம் புனரமைக்கப்பட்டதுடன், எஞ்சிய நிதியில் நீர்ப்பாசனக் கால்வாய்களும் கழிவு வாய்க்கால்களும் புனரமைக்கப்பட்டு வேலைத்திட்டங்கள் முடிந்துள்ளன.

இக்குளத்தின் மூலம் 6 ஆயிரத்து 60 ஏக்கரில் நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

# காதில பூ வைக்கிறவை புறமோசன் எடுக்கினம்... மோசம்போகுதுகள் சனம்...




எல்லாரும் ஏறி விழுந்த கழுதையில 'எங்கள் தங்கம் சிவசிவா' விக்கினேஸ்வரனும் ஏறிச் சறுக்கி விழுந்தாராம்.

**'மலர்ந்தது டமிலர் அரசு'** எண்ட புளுகத்தோட தலையில முடியைச் சூடி, கையில வேலையும் வைச்சுக்கொண்டு ஆட்சிக்கதிரையில ஏறினவர் இப்ப, குத்துக்கரணம், தோப்புக்கரணம், ஒளிச்சுப் பிடிச்சு விளையாட்டு எண்டு கனவிளையாட்டைக் காட்டிக் கொண்டிருக்கிறார்.

மாகாணசபையை ஒழுங்காக நடத்தேலாமல் தட்டுத்தடுமாறிக் கொண்டிருக்கிற எங்கள் தங்கம் சிவசிவாவுக்கு அடிக்கடி நெஞ்சுக்குத்து, பிறசர், தலைச்சுத்து, முதுகுநோ எண்டு ஆயிரம் வருத்தம் வருகுது.

ஆனால், ஆளின்ரை கதைக்கு மட்டும் குறைவேயில்லை.

எதுக்கெடுத்தாலும் நாலு திட்டு அரசாங்கத்தைத் திட்டி, தமிழன்ரை வீரத்தைப்பற்றி நாலு வார்த்தையில புகழ்ந்து, நாங்கள் விண்ணன்கள், மன்னன்கள் எண்டு பீலாக் காட்டிக்கொண்டிருக்கிறார்.

இப்பிடிப் பீலாக்காட்டினால்தான் தமிழ்த்தேசிய அரசியல்ல தன்ரை கொடியைப் பறக்க விட முடியும் எண்டு ஆளுக்கு நல்லாய் விளங்குது.

அதாலதான் இந்த மாதிரி மீசையை முறுக்கிக் காட்டுறார்.

அரசியல்ல குதிக்க முதல் இப்பிடி மனிசன் பொய்சொல்லுறேல்ல எண்டது உண்மை.

இப்ப எதுக்கெடுத்தாலும் பொய், புரட்டு, சுத்துமாத்து....

போன கிழமை 'இந்து'ப் பத்திரிகைக்கு 'எங்கள் தங்கம் சிவசிவா' ஒரு பேட்டி குடுத்திருக்கிறார்.

அதில 'வடக்கு மாகாணசபையை (அப்பிடி ஒரு மாகாணசபை இருக்கெண்டு சத்தியமாக எனக்குத் தெரியாது. கைதடியில ஒரு மாகாணசபை இருக்கு. அதின்ரை துணைச் செயலகங்கள், கிளைச்செயலகங்கள், குட்டிக் கந்தோர்கள், எல்லாம் யாழ்பாணத்தின்ரை குச்சொழுங்கை, கையொழுங்கைகளுக்குள்ள இருக்கு. அப்ப இந்த யாழ்ப்பாணச் சபையை) இயக்கிறதுக்கு மகிந்த சிந்தனையும் அரசாங்கமும் ஒத்துழைக்கேல்லை. அதிகாரத்தைத் தருகினம் இல்லை. அதால மக்களுக்குரிய சேவைகளைச் செய்ய முடியேல்ல' எண்டு அதில சொல்லியிருக்கிறார்.

இதை நீங்கள் பார்த்தியள் எண்டால் உண்மையாக உங்களுக்கு கைகால் எல்லாம் ஒருக்கால் முறுக்கேறும்.

அந்த மாதிரி ஒரு போடு போட்டிருக்கிறார், இலங்கை அரசாங்கத்தைப்பற்றி.

ஆனால், மாகாணசபை உறுப்பினர்கள் அரசாங்கத்திட்டக் கேட்ட சலுகைகள், வசதிகளைப்பற்றி ஒரு சொல்லைக் கூட 'எங்கள் தங்கம் சிவசிவா' கதைக்கேல்ல.

அதெல்லாத்தையும் வலு சாமர்த்தியமாக மறைச்சுப்போட்டார். இதைத்தானே முந்தித்தொடக்கம் இவையின்ரை தலைமைகள் எல்லாம் செய்து வருகினம்.

ஏன் இவர்கூட கவர்னர் ஊடாக ஜனாதிபதியிட்ட தன்ரை கொழும்பு – யாழ்ப்பாணம் பயணத்துக்கு ஒசி விமானச் சீட்டைக் கேட்டிருந்தாரே...

அதை அரசாங்கம் தந்ததா இல்லை மறுத்ததா எண்டதையாவது சொல்லியிருக்கலாம் எல்லோ...

அதையும் எங்கள் தங்கம் சிவசிவா மறைச்சிட்டார்.

மாகாணசபைக்கு ஒதுக்கப்பட்ட காசு மக்களுக்குச் செலவழிக்கப்படாமல் இந்த வருசக் கடைசியில திரும்பப்போகுது. இந்த வருசம் முடியிறதுக்கு இன்னும் ஆறு மாதம்தான் இருக்கு.

அதில பின்மாதங்களில மழைக்காலம் வந்திடும். மழையில ஒரு வேலையும் செய்யேலாது.

ஆனால், இதையெல்லாம் யோசிச்சு சனங்களுக்கு எதாவது நன்மைகள் கிடைக்கிறமாதிரி நாலு நல்ல காரியத்தைச் செய்யிறதைப்பற்றி ஆரும் சிந்திக்கிறதாகக் காணேல்ல.

இவ்வளவுக்கும் இந்த மாகாணசபையில் இதுவரையில அறுபத்தியெட்டோ எழுபத்தியெட்டோ தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கு.

இந்தத் தீர்மானங்களால சனங்களுக்கு என்னதான் பயன் கிடைச்சிருக்கு. அல்லது எதிர்காலத்தில என்ன பலன் கிடைக்கப்போகுது?

ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது எண்டு தெரியாமலா சொன்னார்கள்.

முந்தி சட்டத்தரணிமார் எங்கட காதில பூவைச்சினம். இப்ப நீதியரசர் பூவைக்கிறார்.

நல்லாயிருக்கு இந்தப் புறமோசன்...

வாழ்க எங்கள் தங்கம் சிவசிவா.... 'விக்கினமெல்லாம் தீர்ப்பான் விக்கி' எண்ட நம்பிக்கையில் மண் விழுத்தினியளே...

உங்கள நம்பி எங்கட சனம் மோசம்போச்சுதே..... உங்களை நம்பின சனத்துக்குத் துரோகம் பண்ணிக்கொண்டிருக்கிறியளே... ஐயா...

சந்தர்ப்பங்கள் நிறையப் பேரைக் கூப்பிடுகின்றன. ஆனால் சிலர் தான் எழுந்து நிற்கிறார்கள். - *ஆலிவர் வோர் போர்ட்.*

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
**Online : www.emurasu.com**

## இனவாதத்தை ஒழிப்பதா, வளர்ப்பதா?

அளுத்கம வன்செயல்கள் கவலையையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்துவனவாக உள்ளன. இனரீதியான வன்முறைகளுக்கு இந்த நாடு இவ்வளவு விலைகளைக் கொடுத்துப் பட்ட பிறகும் பாடம் எதனையும் பெறவில்லை என்று தெரியவருவது இந்த நாட்டின் எதிர்காலம் குறித்த அச்சத்தையே ஏற்படுத்துகிறது.

மாற்று இனங்களை, பிற சமூக மக்களைச் சகித்துக்கொள்ள முடியாதவாறான விரோத உணர்வு அரசியல் அதிகார தேவைகளுக்காக உருவாக்கி விடப்படுகிறது. அது எந்நேரமும் வன்முறையாக வெடிக்கத் தயாராக வளர்ந்தபடியே இருப்பதாகத் தெரிகிறது.

பௌத்த மதம் ஆசியாவின் பெரிய புராதன பெருநகர நாகரிகங்கள் மூலமாக இந்தியா, சீனா, ஜப்பான் போன்ற வேறிடங்களில் அது செழிப்படைந்து பரப்புதல் மூலமாக விரிவடைந்துள்ளது.

இலங்கையிலோ, மகாவம்சத்தை எழுதியவர் அல்லது எழுதியவர்கள் பௌத்த மதத்தை குறுகலானதாக திரிபுபடுத்தி அதை விரிவான பார்வைகள் அற்ற சிங்களமயமாக மாற்றி விட்டுள்ளனர் என்கிற விமர்சனம் சரியானதாகவே தோன்றுகிறது.

வன்முறைக்கும் குறுகிய பார்வைகளுக்கும் எதிரான நெறியாகிய பௌத்தத்தை இலங்கையில் மகாவம்சமே இனவாதப்படுத்தியது. 20-ம் நூற்றாண்டில் அநகாரிக தர்மபால போன்ற சித்தாந்தவாதிகளால் புதுப்பிக்கப்பட்ட அது பௌத்த இலட்சியமான சகிப்புத்தன்மை மற்றும் மெய்மை நிலை என்பனவற்றை பிரதிபலிப்பவையாக இருக்கவில்லை.

இதுபற்றிக் குறிப்பிடும் கலாநிதி தயான் ஜயதிலக, பின்வருமாறு எழுதுகிறார்:

*"சுதந்திரத்திற்குப் பின்னான பரம்பரையில் உள்ள பிரிவினைவாத சிங்கள பௌத்த தேசியவாதிகள், ஆசியாவில் ஜொலிக்கும் மாணிக்கமாகத் திகழும் ஒரு நாட்டையும் அதன் அமைப்பையும் கைப்பற்றிக் கொண்டதோடு, அவர்களின் இனஅடிப்படையிலான சீற்றத்தினால் அதை சிதைத்து நாசமாக்கியதுடன், தங்களது சொந்த வரம்புகள் மற்றும் பழமையான குறுகிய தப்பெண்ணங்களுக்கு ஏற்றவாறு அளவையும் வடிவமைப்பையும் குறைத்துக் கொண்டார்கள்.*

*அவர்கள் நச்சுப் புகையுடன் எரிந்து சிதறலானதையே நம்மிடம் கையளித்தார்கள், அது ஒருகாலத்தில் ஜனநாயகத்தினதும் மற்றும் சமூக நலன்களினதும் முன்மாதிரியான நாடு, என்று புகழப்பட்ட நம் நாட்டின் உலக அபிப்பிராயத்தை கணிசமானளவு கட்டிப் போட்டது, இப்போது பெரு வெறுப்புக்கும் ஆளாகியுள்ளது."*

இந்த நாட்டில் இணக்க நடைமுறைகள் மூலம் அமைதியும் சமாதான வாழ்வும் ஏற்பட விடாமல் தடுத்துக் கொண்டிருப்பவை இவ்வாறாகக் கட்டியெழுப்பப்பட்டிருக்கும் இனவாதக் கருத்தியல்களே.

நீதியும் நடுநிலைமைச் சிந்தனையும் உள்ள மனிதர்களால் இந்த வெறுப்பும் இனவாதமும் வெற்றிகொள்ளப்பட வேண்டும். சிங்கள சமூகத்திலுள்ள முற்போக்காளர்களும் புத்திஜீவிகளும் இதில் பெரும்பங்காற்ற வேண்டிய தேவையிருக்கிறது.

அதேசமயம், சிறுபான்மைச் சமூகங்களைச் சேர்ந்த முற்போக்காளர் மற்றும் நியாய சிந்தனையுள்ளவர்கள் அவர்களுடன் கை கோர்த்து இந்த நிலைமைகளை மாற்ற முன்வரவேண்டும்.

அனைத்துச் சமூகங்களிலுமுள்ள நியாயவான்கள் – நாட்டின் நல்லிணக்க வாழ்வில் அக்கறையுடையவர்கள் வெறுமனே குற்றம் சாட்டிவிட்டோ கண்டித்துவிட்டோ வாளாவிருந்துவிட்டால், எல்லாத் தரப்பிலுமுள்ள இனவாத வன்முறையாளர்களே நாட்டைக் கையிலெடுக்க அனுமதித்ததாகிவிடும்.

அரசாங்கமும் இந்த விடயத்தில் தன் பொறுப்பை ஏனோ தானோவென்று முடித்துவிட முடியாது. வன்முறையாளர்கள் சமூகத்திலிருந்து வேறுபடுத்தப்பட வேண்டும். மீண்டும் இனரீதியான வன்முறை உருவாகாது தடுப்பதை உறுதிப்படுத்தும் விதமான கடுமையான நடவடிக்கைகள் வேண்டும். - *ஆசிரியர்*

# பொதுபலசேனாவுக்கு எதிராக காத்தான்குடியில் கண்டனப்பேரணி

அளுத்கம, பேருவளை, தர்கா நகர் மற்றும் களுத்துறை போன்ற முஸ்லிம்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் பொதுபல சேனா அமைப்பினரால் மேற்கொள்ளப்பட்ட வன்முறைக்கு எதிராக கண்டனப் பேரணி நடத்தப்பட்டுள்ளது.

காத்தான்குடி பள்ளிவாசல்கள முஸ்லிம் .நிறுவனங்களின் சம்மேளனம் மற்றும் காத்தான்குடி ஜம்மியதுல் உலமா என்பன இணைந்து நேற்று காத்தான்குடியில் பாரிய கண்டனப் பேரணியை அமைதியான முறையில நடத்தியுள்ளன.

இக் கண்டனப் பேரணியில் கலந்து கொண்டோர், பாதுகாப்பு அமைச்சரே பொதுபல சேனாவை உடனடியாக தடை செய், சிறுபான்மை மக்களை பாதுகாப்பது மகிந்த சிந்தனையல்லவா? இனவாதிகளை இனம் கண்டு சட்டத்தின் முன் நிறுத்து, பாதுகாப்பு செயலாளரே சிறுபான்மை மக்களுக்கு பாதுகாப்புத்தா? இனவாதிகளை கைது செய், அரசே மத வன்முறையை உடனடியாக நிறுத்து போன்ற பல்வேறு தமிழ், சிங்கள, ஆங்கில பதாதைகளை ஏந்தியிருந்தனர்.

இதில் காத்தான்குடி நகர சபைத்தவிசாளர் எஸ்.எச்.எம் அஸ்வர் உட்பட அதன் உறுப்பினர்கள், நல்லாட்சிக்கான மக்கள் இயக்கத்தின் சூறா சபை உறுப்பினர் ஹாரூன், காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம நிறுவனங்களின் சம்மேளனம மற்றும் காத்தான்குடி ஜம்மிய துல் உலமா ஆகியவற்றின் பிரதிநிதிகள், முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் பரீட், உலமாக்கள் பொது மக்கள் கலந்து கொண்டு தங்களது கண்டனங்களைத் தெரிவித்தனர்.

பேரணி இறுதியில் பொதுபல சேனா அமைப்பை தடை செய்ய கோரி பள்ளிவாயல்கள் முஸ்லிம நிறுவனங்களின் சம்மேளனம், ஜம்மியதுல் உலமா சார்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்புவதற்கான மகஜர் காத்தான்குடி பிரதேச செயலாளர் எஸ்.எச்.முஸம்மிலிடம் காத்தான்குடி பிரதேச செயலகம் முன்பாக வைத்து கையளிக்கப்பட்டது இப்பாரிய கண்டனப் பேரணி காத்தான்குடி முஹைதீன் மெத்தைப் பெரிய ஜும்மா பள்ளிவாசலிலிருந்து ஆரம்பமாகி காத்தான்குடி பிரதேச செயலகம் வரை இடம்பெற்றது.

# வன்முறையை தடுக்க நடவடிக்கை முஸ்லிம் நாடுகள் உறுதி

(கொழும்பு)

அளுத்கம உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் முஸ்லிம்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் முஸ்லிம் நாடுகள் நேரடியாகத் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என ஆறு முஸ்லிம் நாடுகளின் தூதுவர்கள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமிடம் உறுதியளித்துள்ளனர்.

கொழும்பிலுள்ள முஸ்லிம் நாடுகளின் தூதுவர்கள் நேற்று முன்தினம் இரவு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீமை அவரது இல்லத்தில் அவசரமாக சந்தித்து கலந்துரையாடிய போதே அவர்கள் இதனைத் தெரிவித்துள்ளனர். இந்த முக்கிய சந்திப்பில் ஈரான், கட்டார், ஆப்கானிஸ்தான், குவைத், பாகிஸ்தான் மற்றும் மலேசியா ஆகிய ஆறு நாடுகளின் தூதுவர்கள் கலந்து கொண்டனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் அதன் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ரி.ஹசன் அலி, கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் சபையின் மு.கா. குழுத்தலைவருமான ஏ.எம்.ஜெமீல், கட்சியின் சர்வதேச விவகாரப் பணிப்பாளர் சட்டத்தரணி ஏ.எம்.பாயிஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். இதன்போது அமைச்சர் ஹக்கீம் குறித்த முஸ்லிம் நாடுகளின் தூதுவர்களுக்கு அளுத்கம சம்பவம் தொடர்பில் மிகவும் ஆழமாக விளக்கிக் கூறியதுடன் அதன் பின்னணிகள் குறித்தும் அதனைத் தொடர்ந்து எழுநதுள்ள நெருக்கடி நிலைமைகள் பற்றியும் எடுத்துரைத்தார.

பொதுபலசேனா என்கின்ற பேரின கடும்போக்கு, தீவிரவாத இயக்கத்தினரின் இந்த திட்டமிட்ட தாக்குதல்களினால் முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள், உயிர் மற்றும் உடமை இழப்புகள் தொடர்பிலும் தற்போதைய கள நிலைவரம் பற்றியும் இதன்போது அமைச்சர் ஹக்கீம் விளக்கமளித்தார். இவற்றை மிகவும் அவதானமாக கேட்டறிந்து கொண்ட தூதுவர்கள் இலங்கை வாழ் முஸ்லிம்களின் இக்கட்டான நிலைமை குறித்து தமது நாடுகள் கவலை கொண்டிருப்பதாகவும் அவர்களின் உயிர், உடமைகளுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்களை நிவர்த்தி செய்து பாதுகாப்பை உறுதி செய்வதற்கு மிகவும் பொறுப்புணர்வுடன் முயற்சிகளில் ஈடுபட தயாராகி வருவதாகவும் குறிப்பிட்டனர்.

குறிப்பாக இப்பிரச்சினைகள் தொடர்பில் தமது நாடுகளின் தலைவர்கள், இலங்கை ஜனாதிபதி மற்றும் அரசாங்க உயர் மட்டத்தினருடன் நேரடியாக பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு தாம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என அமைச்சர் ஹக்கீமிடம் தூதுவர்கள் உறுதியளித்தனர் அத்துடன் வியாழக்கிழமை இடம்பெறவுள்ள முஸ்லிம் நாடுகள் கூட்டமைப்பின் மாநாட்டிலும் இலங்கை முஸ்லிம் சமூகம் தற்போது எதிர் கொண்டிருக்கும் பிரச்சினைகள் குறித்து பிரஸ்தாபித்து அதன் ஊடாக நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்றும் தூதுவர்கள் உறுதியளித்தனர் என கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் சபையின் மு.கா. குழுத் தலைவருமான ஏ.எம்.ஜெமீல தெரிவித்தார். இச்சந்திப்பு மிகவும் பயன் மிக்கதாகவும் திருப்திகரமாகவும் அமைந்திருந்தது எனவும் ஜெமீல் குறிப்பிட்டார்.

# நாட்டில் மோசமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது சுகாதாரத்துறை

## - அரச தாதியர்சங்கம் குற்றச்சாட்டு -

நாட்டில் சுகாதாரத்துறை மிகவும் மோசமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது என அரச தாதியர் உத்தியோகத்தர்கள் சங்கத்தின் செயற்பாட்டாளர் சமன ரத்னப்பிரிய தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் அரச தாதியர் சங்க் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் ,

இதனடிப்படையில் தாதி உத்தியோகத்தர்களின் சுயாதீன சேவைகளுக்கு தொடர்ச்சியாக முட்டுக்கட்டை போடும் செயற்பாடுகளிலேயே அரச மருத்துவ அதிகாரிகள் சங்கமும் சுகாதார அமைச்சும் மும்முரமாக செயற்பட்டு வருகின்றது. அதேபோன்று குறித்த் சங்கத்தின் கருத்துக்களையே சுகாதார அமைச்சரும் சரி அமைச்சில் தொழிற்படும் அதிகாரிகளும் செவி மடுக்கினறனர். அதேவேளை சுகாதாரதுறையில் காணப்படுகின்ற சட்ட திடங்களை கடைப்பிடிக்காமல் தமக்கென ஒரு சட்டத்தை நியமித்துக் கொண்டு சுகாதாரத்துறையை சீரழிப்பதும் மட்டுமல்லாது நாட்டில அப்பாவி மக்களையும் அசௌகரியங்களுக்கு இட்டுச் செல்கின்றது.

சுகாதாரத்துறையில் வைத்தியர்களை பார்க்கிலும் தாதியர்கள் மிகவும் அனுபவமும் ஆற்றலும் உடையவர்களாக செயற்படுகின்றார்கள். நாட்டின் இன்று பிரசவங்களின் போது தாதியர்களின் உன்னத செயற்பாடுகளின் மூலம் நோய் தொற்றினால் இறப்பு மற்றும் சிசு மரண வீதங்கள் குறைந்த மட்டத்திலேயே காணப்படுகின்றன. இவ்வாறான நிலைமைகளின் கீழ் சுகாதார அமைச்சு அரச தாதியர்களின் சேவைகளை கௌரவித்து அவர்களின் சேவை நிமிர்த்தம் ஏற்படும் பிரச்சினைகளை தீர்பபது தொடர்பில் கவனம் செலுத்தாமல் வைத்திய சங்கம் சார்பில் முன்வைக்கப்படும் கருத்துக்களை முன்னிலைப்படுத்தியே அனைதது செயற்பாடுகளையும மேற்கொள்கின்றது.

இவ்வாறான செயறபாடுகளை தவிர்த்து சுகாதார அமைச்சானது துரிதமாக செயற்பட்டு அரச தாதியர்கள் உத்தியோகத்தர்கள் தொடர்பிலான பிரச்சினைகளை தீர்க்க வேண்டும் என நாம் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றோம் எனத் தெரிவித்தார்.



**சந்திரிகா முன்வைத்த அதிகாரப் பகிர்வுத் திட்டத்தை உள்ளடக்கிய அரசியலமைப்பு வரைபு ஒற்றையாட்சியை நீக்குவதாகவும் இலங்கை ஒரு பல்லின, பல்மொழி, பல்மத நாடு என்பதை அங்கீகரிப்பதாகவும் இருந்தது. தமிழ்த் தலைவர்கள் இந்த முக்கியமான அம்சத்தையும், அதிகாரப் பகிர்வுத் தீர்வுத் திட்டம் சமஷ்டித் தீர்வாக இருந்ததையும் சிறிதளவேனும் கவனத்தில் எடுக்காமல் ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர்ந்து அந்த அரசியலமைப்பு வரைபை எதிர்த்தார்கள். இந்த எதிர்ப்பின் பாரதூரமான விளைவைத் தமிழ் மக்கள் இப்போது அனுபவிக்கின்றார்கள்.**

# தமிழ்த் தலைவர்கள் விட்ட தவறுகளே இன்றைய அவல நிலைக்குக் காரணம்

■ சங்கர சிவன்

தமிழ்த் தலைவர்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களைச் சிங்களத் தலைவர்கள் மீறி நடந்துவிட்டார்கள் என்றும் அவர்கள் மீது நம்பிக்கை வைக்க முடியாது என்றும் கூட்டமைப்புத் தலைவர்கள் செய்யும் பிரசாரத்தின் நோக்கம் அரசியல் தீர்வு சாத்தியமில்லை என்பதை வலியுறுத்துவதே. பண்டா-செல்வா ஒப்பந்தத்தையும் டட்லி-செல்வா ஒப்பந்தத்தையுமே இவர்கள் குறிப்பிடுகின்றார்கள். இந்த ஒப்பந்தங்கள் நடைமுறைக்கு வர முடியாமற் போனதற்குத் தமிழ்த் தலைவர்களும் சம அளவில் பொறுப்பாளிகள் என்பதையும் தமிழ்த் தலைவர்கள் விட்ட தவறுகளும் தமிழ் மக்களின் இன்றைய அவல நிலைக்குக் காரணம் என்பதையும் கூட்டமைப்பினர் திட்டமிட்டு மறைக்கின்றார்கள்.

சிங்களத் தலைவர்கள் தவறு விடாதவர்களல்ல. அதற்காக அவர்கள் எல்லோரையும் பேரின வாதிகள் என்று முத்திரை குத்துவது தவறு. சிங்கள மக்கள் மத்தியிலுள்ள பேரினவாதிகளையும் மற்றவர்களையும் சரியாக இனங்காண்பது தமிழ் அரசியலின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு அத்தியாவசியமானது.

பண்டா- செல்வா ஒப்பந்தம் ஒரு நல்ல தீர்வு என்பதில் சந்தேகமில்லை. அந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்திருந்தால் இனப்பிரச்சினை தீர்ந்திருக்கும் என்று சம்பந்தன் நாடாளுமன்றத்தில் பேசியிருக்கின்றார். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையிலான எதிர்ப்பியக்கம் தீவிரமடைந்த நிலையில் பிரதமர் பண்டாரநாயக்க ஒப்பந்தத்தைக் கைவிட்டது துரதிஷ்டமானது. எனினும் ஒப்பந்தத்தின் பிரதான சரத்துக்களை நடைமுறைக்குக் கொண்டு வரக்கூடிய இரண்டு சந்தர்ப்பங்கள் பிந்திய நாட்களில் தமிழரசுக் கட்சிக்குக் கிடைத்தன.

1965 பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் தனிப்பெரும்பான்மை கிடைக்க வில்லை. மற்றைய கட்சிகளின் உதவியுடன் ஆட்சி அமைக்கும் முயற்சியில் இரண்டு கட்சிகளும் தமிழரசுக் கட்சியின் உதவியைக் கோரின. மாவட்ட சபை தருவதாக ஐக்கிய தேசியக் கட்சி வாக்குறுதி அளித்தது. பண்டா-செல்வா ஒப்பந்தத்தின் பிரதான சரத்துக்களை நடைமுறைப்படுத்துவதாகவும் அதைச் சிம்மாசனப் பிரசங்கத்தில் உள்ளடக்குவதாகவும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி வாக்குறுதி அளித்தது. ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவளிப்பதெனத் தமிழரசுக் கட்சி முடிவு செய்தது. இது மிகவும் தவறான முடிவு.

**சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத்தரும் என்று ஐந்து வருடங்களாகக் காலத்தை அவமே கழித்துக் கொண்டிருக்கும் கூட்டமைப்பு தெரிவுக் குழுவில் ஆறு மாத காலம் ஏன் முயற்சித்துப் பார்க்கக் கூடாது? அதனால் தமிழ் மக்களுக்கு ஒரு இழப்பும் ஏற்படப் போவதில்லையே.**

மாவட்ட சபை பண்டா - செல்வா ஒப்பந்தத்திலும் பார்க்க மிகவும் குறைவான அதிகாரங்களையே கொண்டது. இதற்காக பண்டா- செல்வா ஒப்பந்தத்தைக் கைவிட்டிருக்கக்கூடாது. நியமன உறுப்பினர்களையும் சேர்த்துப் பார்த்தால் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்துக்கு தமிழரசுக் கட்சி இல்லாமல் பெரும்பான்மை உண்டு. எனவே, அந்த அரசாங்கத்தில் தமிழரசுக் கட்சி தீர்மான சக்தியாக இல்லை. சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சி அமைத்திருந்தால் அதில் தமிழரசுக் கட்சி தீர்மான சக்தியாக இருந்திருக்கும். தமிழரசுக் கட்சி வெளியேறினால் அரசாங்கம் விழுந்துவிடும் நிலை. இந்தப் பலமான நிலையைப் பயன்படுத்திப் பண்டா - செல்வா ஒப்பந்தத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கக்கூடிய நல்ல சந்தர்ப்பத்தைத் தமிழரசுக் கட்சி கைதவறவிட்டது.

முதலாவது குடியரசு அரசியலமைப்பு தயாரிக்கப்பட்ட வேளையில் இரண்டாவது சந்தர்ப்பம் கிடைத்தது. அரசியலமைப்பைத் தயாரிக்கும் நடைமுறைக்கு ஆதரவளித்தால் பண்டா - செல்வா ஒப்பந்தத்தின் பிரதான சரத்துக்களை அரசியலமைப்பில் உள்ளடக்கலாம் என்ற தகவல் அரசாங்கத்தின் சார்பில் மு. திருச்செல்வத்துக்கூடாக எஸ்.ஜே.வி. செல்வநாயகத்துக்கு அனுப்பப்பட்டது. செல்வநாயகம் அந்த அழைப்பை நிராகரித்தார்.

கிடைத்த சந்தர்ப்பங்களைத் தமிழரசுக் கட்சி சரியாகப் பயன்படுத்தியிருந்தால் இனப்பிரச்சினை பெருமளவில் தீர்ந்திருக்கும். பிற்காலத்தில் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்களும் அழிவுகளும் ஏற்பட்டிருக்கமாட்டா. கிடைத்த சந்தர்ப்பங்களைத் தவற விட்டுவிட்டு பண்டா-செல்வா ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தியிருந்தால் இனப்பிரச்சினை தீர்ந்திருக்கும் என்று இப்போது கூறுவதில் அர்த்தமில்லை.

டட்லி-செல்வா ஒப்பந்தம் கைவிடப்பட்டதற்குத் தமிழரசுக் கட்சியும் சம அளவில் பொறுப்பாளி. ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கத்துக்குத் தமிழரசுக் கட்சி இல்லாமலே பெரும்பான்மை இருந்தது. அதனால் மாவட்ட சபையை அமைப்பதில் அந்த அரசாங்கம் அக்கறை கொள்ளவில்லை. ஒரு கட்டத்தில் பிரதமர் டட்லி சேனநாயக்க தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்து மாவட்ட சபையை வழங்க முடியாத நிலையில் இருப்பதாகவும் அதற்குப் பொறுப்பேற்று இராஜினாமா செய்யப்போவதாகவும் கூறினார். அவர் எதிர்பார்த்தது போலவே தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் அவரை இராஜினாமா செய்ய வேண்டாம் என்றும் பதவியில் தொடர்ந்து இருக்குமாறும் கேட்டுக் கொண்டனர். இதற்குப் பின்னரும் தமிழரசுக் கட்சி அந்த அரசாங்கத்தில் பங்காளியாக இருந்தது. பண்டா - செல்வா ஒப்பந்தம் தமிழரசுக் கட்சியின் சம்மதத்துடனேயே கைவிடப்பட்டது என்பதே இதன் அர்த்தம்.

**வடக்கு–கிழக்கு மாகாணங்கள் தமிழ் மக்களின் வரலாற்று ரீதியான வாழ்புலம் என்று பதின்மூன்றாவது திருத்தில் சொல்லப்பட்டுள்ளது. இது பாரம்பரிய தாயகக் கோட்பாட்டை மறைமுகமாக அங்கீகரிப்பதாகும். மாகாண சபையை நிராகரிக்காமல் ஏற்று நடந்தியிருந்தால் நடைமுறையில் இக்கோட்பாடு வலிமை பெற்றிருக்கும். வடக்கு–கிழக்கு மாகாணங்கள் பிரிக்கப்படும் நிலையையும் தவிர்க்க முழந்திருக்கும். தமிழ்த் தலைமையின் பிழையான முடிவு எங்கே கொண்டுபோய் விட்டிருக்கின்றது என்பதைக் கண்முன்னால் காண்கின்றோம்.**

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைந்த மாகாண சபையைத் தமிழ்த் தலைமை நிராகரித்தது. எடுத்த எடுப்பில் நிராகரிக்காமல் அதன் சாதக அம்சங்களைக் கவனத்தில் எடுத்து முடிவுக்கு வந்திருக்க வேண்டும். வடக்கு-கிழக்கு மாகாணங்கள் தமிழ் மக்களின் பாரம்பரிய தாயகம் என்று நீண்ட காலமாகக் கூறி வருகின்றோம். இவ்விரு மாகாணங்களும் தமிழ் மக்களின் வரலாற்று ரீதியான வாழ்புலம் என்று பதின்மூன்றாவது திருத்தில் சொல்லப்பட்டுள்ளது. இது பாரம்பரிய தாயகக் கோட்பாட்டை மறைமுகமாக அங்கீகரிப்பதாகும். மாகாண சபையை நிராகரிக்காமல் ஏற்று நடத்தியிருந்தால் நடைமுறையில் இக்கோட்பாடு வலிமை பெற்றிருக்கும். முரண்பாடுகளுக்கு இடமளிக்காமல் சுமுகமாக மாகாண சபையை நடாத்திச் சென்றிருந்தால் வடக்கு-கிழக்கு மாகாணங்கள் பிரிக்கப் படும் நிலையையும் தவிர்க்க முடிந்திருக்கும். தமிழ்த் தலைமையின் பிழையான முடிவு எங்கே கொண்டுபோய் விட்டிருக்கின்றது என்பதைக் கண்முன்னால் காண்கின்றோம்.

தமிழ்த் தலைவர்கள் ஒற்றையாட்சியைத் தொடர்ச்சியாக எதிர்த்து வருகின்றார்கள். சந்திரிகா முன்வைத்த அதிகாரப் பகிர்வுத் திட்டத்தை உள்ளடக்கிய அரசியலமைப்பு வரைபு ஒற்றையாட்சியை நீக்குவதாகவும் இலங்கை ஒரு பல்லின, பல்மொழி, பல்மத நாடு என்பதை அங்கீகரிப்பதாகவும் இருந்தது. தமிழ்த் தலைவர்கள் இந்த முக்கியமான அம்சத்தையும் அதிகாரப் பகிர்வுத் தீர்வுத் திட்டம் சமஷ்டித் தீர்வாக இருந்ததையும் சிறிதளவேனும் கவனத்தில் எடுக்காமல் ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர்ந்து அந்த அரசியலமைப்பு வரைபை எதிர்த்தார்கள். இந்த எதிர்ப்பின் பாரதூரமான விளைவைத் தமிழ் மக்கள் இப்போது அனுபவிக்கின்றார்கள்.

தமிழ்த் தலைவர்கள் காலத்துக்குக் காலம் விட்ட தவறுகளின் விளைவாகத் தமிழ் மக்கள் இன்று பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றார்கள். இன்னும் இத்தலைவர்கள் திருந்துவதாகத் தெரியவில்லை. நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை நிராகரிப்பதன் மூலம் மீண்டும் தவறு விடுகின்றார்கள்.

தங்கள் தவறை மூடி மறைப்பதற்காக நாடாளுமன்றத் தெரிவுக் குழுவைப் பற்றி பிழையான தகவல்களையே மக்களுக்குக் கூறுகின்றார்கள். தெரிவுக் குழு பதின்மூன்றாவது திருத்தத்தை வெட்டிக் குறுக்கிவிடும் என்கின்றார்கள்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் எடுக்கும் தீர்மானம் முடிந்த முடிவல்ல. நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேறிய பின்னரே அது நடைமுறைக்கு வர முடியும். பதின்மூன்றாவது திருத்தத்தை வலுக்குறைப்புச் செய்யும் முடிவைத் தெரிவுக் குழு எடுத்தாலும் அதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை கிடைக்காது என்பது ஏற்கனவே நிரூபணமாகிவிட்டது.

தெரிவுக் குழுவின் நடவடிக்கைகள் ஆறு மாதத்துக்குள் முடிவடைய வேண்டும். சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத்தரும் என்று ஐந்து வருடங்களாகக் காலத்தை அவமே கழித்துக் கொண்டிருக்கும் கூட்டமைப்பு, தெரிவுக் குழுவில் ஆறு மாத காலம் ஏன் முயற்சித்துப் பார்க்கக் கூடாது? அதனால் தமிழ் மக்களுக்கு ஒரு இழப்பும் ஏற்படப் போவதில்லையே.




அளுத்கம சம்பவத்தை கண்டித்து நேற்று கிழக்கு மாகாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் ஹர்த்தால் மேற்கொள்ளப்பட்டது.

# சமாதான செயற்பாடுகள் மூலம் பிரச்சினைகளை தீர்க்க முடியும்

## ஜாதிக ஹெல உறுமய பொதுச் செயலாளர் நம்பிக்கை



சமாதானமான செயற்பாடுகள் மூலம் பிரச்சினைகளை தீர்க்க முடியும் என ஜாதிக ஹெல உறுமய பொதுச் செயலாளர் பட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

போலி வதந்திகளை கேட்டு குழப்பமடைய வேண்டாம் என நாம் பௌத்த மக்களிடம் கோருகின்றோம். சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

அது ஒரு கவலைக்குரிய சம்பவமாகும். எனவே சமாதானமாகவே பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லாமல் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது என்பதனையே ஜாதிக ஹெல உறுமய என்ற வகையில் நாம் நாட்டு மக்களுக்கு கூறுகின்றோம். சமாதானமான செயற்பாடுகள் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்பதில் நம்பிக்கை கொள்ளுங்கள்.

குறிப்பாக பௌத்த மக்கள் அதற்காகச் செயற்பட வேண்டும். அதனை விடுத்து, சட்டத்தை கையில் எடுத்துக் கொண்டு செயற்பட முயற்சிப்பதன் மூலம் பிரச்சினைகள் அதிகரிக்குமே தவிர, பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. பிரச்சினைகள் அதிகரிக்கும் நோக்கோடு செயறபடும் சக்திகளுக்கு ஏமாற வேணடாம். ஆகவே அமைதியான முறையில் செயற்படுமாறு நாம் முதலில் கேட்டுக்கொள்கின்றோம்.

சட்டம் அனைவருக்கும் சமமான முறையில் செயற்படுத்தப்படுவதில்லை என மக்கள் மத்தியில் ஏற்படுகின்ற நிலைப்பாடே இவற்றுக்கான காரணமாகும் என்றார்.

# மக்களை பாதிப்புக்குள்ளாக்கும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு

## ரணில் குற்றச்சாட்டு

(கொழும்பு)

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பின் ஊடாக மக்களை அரசாங்கம் மேலும் பாதிப்புக்கு உள்ளாக்குவதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது. எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். பண்டாரவளை பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த நிலையில் தேர்தலை இலக்காகக் கொண்டு அரசாங்கம் பல செயற்பாடுகளை முன்னெடுக்கும் எனவும் குறிப்பிட்டார்.

# எரிபொருள் மானியம் கோரி மீனவர்கள் போராட்டம்



அரசாங்கத்தினால் வழங்கப்படும் எரிபொருள் மானியம் நிறுததப்பட்டுள்ளதாக தெரிவித்து நீர்கொழும்பு முதல் கல்பிட்டி வரையில் மீனவர்கள் நேற்று போராட்டம் மேற்கொணடனர்.

கடலுக்குச் செல்லாமல் இவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில், சுமார் ஆயிரக்கணக்கான மீனவ படகுகள் தொழிலுக்குச் செல்லாமல் கடற்கரைப் பகுதியில் நங்கூரமிட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசாங்கத்தினால் வழங்கப்பட்டு வந்த எரிபொருள் மானியம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.

# வசித்த காலத்தை காரணம் காட்டி நிலத்திற்கு உரிமைகோர முடியாது

## விசேட சட்டம் கொண்டுவரத் தீர்மானம்

யுத்தத்தினால் இடம்பெயர்ந்த வட மாகாண மக்களின் நன்மைக்காக நாடாளுமன்றத்தில் ஆட்சியுரிமை விசேட ஏற்பாடுகள் சட்டத்தை கொண்டு வர அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்தச் சட்டத்தினால் மே 01,1983 தொடக்கம் மே 18, 2009 வரையான காலப்பகுதிக்குள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழ்ந்த 500,000 மக்கள் நன்மையடைவர் என காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் தெரிவித்துள்ளார். இந்தச் சட்ட மூலத்தை அமைச்சரவை அங்கீகரித்து விட்ட தெனவும் இது விரைவில் நாடாளுமன்றில் முன்வைக்கப்படும் எனவும் அவர் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

புதிய சட்டப்படி மற்றவர்களின் நிலத்தில் குடியமர்ந்தவர்கள் அங்கு வசித்த காலத்தை காரணம் காட்டி அந்த நிலத்திற்கு உரிமை கோர முடியாது. காணியின் உண்மையான உரிமையாளர்கள் 12 மாதங்களுக் குள் அவர்களது காணிகளுக்கான உரிமைகளைக் கோர முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# அளுத்கமவில் ஆரம்பிக்கப்பட்ட யுத்தம் பதுளை வரை பரவியுள்ளது

## மங்கள சமரவீர குற்றச்சாட்டு



அளுத்கமவில் ஆரம்பிக்கப்பட்ட இந்த இனவாத யுத்தம் பதுளை வரை பரவியுள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர குற்றம் சுமத்தியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுபலசேனா என்ற அமைப்பு அரச பாதுகாப்பின் கீழ், அளுத்கம மற்றும் பேருவளை நகரங்களில் மூன்று பேரைக் கொலை செய்து, பாடசாலைக்குச் செல்லும் சிறுவனின் காலை உடைத்து, கடைகள் மற்றும் வீடுகளை தீயிட்டுள்ளது.

பொதுபல சேனா அமைப்பு என்பது அரச புலனாய்வுப் பிரிவினரால் வழிநடாத்தப்படும் அமைப்பாகும். அந்த அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் என்பவர் பௌத்த பிக்குவா என்பது சந்தேகத்திற்குரியது.

அரச புலனாய்வுப் பிரிவினரால் வழிநடாத்தப்படும் நபர்களின் பெயர்ப் பட்டியல்களை எதிர்வரும் நாட்களில் ஊடகங்களுக்கு தரப்படும். புலனாய்வுப் பிரிவில் உள்ளவர்களும் பொதுபல சேனா அமைப்பில் இருக்கின்றனர்.

பதுளை நகரில் இதுவரை மூன்று கடைகள் தீயிடப்பட்டுள்ளன. தாக்குதல் நடாத்தியவர்களுக்கு அங்கு சென்ற பாதுகாப்புத் தரப்பினர் ஒத்துழைப்பு வழங்கினர். அவர்கள் அதனைத் தடுக்க முயற்சிக்கவில்லை. பொதுபல சேனா அமைப்பு நடாத்திய ஆர்ப்பாட்டத்தை போல் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமோ ஐக்கிய தேசியக்கட்சியோ நடாத்தியிருந்தால் அதனை அடக்கி ஒடுக்கியிருப்பார்கள் என்றார்.

# தேசிய சுதந்திர முன்னணியுடன் சுதந்திரக்கட்சி மத்தியகுழு பேச்சு

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுவினால் நியமிக்கப்பட்ட குழு மற்றும் தேசிய சுதந்திர முன்னணியின் உயர்மட்ட தலைவர்களுக்கு இடையேயான விசேட பேச்சு வார்த்தை ஒன்று இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றதாக தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகப் பேச்சாளர் மொஹம்மட் முசம்மில் தெரிவித்தார்.

12 அம்ச யோசனைத் திட்டத்தை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஏற்றுக் கொண்டுள்ளது.

கொள்கை அடிப்படையில் இந்த யோசனைத் திட்டத்தை ஏற்றுக் கொள்வதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு அறிவித்துள்ளது என தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகப் பேச்சாளர் முஹமட் முசம்மில் தெரிவித்துள்ளார்.

12 அம்சக் கோரிக்கைகள் தொடர்பில் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் தேசிய சுதந்திர முன்னணிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மத்திய செயற்குழுவிற்கும் இடையில் பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டது.

யோசனைத் திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு ஓர் செயற்றிட்டமொன்றை உருவாக்க இரு தரப்பினரும் இணங்கியதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த யோசனைத் திட்டங்கள் குறித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுடன் விரைவில் பேச்சுவார்த்தை நடாத்தப்படும்.

யோசனைத் திட்டம் குறித்த ஜனாதிபதியின் நேரடிக் கருத்துக்களை பெற்றுக்கொள்ளவே விரும்புகின்றோம் என அவர் தெரிவித்துள்ளார். மூன்று மணித்தியாலங்கள் இந்தச் சந்திப்பு நடைபெற்றுள்ளது.

# சைவ அபிவிருத்திக் கழகம் நடாத்தும் மாணவர்களுக்கான திருமுறை மனனப்போட்டி

(யாழ்ப்பாணம்)

வண்ணை - சாந்தையர்மடம் ஸ்ரீ கற்ப விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக்கழகம், சைவச்சிறார்களின் மனனம் செய்யும் ஆற்றலையும், சைவ சமய அறிவை விருத்தி செய்யும் பொருட்டு, மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசையை முன்னிட்டு திருமுறை மனனப்போட்டியை நடாத்தவுள்ளது.

இப்போட்டி தரம் 1, 2, பாலர் பிரிவிலும், தரம் 3, 4 கீழ் பிரிவிலும் நடத்தப்படவுள்ளது.

பாலர் பிரிவிற்கு "முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனை", "பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்" ஆகிய இரு திருமுறைகளும்,

கீழ் பிரிவிற்கு "பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப்", "வான் ஆகி! மண் ஆகி! வளி ஆகி! ஒளி ஆகி! ஆகிய இரு திருமுறைகளும் மனனம் செய்யப்படல் வேண்டும்.

திருமுறை மனனப்போட்டி எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதற்கான விண்ணப்பமுடிவுத்திகதி இம்மாதம் 21 ஆம் திகதியாகும்.

பரிசில்கள் யூலை 2 ஆம் திகதி மாணிக்கவாசகர் சுவாமிகள் குரு பூசை அன்று வழங்கப்படும். மேற்படி திருமுறை மனனப் போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் "சைவசமய அபிவிருத்திக்கழக அறிவகம் இல.82 நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என சைவசமய அபிவிருத்திக் கழக பரீட்சைச்செயலரும், சமய பிரசாரகருமான சு.சிறிகாந்தன் அறிவித்துள்ளார்.

## அபராதம் விதிப்பு

நெல்லியடிப் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி மோட்டார் சைக்கிளில் சென்ற நபருக்கு 2 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

அனுமதி பத்திரமின்றி மோட்டார் சைக்கிளில் சென்ற குறித்த நபரை பொலிஸார் கைது செய்து குறித்த தொகையை அபராதமாக செலுத்துமாறு உத்தரவிட்டனர். இதனையடுத்து குறித்த நபர் அபராதத்தினை செலுத்தியதாக தெரிவிக்கப்படுகிறது. (18)


# பனைநின்றான் முத்துமாரியம்மனுக்கு வருடாந்த பொங்கல்விழா

(வவுனியா)

வவுனியா நெடுங்கேணி பனைநின்றான் முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த பொங்கல் விழா வெகு சிறப்பாக இடம்பெற்றுள்ளது.

நெடுங்கேணி பனைநின்றான் முத்துமாரியம்மனுக்கு பரிவார மூர்த்திகளுக்கும் விசேடஅபிஷேகமும் அலங்கார பூஜைகளும் இடம்பெற்று மடப்பண்டம் எடுத்துவரப்பட்டு பொங்கல் விழா நடைபெற்றது.

இவ் ஆலயம் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆலயமாகவுள்ளது. இந்த ஆலயத்தில் இருக்கும் அம்மன் ஒட்டுசுட்டான் பாவட்டி மலையில் இருந்து சிவபெருமானும் பிள்ளையாரும் அம்மனுமாக வந்து ஒட்டுசுட்டானில் தான்தோன்றீஸ்வரனாக அமர்ந்ததும் சம்மலங்குளத்தில் தான்தோன்றி விநாயகராகவும். பனைநின்றானில் அம்மாள் அமர்ந்ததாகவும் வரலாற்றுக் கதை விளக்குகின்றது. இப்பொங்கல் விழாவிற்கு அடியார்களினால் நேர்த்தி கடன்களாக பாற்செம்பு, தீச்சட்டி, சேடில் காவடி, காவடி போன்ற நேர்த்திக்கடன்களை அடியார்களினால் மேற்கொள்ளப்பட்டு அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



யாழ்.பல்கலைக்கழக இயற்கை விஞ்ஞானப் பிரிவில் அமைந்துள்ள தாவரவியல் துறையின் ஆய்வுகூடம், தூறல் முறை நீர்ப்பாய்ச்சல், தாவரவியல் பூங்கா திறப்புவிழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வைத்திய கலாநிதி ஆர்.ஞானேஸ்வரன் மங்கள விளக்கேற்றுவதையும், வைத்திய கலாநிதி மகேசன் தாவரவியல் பூங்காவை திறந்துவைப்பதையும், யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் எஸ்.ஸ்ரீசற்குணராசா ஆய்வுகூட மண்டபத்தொகுதியில் மரக்கன்று நாட்டுவதையும் காணலாம்.

# பேச்சுப்போட்டியில் முதலிடம்

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக்கல்லூரி விஞ்ஞான தினத்தை முன்னிட்டு யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையே நடாத்திய பேச்சுப்போட்டியில் மேற்பிரிவில் மானிப்பாய் இந்துக்கல்லூரியில் தரம் 11 இல் கல்வி பயிலும் மாணவன் செல்வன் மோகன்ராஜ் - கரிகரன் முதல் இடத்தினை பெற்றுக்கொண்டுள்ளார்.

இலங்கையில் இளைஞர்களிடையே முகப்புத்தக பவனையால் ஏற்படும் நன்மைகள் தீமைகள் எனும் தலைப்பில் இடம்பெற்ற மேற்படி போட்டியில் சிறப்பாக பேச்சினை வெளிப்படுத்தி முதல் இடத்தினை பெற்றுக்கொண்ட இவர் கடந்த வருடம் நடத்தப்பட்ட போட்டியிலும் முதல் இடத்தினை பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். (63)

ஜனரஞ்சகத் தன்மையை முதன்மைப் படுத்தி பக்கம் சாராமல் துணிச்சலுடன் தரமான அம்சங்களை அள்ளிவரும் வாரமலர்.

வாரமலர்
தினமுரசு

நாளைய தினமுரசு வாரமலரில்...
19.06.2014




- வெட்கித் தலைகுனியுமா வல்லரசுகள்?
- தமிழகத்தில் விடுதலை வேண்டும்!
- ஈராக்கில் மீண்டும் சிவில் யுத்தம்
- மட்டக்களப்பில் சோபை இழந்த ஆணைக்குழுவின் விசாரணை
- தலைமுறைக் கதை

உங்கள் முகவர்களிடம் கேட்டு வாங்கிப் படியுங்கள்!

சூடு - சுவை - சுவாரசியம் - அதுதான் தினமுரசு

# உலகக் கிண்ணக் கால்பந்தாட்டத் திருவிழா

## போர்த்துக்கல்லுக்கு அதிர்ச்சி அளித்த ஜேர்மனி




(சால்வேடர்)

முல்லரின் அதிரடியான தாக்குதல் ஆட்டத்தின் மூலம் ஜேர்மனி அணி முதல் வெற்றியைப் பதிவாக்கியுள்ளது.

20ஆவது உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டி பிரேசில் நாட்டில் நடைபெற்று வருகின்றது.இதில் ஜி பிரிவுக்கான ஆட்டத்தில் போர்த்துக்கல் ஜேர்மனி அணிகள் இலங்கை நேரப்படி நேற்று முன்தினம் இரவு 9.30 மணிக்கு மோதின. ஆரம்பம் முதல் விறுவிறுப்பாக ஆரம்பமாகிய இவ் ஆட்டத்தில் மூன்று முறை உலக சம்பியன் பட்டம் வென்ற ஜேர்மானிய வீரர்கள் கிரிஸ்ட்டியானோ ரொனால்டோ தலைமையிலான போர்த்துக்கல் அணியை தங்களது அதிரடி ஆட்டத்தால் திணறடித்தனர்.

போர்த்துக்கல் அணியை கலங்கடிக்கும் விதமாக ஜேர்மனி வீரர் தோமஸ் முல்லர் ஆட்டம் தொடங்கிய எட்டாவது நிமிடத்தில் முதல் கோலை அடித்து ஜேர்மனியின் கணக்கை ஆரம்பித்து வைத்தார். அடுத்தடுத்து 3 ஹட்ரிக் கோல்களை அடித்து அசத்திய அவர் அணியின் வெற்றிக்கு பெரும் துணை புரிந்தார். இறுதியில் ஜேர்மனி அணி 4-0 என்ற கோல் கணக்கில் போர்த்துகல் அணியை வீழ்த்தியது. இப்போட்டியின் ஆட்டநாயகனாக முல்லர் தெரிவு செய்யப்பட்டார்.



## அசத்தியது அமெரிக்கா

கானா அணிக்கெதிரான போட்டியில் அமெரிக்க அணி அபார வெற்றிபெற்றது. 20ஆவது உலகக் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடர் பிரேசில் நாட்டின் நடைபெற்று வருகின்றது. இதில் ஜி பிரிவுக்கான ஆட்டம் இலங்கை நேரப்படி நேற்று அதிகாலை 3.30 மணிக்கு நடைபெற்றது. இதில் அமெரிக்க, கானா அணிகள் மோதின.

ஆட்டம் ஆரம்பமாகி முப்பதாவது நொடியில் அமெரிக்கா அணி தனது முதல் கோலை பதிவு செய்தது.

இடைவேளை நேரமான 45ஆவது நிமிடம் வரை வலையை நோக்கி பந்தை விரட்டும் முயற்சியில் இரு அணிகளும் மும்முரமாக ஈடுபட்டும் கோல் எண்ணிக்கை உயரவில்லை. இடைவேளைக்கு பின்னர் தொடர்ந்த ஆட்டத்தின் 82ஆவது நிமிடத்தில் தனது முதல் கோலை கானா பதிவு செய்தது. இதன் பின்னர் அமெரிக்க அணி எழுச்சி பெற்றது. அடுத்த மூன்றாவது நிமிடத்தில் அமெரிக்கா தனது கோல் எண்ணிக்கையை இரண்டாக உயர்த்தியது. 90 நிமிடங்கள் கடந்த பின்னர் அளிக்கப்பட்ட 5 நிமிட நேரத்தில் கோல் கணக்கை சமன் செய்ய கானாவும், உயர்த்திக் கொள்ள அமெரிக்காவும் கடுமையாக போராடின.

இறுதியில் அமெரிக்க அணி 2-1 என்ற கோல் கணக்கில் கானா அணியை வீழ்த்தி முதல் வெற்றியைப் பதிவு செய்தது.

## ஈரான்-நைஜீரியா ஆட்டம் சமநிலை

ஈரான், நைஜீரியா அணிகள் மோதிய உலக கோப்பை கால்பந்து தொடரின் லீக் போட்டி சமநிலையில் நிறைவடைந்தது. பிரேசிலில் 20ஆவது உலக கோப்பை கால்பந்து தொடர் நடைபெற்று வருகின்றது. இதில் எப் பிரிவு லீக் போட்டியில் ஈரான், நைஜீரியா அணிகள் இலங்கை நேரப்படி நேற்று நள்ளிரவு 12.30 மணிக்கு மோதின. போட்டியின் ஆரம்பமாகி முதல் நைஜீரியா அணி வீரர்கள் ஆதிக்கம் செலுத்திய போதும் முதல் பாதியில் கோல் எதுவும் அடிக்கமுடியவில்லை. இதே போல் ஈரான் வீரர்களின் கோல் முயற்சியும் பலன் அளிக்கவில்லை. இதையடுத்து முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளாலும் கோல் எதனையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. விறுவிறுப்பாக ஆரம்பமாகிய இரண்டாவது பாதியில் இரு அணி வீரர்களுக்கு மத்தியில் கோல் அடிக்க கடும் போட்டி நிலவியது. கிடைத்த வாய்ப்புக்களை இரு அணி வீரர்களும் கோட்டைவிட கடைசிவரை கோல் அடிக்கும் போராட்டம் தோல்வியில் முடிந்தது. இதையடுத்து போட்டி 0–0 என சமநிலையில் நிறைவுற்றது. கடந்த 12ஆம் திகதி ஆரம்பமாகிய நடப்பாண்டுக்கான உலகக் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரில் சமநிலையை முதல் எட்டிய ஆட்டமாக இது அமைந்தது. இரு அணிகளுக்கும் தலா ஒவ்வொரு புள்ளிகள் வழங்கப்பட்டன.

## கால்பந்துத் துளிகள்...

* கானா அணிக்கு எதிராக அமெரிக்க வீரர் கிளைண்ட் டெம்சே ஆட்டத்தின் முதல் நிமிடத்தில் கோல் அடித்தார். உலக கோப்பைக் கால்பந்து போட்டித் தொடரில் இது 5ஆவது வேகமான கோலாகப் பதிவாகியுள்ளது. 12 வினாடியில் கோல் அடித்ததுதான் உலகின் வேகமான கோலாகும்.

* போர்த்துக்கல் அணிக்கு எதிரான ஆட்டம், ஜேர்மனியின் நூறாவது உலகக் கோப்பை ஆட்டமாகும். இதுவரை விளையாடியுள்ள 99ஆட்டங்களில் 60இல் வெற்றியும், 19இல் சமநிலையும், 20இல் தோல்வியையும் அந்த அணி தழுவியுள்ளது.

* 1950ஆம் ஆண்டு முதல் பிரிவு வகையில் ஆரம்பமாகிய உலகக் கோப்பைக் கால்பந்துத் தொடரின் முதல் ஆட்டம் இதுவரை சமநிலையானதில்லை.

* தென் அமெரிக்காவை (ஈகுவேடார்) சேர்ந்த ஓர் அணியை உலக கோப்பையில் முதன் முதலாக சுவிஸ்சர்லாந்து தற்போதுதான் வெற்றிபெற்றுள்ளது.


* 1998ஆம் ஆண்டில் உலக கோப்பையை வென்ற பின்னர், நடைபெற்ற 3 உலகக் கோப்பை போட்டியிலும் முதல் ஆட்டத்தில் பிரான்ஸ் அணியால் கோல் அடிக்க முடியவில்லை. இந்த மோசமான சாதனையை ஹோண்ட்ரொஸூக்கு எதிரான ஆட்டத்தில் தற்போது அந்த அணி வீரர்கள் மாற்றினர்.

* முழங்கால் மூட்டில் காயம் அடைந்துள்ள கமரூன் வீரர் சாமுவேல் எடோ கடந்த 2 நாட்களாக பயிற்சி மேற்கொள்ளாமல் ஓய்வெடுத்து வருகிறார். குரோஷிய அணிக்கு எதிராக இன்று நடைபெறவுள்ள ஆட்டத்துக்கு முன்பாக அவர் முழு உடல்தகுதியுடன் தயாராகிவிடுவார் என பயிற்சியாளர் வோல்கர் பிங்க்கே நம்பிக்கை தெரிவித்துள்ளர்.

* பிரான்ஸ், ஹோண்ட்ரொஸ் அணிகளிடையே நடந்த லீக் ஆட்டம் ஆரம்பமாவதற்கு முன், இரு நாடுகளின் தேசிய கீதம் இசைக்கப்படாதது சர்ச்சையை கிளப்பியுள்ளது.

* பிரிக்ஸ் கூட்டமைப்பில் பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய நாடுகள் இடம்பெற்றுள்ளன. இந்நிலையில், பிரிக்ஸ் மாநாடு பிரேசிலின் போர்டலிசா நகரில் அடுத்த மாதம் 15ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இதற்கு முன்பாக, யூலை 13ஆம் திகதி உலக கோப்பை கால்பந்து இறுதிப் போட்டி ரியோ டி ஜெனிரோ நகரில் நடைபெறவுள்ளது. இந்தப் போட்டியை நேரில் காண பிரிக்ஸ் நாடுகளின் தலைவர்களுக்கு பிரேசில் அழைப்பு விடுத்துள்ளது.

* ஆர்ஜென்ரீன அணியின் ஆட்டத்தில் இன்றும் கண்டிப்பாக முன்னேற்றம் தேவை. மெஸ்சியின் ஆட்டம் அபாரமாக இருந்தது. அவர் தொடர்ந்து கோல்களை அடிப்பது மிகவும் அவசியமாகும். இதே போல அகீரோ, கோன் சாலா ஆகியோரும் நன்றாக ஆட வேண்டும். பின்களத்தில் ஆர்ஜென்ரீனா பலவீனமாக இருக்கிறது. அதை சரி செய்ய வேண்டும் என ஆர்ஜென்ரீன அணியின் முன்னாள் கப்டன் மரடோனா தெரிவித்துள்ளார்.



## துல்லியமான கணிப்பு

(டுபாய்)

தென்னாபிரிக்காவில் கடந்த 2010இல் நடைபெற்ற உலக கோப்பைக் கால்பந்துத் தொடரின் போது, போட்டிகளின் முடிவுகளை ஓக்டோபஸ் துல்லியமாக கணித்தது.

இம்முறை பிரேசிலில் நடைபெறும் உலக கோப்பை கால்பந்துத் தொடரில், போட்டிகளின் முடிவை முன்கூட்டியே கணிக்க, கடல் ஆமை, கங்காரு, சீனாவை சேர்ந்த கரடி, நெல்லி என்ற யானை, நாய் உள்ளிட்டவை பயன்படுத்தப்பட்டன. இந்த வரிசையில் டுபாயில் உள்ள ஷாஹீன் என்ற ஒட்டகமும் சேர்ந்துள்ளது. இது, நெதர்லாந்துக்கு எதிராக ஸ்பெயின் தோற்கும் என்றும், இத்தாலி அணி இங்கிலாந்தை வீழ்த்தும் என்றும் மிகச் சரியாக கணித்துள்ளது. பாலைவன மணலில் அமர்ந்திருக்கும் இந்த ஒட்டகத்தின் முன், போட்டியில் பங்கேற்கும் அணிகளின் தேசிய கொடி இடம் பெற்றுள்ள இரண்டு பந்துகள் வைக்கப்படும். தனது பற்களை கொண்டு வெற்றி பெறும் அணியை தேர்வு செய்யுமாம்.

## நெகிழச் செய்த ஜப்பானியர்கள்

பிரேசிலில் நடைபெறும் உலககோப்பைப் போட்டியில் ஜப்பான் அணி தோல்வி தழுவினாலும் இரசிகர்கள் அதற்காக வருந்தாமல் மைதானத்தின் இருக்கைப் பகுதியில் போடப்பட்ட குப்பைகளை அகற்றியுள்ளனர்.

ஐவரி கோஸ்ட் அணிக்கு எதிரான போட்டியில் ஜப்பான் 90 நிமிடங்கள் வரை 1-0 முன்னிலை வகித்தது. ஆனால் கடைசி வினாடிகளில் 2 கோல்களை ஐவரி கோஸ்ட் அணி அடித்து 3 புள்ளிகளைத் தட்டிச் சென்றது.

இந்த ஆட்டத்தைக் காண சுமார் 100 ஜப்பானிய இரசிகர்கள் வந்திருந்தனர். அவர்கள் தங்கள் அணியை ஊக்கப்படுத்தியதோடு, தோற்றாலும் அதைப் பற்றிக் கவலைப்படாமல் மைதானத்தின் இருக்கைக்கு அருகே போடப்பட்ட குப்பைகளை அகற்றியது பலருக்கும் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கடைசி விசில் ஊதப்பட்டு ஆட்டம் நிறைவடைந்தவுடன் போட்ட குப்பைகளைக் கண்டு கொள்ளாமல் அப்படியே விட்டுச் செல்லும் பொறுப்பில்லாத் தனத்தையே நாம் இதுவரை கண்டிருப்போம். மைதானங்கள் என்று இல்லை, எங்குமே நமக்கு குப்பைகள் பற்றிய சுற்றுச்சூழல் தன்னுணர்வு இருப்பதில்லை. மாறாக சுற்றுச்சூழல் பற்றிய தன்னுணர்வுடன் ஜப்பானிய இரசிகர்கள் குப்பைகளை அகற்றியது அவர்களது தேசத்திற்குப் பெருமையை ஏற்படுத்திக் கொடுத்த ஒரு நிகழ்வாகியுள்ளது.

ஜப்பானியர்களின் இந்தச் செயற்பாட்டை அறிந்து கொண்ட பிரேசில் கால்பந்து சம்மேளனம் பாராட்டுத் தெரிவித்துள்ளது. இது வொரு முன்மாதிரியான நடவடிக்கை என்றும், ஏனையவர்களும் ஜப்பானியர்களிடமிருந்து கற்றுக்கொள்ளவேண்டும் என்றும் பிரேசில் கால்பந்து சம்மேளனம் தெரிவித்துள்ளது.

## இன்றைய ஆட்டம்




**அவுஸ்ரேலியா எதிர் நெதர்லாந்து**
**இலங்கை நேரம் இரவு 9.30**

**ஸ்பெயின் எதிர் சிலி**
**இலங்கை நள்ளிரவு நேரம் 12.30**


**கமரூன் எதிர் குரோஷியா**
**இலங்கை நேரம் அதிகாலை 3.30**




வடக்கு மாகாணப் பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டத் தொடரில் இரண்டாமிடத்தைப் பிடித்துக் கொண்ட வயாவிளான் மத்திய மகாவித்தியாலய அணிக்கு பாடசாலைச் சமூகத்தினால் கடந்த 13ஆம் திகதி கௌரவிப்பு நிகழ்வு நடாத்தப்பட்டது. இதில் வீரர்கள் அழைத்து வரப்படுவதையும், விருந்தினர்களுடன் கௌரவிக்கப்பட்ட வீரர்கள் இருப்பதையும் காலணாம். (48)

## உலகை குடும்பமாக்கும் கால்பந்து

### மத்தியஸ்தர் பிரிவின் பணிப்பாளர்



(கிளிநொச்சி)

கால்பந்து விளையாட்டு என்பது எல்லா வகையான பாகுபாடுகளையும் கடந்து உலகை ஒரு குடும்பமாக மாற்றும் ஆற்றல் உடையது. இது இன, மத, மொழி, நிற வேறுபாடுகளைக் கடந்து மனிதர்களை இணைக்கும் ஆற்றல் மிக்க ஊடகமாகும் என இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் மத்தியஸ்தர் பிரிவின் பணிப்பாளர் எ.எம் யாப்பா தெரிவித்துள்ளார்.


கிளிநொச்சியில் கடந்த வாரம் நடைபெற்ற கால்பந்து மத்தியஸ்தர், பயிற்றுநர்களுக்கான மூன்று நாள் கால்பந்துப் பயிற்சி முகாமிற்குத் தலைமை தாங்கி கருத்துத் தெரிவிக்கையிலேயே யாப்பா மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, ஆகிய மாவட்டங்களில் கால்பந்தாட்ட வீரர்கள், மத்தியஸ்தர்கள் அலுவலர்கள் எனப் பலரும் கால்பந்தாட்டக் குடும்பத்தில் எந்தவித தடைகளுமன்றி இணைந்துள்ளனர். இதனடிப்படையிலேயே கிளிநொச்சியில் மத்தியஸ்தர், பயிற்றுநருக் காக பயிற்சி நெறியை எமது கால்பந்தாட்ட சம்மேளனத் தலைவர் றெட்றிக்கோ ஏற்பாடு செய்துள்ளார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச்சபை மண்டபம் மத்திய கல்லூரி மைதானம் ஆகியவற்றில் மூன்று நாட்கள் வதிவிட செயலமர்வாக நடைபெற்ற இப்பயிற்சி நெறியில், கிளிநொச்சி, வவுனியா, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வடமராட்சி லீக்குகளின் மத்தியஸ்தர் பயிற்றுனர்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (29)

## நியூசிலாந்து முதல் இனிங்ஸ் 221

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து அணி 221 ஓட்டங்களுக்குள் சுருண்டது. மேற்கிந்தியத்தீவுகள், நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது மேற்கிந்தியத்தீவில் நடைபெற்று வருகின்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதல் இனிங்ஸிற்காக ஆடிய நியூசிலாந்து அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 221 ஓட்டங்களைப் பெற்றது. இதில் லதன் 82, வில்லியம்ஸன் 42, ரெய்லர் 45 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பென் மூன்று, ஜே. ஈ. ரெய்லர் நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி முதல் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை ஒரு விக்கெட்டை இழந்து 6 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

## மாவட்ட அணிகளுக்கிடையிலான மாபெரும் கால்பந்து கிண்ணம் வென்றது கிளிநொச்சி உதயதாரகை



(பூநகரி)

பூநகரி அண்ணா விளையாட்டுக்கழகம் நடாத்தி மாவட்ட அணிகளுக்கிடையிலான மாபெரும் கால்பந்தாட்டத் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை கிளிநொச்சி உதயதாரகை அணி கைப்பற்றிக் கொண்டது.

கிளிநொச்சி கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையில் பூநகரி அண்ணா விளையாட்டு கழகம் நடாத்திய விலகல் முறையிலான கால்பந்தாட்ட போட்டியின் இறுதி ஆட்டம் கடந்த 15ஆம் திகதி பூநகரியில் நடைபெற்றது.

இதில் கிளிநொச்சி உதயதாரகை அணியும், முழங்காவில் விநாயகர் அணியும் மோதின. இரு அணிகளுமே மாவட்டத்தில் முதன்மை அணி என்பதால் போட்டி இறுதி வரை விறுவிறுப்பாக நடைபெறும் என இரசிகர்களால் எதிர்பார்க்கப்பட்டது. இதற்கேற்ப இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் முட்டி மோதிக் கொண்டன. சிறப்பான முறையில் பந்துப் பரிமாற்றத்தைச் செய்த கிளிநொச்சி உதயதாரகை அணி எவரும் எதிர்பாராத வேளையில் கோல் ஒன்றைப் பெற்றுக்கொண்டு முன்னிலை வகித்தது. இதற்குப் பதிலடி கொடுக்கும் முனைப்புடன் முழங்காவில் விநாயகர் அணி செயற்பட்டபோதும், உதயதாரகை அணியின் பிற்கள வீரர்களின் சிறப்பான தடுப்பணையைத் தாண்டி உள்நுழைய முடியவில்லை. இறுதியில் உதயதாரகை அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

இப்போட்டி நிகழ்வின் சிறப்பு அதிதியாக ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், பூநகரி பிரதேச இராணுவ கட்டளை அதிகாரி ஆரியசிங்க, பூநகரி பிரதேச சபையின் உறுப்பினர் இராசலிங்கம், கரைச்சி பிரதேச சபையின் உறுப்பினர் மனோகரன், கிளிநொச்சி கால்பந்தாட்ட லீக்கின் செயலாளர் நிமலதாஸ், கிளிநொச்சி கால்பந்தாட்ட லீக்கின் உப தலைவர் அன்ரன் அன்பழகன், அண்ணா விளையாட்டுக்கழகத்தின் தலைவர் செயலாளர் மற்றும் கழகங்களின் பிரதிநிதிகள் விளையாட்டு வீரர்கள் இரசிகர்கள் எனப் பலர் கலந்துகொர்ணடனர்.

இதேவேளை, இப்போட்டி நிகழ்வில் உரையாற்றிய கிளிநொச்சி கால்பந்தாட்ட லீக்கின் உப தலைவர் அன்ரன் அன்பழகன், விளையாட்டின் ஊடாக சிறந்த கட்டுக்கோப்பான இளம் சமூகத்தை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கையில் எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் விளையாட்டுத்துறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து செயற்பட்டு வருகின்றார். அவர் தன்னுடைய வருடாந்த பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்தும் கூட அதிகளவு நிதியினை இளம் சிறுவர் மற்றும் இளம் சமூகத்தின் மேம்பாட்டிற்கே ஒதுக்கீடு செய்து வருகின்றார். எப்பொழுதும் மக்களின் விருப்பு வெறுப்புகளுக்கு மாறாக எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர் தன்னுடைய நடவடிக்கைகளை மேற்கொள்வது கிடையாது.

குறிப்பாக பூநகரியின் தேவைகளை நிறைவு செய்வதில் அதிக அக்கறையோடு செயற்படுகின்றவர். இங்குள்ள இரண்டு வரலாற்று பழமை வாய்ந்த இடங்களை புனரமைத்து பாதுகாக்க கலாசார அமைச்சு மற்றும் நெதர்லாந்து தூதுவர் அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றார். இவ்வாறான ஒருவர் இந்தப்போட்டி நிகழ்வுக்கு சிறப்பு அதிதியாக கலந்துகொண்டமை மகிழ்சியான விடயம். இதன் மூலம் பூநகரியின் எதிர்கால விளையாட்டுத்துறையும் இந்த மைதானமும் ஒரு நல்ல மாற்றத்திற்கு உள்ளாகும் என்ற நம்பிக்கை எனக்குள்ளது எனத் தெரிவித்தார். (29)

## முதல் டெஸ்ட் சமநிலை

(லண்டன்)

இலங்கை, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்தது.

இலங்கை இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டி நேற்று முன்தினம் லண்டன் லோட்ஸில் நிறைவடைந்தது.

இதில் இங்கிலாந்து முதல் இனிங்ஸிற்காக ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 575 ஓட்டங்களையும், இலங்கை அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 453 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. 122 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய இங்கிலாந்து அணி எட்டு விக்கெட்டுக்களை இழந்து 267 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

391 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இறுதி நாள் ஆட்டத்தைத் தொடர்ந்த இலங்கை அணி ஆரம்பத்தில் சிறப்பாக ஆடியது. பின்னர் அண்டர்சன், ஸ்ரூவெர்ட் புறொட் ஆகியோரின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறியதுடன் ளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொ தது. இறுதியில் ஐந்தாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை இலங்கை அணி ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 201 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சங்கக்கார 61, ஜே.கே. சில்வா 57 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அண்டர்சன் நான்கு, ஸ்ரூவெர்ட் புறொட் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இதன் மூலம் இப்போட்டி வெற்றிதோல்வியின்றி நிறைவடைந்தது. போட்டியின் ஆட்டநாயகனாக ரூத் தெரிவு செய்யப்பட்டார்.


## ஒரு விக்கெட்டால் மானிப்பாய் இந்து வெற்றி

துசிந்தன், திவாகர் ஆகியோரின் சிறப்பான செயற்பாட்டின் மூலம் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி ஒரு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் பிரிவு மூன்றின் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான ஒரு நாள் போட்டி தற்போது நடாத்தப்பட்டு வருகின்றது. இதில் மானிப்பாய் இந்துக் கல்லூரி மற்றும் சென். ஜோண்ஸ் கல்லூரி அணிகளுக்கிடையிலான ஒரு நாள் போட்டி கடந்த வாரம் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய சென். ஜோண்ஸ் கல்லூரி அணி 35 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 183 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கபிசாந் 57, ரொஹான் 18 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் துசிந்தன் நான்கு, பிரிசோத் மூன்று, கிதுஷன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 184 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 47.1 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் திவாகர் 55, பிரிசோத் 18, ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில லோஜீதரன் மூன்று, ஜெசூரன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். (48)

# அதிகரித்து வருகின்ற தற்கொலை...

ர.நிலக்சன்
மெய்யியல் துறை
யாழ். பல்கலைக்கழகம்



பத்திரிகைகளைப் புரட்டிப் பார்க்கின்ற போதும் சரி இணையத் தளங்களைப் பார்க்கின்ற போதும் சரி தற்கொலைச் சம்பவங்கள் மலிந்து கிடப்பதைக் காணமுடிகின்றது.

"தற்கொலை நிகழ்வுகள் சமூகத்தின் ஆரோக்கியமின்மையை எடுத்துக் காட்டுவதாய் அமைகிறது. சமூகம் அவர்களை நல்ல முறையில் வழிநடத்தவில்லை என்பதினாலும் பல மனிதர்கள் விரக்தி நிலையை அடைகின்றனர்" என "மெனியர்" என்பவர் குறிப்பிட்டுள்ளார்.

துர்க்கையாம் என்பவருடைய கருத்துப்படி தற்கொலை என்பது சமூகப்பிரச்சினை ஆகும். இவர் சமூகக் கூட்டு வாழ்வில் இருந்து அந்நியப்படுத்தல், எதிர்க்கணிய சமூக அழுத்தங்களிற்கு உட்படுதல் போன்றவற்றையே தற்கொலைக்கான காரணங்களாக இனம் கண்டார்.

உலகளாவிய ரீதியில் அதிகரித்துவரும் தற்கொலை எண்ணக்கருவிற்கு பல்வேறுபட்ட காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன. பரீட்சையில் தோல்வி, கூடும் துக்கம், கடன் பிரச்சினைகள், பணப்பிரச்சினைகள், வரதட்சணைக் கொடுமை, தனிமை, வறுமை, திருமண உறவில் உள்ள சிக்கல்கள், பாலியல் காரணிகள், காதல் தோல்வி என காரணங்களை அடுக்கிக் கொண்டே செல்லலாம்.

தற்கொலைக்குத் துணிபவர் இவ்வாறான மேற்குறிப்பிட்ட பிரச்சினைகளில் இருந்து தப்பித்துக்கொள்வதற்கான உடனடி முடிவு தனது உயிரை மாய்த்தல் தான் என எண்ணுகின்றார். ஆனால், இன்பமும் துன்பமும் கலந்ததுதான் வாழ்க்கை எங்களால் முடியாதது ஒன்றுமில்லை இவை எல்லாம் குறுகிய காலப் பிரச்சினை என எண்ணி அதனை தீர்ப்பதற்கான வழிமுறையை இனங்காண முயற்சிக்க வேண்டுமே தவிர தற்கொலை இதற்கான சிறந்த முடிவாக அமைய மாட்டாது.

தற்கொலையானது திடீரென எழுகின்ற உணர்ச்சியலைகளின் கொந்தளிப்பாகவும் இருக்கலாம். முன்கூட்டியே திட்டமிடப்பட்ட ஒன்றாகவும் அமையலாம்.

இன்று உலகளாவிய ரீதியில் இணையத்தள வசதியில் முகநூல் (Face book) மூலம் தற்கொலை செய்வோர் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. முகந்தெரியாத நபரை விரும்புதல், புகைப்படங்களைப் பகிர்ந்து கொள்ளல் போன்றவற்றால் ஏற்படும் பாரதூரமான விளைவால் தற்கொலை செய்யும் அளவிற்கு தள்ளி விடுகின்றது.

தற்கொலை செய்ய முடிவெடுப்பவர் தன்னை மட்டும் மாய்த்துக் கொள்ளவில்லை தன்னை சார்ந்திருக்கும் குடும்பத்தையும் சேர்த்தே படுகுழியில் தள்ளி விடுகிறார். தற்கொலை பல்வேறு சமூகப்பிரச்சினைகளையும், ஏற்படுத்துகிறது என மன்நல நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

இன்று உலகளாவிய ரீதியில் 40 விநாடிகளுக்கு ஒரு முறை என்ற ரீதியில் 3000 நபர்கள் தினமும் தற்கொலை செய்து கொள்கின்றனர். பெண்களை விட இரண்டு மடங்கு ஆண்கள். அதிலும் குறிப்பாக 15 வயதிற்கும் 24 வயதிற்கும் இடைப்பட்டவர்களே அதிகம் தற்கொலை செய்து கொள்கிறார்கள் என உலக சுகாதார நிறுவனம் குறிப்பிடுகின்றது.

எமது நாட்டைப் பொறுத்த வரை 2012, 2013 இல் பெண்களை விட ஆண்களே அதிகமாக தற்கொலையை தேடியவர்களாக உள்ளனர். இவ்விரு ஆண்டுகளில் 6987 தற்கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றில் 80 வீதமானோர் ஆண்கள். 75 வீதமான தற்கொலைகள் கிராமப்புறங்களிலேயே இடம்பெறுகின்றன.

தற்கொலை மன நிலையில் உள்ளவர்கள் பற்றி ஆதர் கிரகமின் குறிப்பிடுகையில்,

01. தற்கொலை எண்ணத்தில் இருப்பவர்களிடம் அமைதியின்மை அல்லது மன உளைச்சல் அதிகம் இருக்கும்.
02. மனச் சோர்வும் நித்திரையின்மையும், தீவிர யோசனையும் இருக்கும்.
03. முன்பு தற்கொலை முயற்சித்திருத்தல்.
04. சிலவகை மருந்து மாத்திரைகள் பற்றி விசாரித்தல்.
05. கடுமையான நோயால் பீடிக்கப்பட்டிருத்தல்.
06. வாழ்க்கையில் பிடிப்பற்று தனித்திருத்தல்.
07. மதுவுக்கு அல்லது போதைப் பொருளுக்கு அடிமையாயிருத்தல்.

இவ்வாறு தற்கொலை எண்ணத்திலிருப்பவர்களின் எண்ணங்களும் வெளிப்பாடுகளும் புதிர் போன்றும் பதற்றமும் கவலையும், உணர்ச்சியும் நிறைந்ததாகவும் இருக்கும் சில சமயங்களில் எத்தகைய உணர்ச்சி வெளிப்பாட்டையும் காட்டாதவர்களாக இருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

2003ஆம் ஆண்டு தற்கொலை தடுப்புக்கான சர்வதேச அமைப்பு (IASP) மற்றும் உலக சுகாதார அமைப்பினால் (WHG) செப்ரெம்பர் 10ஆம் திகதியை "உலக தற்கொலை தடுப்பு தினம்" என பிரகடனப்படுத்தப்பட்டது.

எந்த ஒரு பிரச்சினைக்கும் தற்கொலை ஒரு தீர்வாக அமையமாட்டாது. வாழ்க்கை நாம் வாழ்வதற்கே தவிர நம்மை அழிப்பதற்கல்ல. ஆகையால் நீங்கள் உங்களுக்கென நாலுபேரை அதாவது நண்பர்கள் ஆனாலும் சரி உறவினரானாலும் சரி வைத்துக் கொள்ளுங்கள் என்ன பிரச்சினையாக இருப்பினும் அவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். இவ்வாறு பகிர்ந்து கொள்வதன் மூலம் தனிமையை போக்குவதோடு மன உளைச்சலையும் ஒழித்துவிடலாம். "விதியை மதியால் வெல்லலாம்" என்பது போல் தன்னம்பிக்கையால் தற்கொலையை வென்றுவிடலாம்.

# 55 வருட அரசியல் வாழ்வில் நான் எதிர்பார்த்த சமூகத்தை உருவாக்க முடியவில்லை என்பதால் ஒதுங்குகின்றேன்...




1952இல் ஆரம்பித்த அரசியல் வாழ்வு, 1959-ல் தீவிரமடைந்து 55 ஆண்டுகள் சலிக்காது, மக்களுக்கு தொண்டாற்றி, கரடு முரடான பாதையில் காடு மேடுகள் ஏறி நீண்ட பிரயாணம் செய்து பல்வேறு துன்ப துயரங்களில் பங்கேற்று, சளைக்காது களைக்காது செயற்பட்ட நான், ஏறக்குறைய 60 ஆண்டுகளின் பின் கடந்து வந்த பாதையை திரும்பிப் பார்க்கும் போது, எனக்கு வெறுமை போல் தோன்றுகிறது. என் முயற்சிகள் அனைத்தும் விழலுக்கு இறைத்த நீராகிப் போய்விட்டன.

சமூக சேவையில் இருந்த ஈடுபாடே என்னை அரசியல்வாதி ஆக்கியது. அரசியலூடாகவே சமூகசேவை செய்வது இலகுவாக இருந்ததால், ஓயாமல் ஓடி உழைத்தேன். உண்மையை உரத்துக் கூறினேன். உண்மையாகவே நடந்தேன். சமூகம் என்னை ஏற்று பதவிகளை தந்தது. கிராம சபைத் தலைவராக, பட்டணசபைத் தலைவராக, பாராளுமன்ற உறுப்பினராக உயரவைத்தும் பார்த்தது.

தந்தை செல்வா விருப்பத்தை நிறைவேற்ற அவர் விட்டுச் சென்ற பணியில் நிரந்தரமாக ஈடுபட உத்தேசித்து, அமரர் அமிரின் தலைமையில் ஏனைய பலரின் பங்கெடுப்போடு அரசியல் பணி அதி தீவிரமாக நடந்தது. இன்று அவர்கள் அனைவரும் மறைக்கப்பட்ட, மறக்கப்பட்ட நிலையில், தமிழர் விடுலைக் கூட்டணியின் பெருந்தலைவர்களுடன் இணைந்து பணியாற்றிய நான், முறைப்படி அக்கட்சியின் செயலாளர் நாயகமாக உயர்ந்தும், சந்தர்ப்ப சூழ்நிலைகளால் என்னால் தந்தை செல்வாவின் கனவை நிறைவேற்ற முடியவில்லை என்பதை, எனது இந்த 81ஆவது பிறந்த தினத்தில் எண்ணிப் பார்க்கின்றேன்.

யுத்தம் வந்து எம் மக்கள் அழிந்துவிடக்கூடாது என்பதற்காக, தம்பி பிரபாகரனுக்கும், ஜனாதிபதிக்கும் எத்தனையோ கடிதங்களை எழுதினேன். இருவரும் எனது கருத்துக்களை ஏற்றுக்கொள்ளவில்லை. இந்த முயற்சியில் என்னுடன் எவரும் இணைந்து கொள்ளவுமில்லை. அதை ஒரு தனி மனிதனின் கருத்தாக, முரண்பாடான விமர்சனங்களை முன்வைத்து, மக்களுக்கு உண்மை நிலையினை உணர வைக்காது, நிராகரித்து விட்டதைப்பற்றிக் கூட, நான் கவலைப் படவில்லை, அதற்குப் பதிலாக யுத்தத்திற்கு ஆதரவாகவே தமது கருத்துக்களை வெளியிட்டு விடுதலைப் புலிகளை உசுப்பேத்தி, உசுப்பேத்தி யுத்த களத்திற்குள்ளே தள்ளிவிட்டார்கள். அதன் விளைவு யுத்தம் ஏற்பட்டு பல்லாயிரக் கணக்கான மக்கள் பலியானதுதான் உண்மை.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக மக்களின் அங்கீகாரத்துடன் ஒரு பதவியில் அமர்ந்து அவர்களுக்கு சேவை செய்யலாம் என்ற எண்ணத்தினால்தான் யாழ். மாநகர சபைத் தேர்தலிலும், வடமாகாண சபைத் தேர்தலிலும் போட்டியிட்டேனே தவிர, பதவி மோகத்தினால் அல்ல. மக்களின் நலனை கருதியே அத்தேர்தல்களில் போட்டியிட்டேன். அதையும் திட்டமிட்டு பொய்ப் பிரசாரங்கள் மூலம் என்னை தோற்கடித்தனர்.

அதனால் இனி எதிர் காலத்தில் நடக்கும் எந்தத் தேர்தலிலும் போட்டியிடப் போவதில்லை என தீர்மானித்துள்ளேன். யுத்தத்தால் எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது மக்களின் நல் வாழ்விற்காக எனது எஞ்சிய காலத்தைச் செலவு செய்யத் திட்டமிட்டுள்ளேன். எனது எதிர் காலத் திட்டம் பற்றி விரைவில் விரிவான அறிக்கையொன்றை வெளியிடுவேன்.

வீ. ஆனந்தசங்கரி,
செயலாளர் நாயகம்,
தமிழர் விடுதலைக் கூட்டணி

# பாண்!

ரோமானியர்கள் ஐரோப்பியரை வெற்றி கொள்ளும் வரை பாண் தயாரிப்பைப் பற்றி யாருக்கும் எதுவும் தெரியாது. 13ஆம் நூற்றாண்டில்தான் பாண் செய்யும் முறை வழக்கத்திற்கு வந்தது.

பிரான்ஸ் நாட்டில் அரசர்கள், தங்களுக்குத் தனியான முறையிலும், மக்களுக்குத் தனியான முறையிலும் பாண்கள் தயார் செய்யப்படல் வேண்டும் என்று உத்தரவிட்டிருந்தனர்.

எட்டாவது ஹென்றி காலத்தில் பாண் தயாரிப்பாளர்கள் மிகவும் கௌரவமாக நடத்தப்பட்டனர்.

அக்காலத்தில் பெண்கள்தான் ஒவ்வொரு வீட்டிற்கும் காலையில் பாண் விற்று வர அமர்த்தப்பட்டிருந்தார்கள். அப்பெண்களிடம் ஒரு டசினுக்கு 13 பாண்களைக் கொடுத்து அனுப்பி வந்தார்கள். இப்போதும் ஐரோப்பிய பாண் பேக்கரிக்காரர்களுக்கு ஒரு டசின் என்பது பதின்மூன்றைத்தான்



குறிக்கும்.

ஆரம்பத்தில் ஐரோப்பிய நாடுகளில் பாணை pa-negre என்று அழைத்தனர். இது போர்ச்சுக்கீசிய வார்த்தை.

1955-இல் பவேரியா நாட்டில் பாண் கண்காட்சி ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இக்கண்காட்சியில் பாண் தயாரிப்பின் ஆரம்ப நிலை, படிப்படியான முன்னேற்றம் அது சம்பந்தமான புத்தகங்கள் அனைத்தையும் காட்சிக்கு வைத்திருந்தனர்.

பெரும்பாலும் இவர்கள் அழகியலை ஆராதிப்பர். "காலந்தவறாமை" (Functuality) யைக் கனகச்சிதமாகக் கைக்கொள்வர், ஈடுபடும் கருமம் எதிலும் செய் நேர்த்தியைச் செப்பனிடவென ஓயாது பாடுபடுவர்.

சமூகத்துடன் "சமரசம்" (Corpromise) கொள்வதென்பது இவர்களுக்குச் சவாலானதாகும். இவர்களை முழுமையாகத் திருப்திப்படுத்தல் பிறரால் இயலாத காரியம். இவர்களது குடும்ப உறவுகளும் இயல்பானதாய் இராது.

இறுக்கமான மனோபாவமே இவர்தம் சுபாவம். சிந்தையும் செயலும் மிக நுணுக்கமாக இயங்கிக் கொள்வதால், தோழமை, சகோதரத்துவம், காதல், தொழில்சார் பந்தங்கள் இவையெல்லாம் படிப்படியாக இவர்களிடமிருந்து விலகி ஒதுங்க நேரிடும். காரிருளே ஆனாலும், கண்கெட்டுப் போனாலும் தாம் வைத்த இடத்தில் வைத்த பொருளைச் சடுதியில் பற்றிக்கொள்ள முடிவது இவர்களின் இயலுமை தான்! இவ்விதமான சுய பெருமிதத்திலும், தமது புலன்களைப் பரவலாக்கிச் செயற்பட அவகாசமற்ற குறுகிய நடத்தைகளிலும் இவர்கள் தமது வாழ்நாள்களைக் கழிப்பர்.

இடையிட்டு நேர்வதல்ல இவர்களின் இந்நிலை. பிறப்பிலேயே இயற்கையாக உருவாவது சிறு பராயத்திலிருந்து வளர்ந்து




# துல்லியர் (Perfectionists)

**— இடைக்காடு இளைய பண்டிதன்.**

வருவது. இப்படித் துல்லிய மனோ நிலையில் இயங்குபவர் பிறருடைய செயற்பாடுகளையும் அவ்விதமே எதிர்பார்ப்பர். அதன் காரணமாகக் கருத்துக்களால் முரண்படுவர். "கடும் நுணுக்கவாதி" என ஏனையோரால் கருதப்பட்டு, சகசமற்றதொரு சூழலைத் தாமாகவே ஏற்படுத்திக் கொள்வர். காலப்போக்கில் மனப்பிறழ்விற்கும் ஆளாகித் தனிமைப்படுவர்.

இன்றைய அவசர யுகத்தில், இவ்வகையான துல்லியப் போக்கு மிகப் பலருக்குச் சாத்தியப்படாதது. எனவே போதிய ஒத்துழைப்பின்றி காரியத் தடங்கல்களையே குறித்த "துல்லியர்" எதிர்கொள்வர்.

ஆம்! அறக்கூர் முழுமொட்டை; அதீத துல்லியம் அ[illegible]லுக்கு ஆகாது தான்! சிறப்பாக அரச நூலகங்கள், ஆவணக் காப்பகங்கள், அருங்காட்சியகங்கள் ஆகியனவற்றில் பொறுப்பான பதவி வகிப்பவர்கள் தமது பணிகளைத் துல்லியமாகவே மேற்கொள்ள வேண்டியிருக்கும். ஆனால் அவர்கள் குறித்த இந்த அசாதாரணர் சிலர் வரிசையில் அடங்கி இலர்.

மகாத்மா காந்தி, தாம் அறிந்து கண்ட கொள்கைகளில் விசுவாசத்தினையும் மேற்கொண்ட பொதுப்பணிகளில் காலந்தவறாமையையும் துல்லியமாய்க் கடைப்பிடித்துச் செயலாற்றிக் காட்டியவர். இருப்பினும், வாழுங்காலத்திலேயே அவரது பிடிவாதமான, துல்லிய அணுகுமுறைகள் சில சர்ச்சைக்குட்பட்டிருந்தன.

சர்வதேச கலையரங்கில் துல்லிய ஆற்றுகையாளர் (Perfectional Peformer) எனப் பெயரெடுத்தவர் அமரர் சார்லி சாப்ளின். பேசாப்படங்களில் தமது உடல்மொழி (Body Language) மூலம் இரசிகர்களை வயிறு குலுங்க அல்ல உடல் குலுங்கச் சிரிப்பில் உலுக்கிய உன்னத நகைச்சுவை மேதை. அன்னாரது சுயவாழ்வு சுகபோக வாழ்வு அல்ல என்பதனைப் பலர் அறியார்.

"எனது உண்மை நண்பன்; முகம் பார்க்கும் கண்ணாடிதான். ஏனெனில், அதுவொன்றே நான் அழும்போது சிரிப்பதில்லை!"

மற்றும், "மழையில் நனைவது எனக்கு மிக விருப்பமானது! நான் கண்ணீர் விட்டு அழுவதற்கு அது வசதியானது!!"

என்றவாறான அந்த இணையற்ற கலைஞனின் கூற்று வெளிப்பாடுகள் உள்ளார்ந்த சோகத்தின் உள்ளீடுகளே!

## முடிவு

- யானையின் முடிவு அதன் உடலால்!
- மீனின் முடிவு அதன் வாயால்!
- வண்டின் முடிவு நாசியால்!
- விட்டிலின் முடிவு வெளிச்சத்தால்!
- தவளையின் முடிவு அதன் சத்தத்தால்!




# ஷெர்லொக் ஹோம்ஸ்

ஆர்தர் கொனன் டொயில் 1886ஆம் ஆண்டு தன்னுடைய கற்பனையில் உருவாக்கிய கதாபாத்திரங்கள் துப்பறியும் நிபுணர் ஷெர்லொக் மற்றும் அவரது உதவியாளர் வாட்சன். நிஜவாழ்க்கையில் துப்பறிபவராக ஹோம்ஸ் என்று பெயரிட்டிருந்தாலும் உள்ளூர் கிரிக்கெட் ஹீரோவான ஷெர்லொக் என்பவரின் பெயரும் இவருடன் ஒட்டிக்கொண்டது.

உண்மையில் கொனன் டொயில் தொழில் ரீதியாக ஒரு மருத்துவர். நோயாளிகளைப் பரிசோதிக்கும் நேரம் தவிர பொழுது போகாத போது கதைகள் எழுதத் தொடங்கினார்.

1887ஆம் ஆண்டில்தான் முதன்முதலாக A Study in Scarlet என்ற நாவல் மூலம் ஷெர்லொக் ஹோம்ஸ் என்கிற கற்பனை துப்பறியும் நிபுணர் பாத்திரத்தை அறிமுகப் படுத்தினார். அப்போது இந்த நாவலுக்கு எந்தவிதமான சிறப்பும் இல்லை. இதைப் பிரசுரம் செய்ததற்காக இவருக்குக் கிடைத்த தொகை வெறும் 25 பவுண்கள்தான். நிஜவாழ்க்கையில் தன்னுடைய நண்பரான டாக்டர் ஜோசப் பெல் என்பவரை வைத்து உருவகப்படுத்திய கற்பனை கதாபாத்திரம்தான் ஷெர்லொக்.

ஷெர்லொக் ஹோம்ஸ் அவரது உதவியாளர் வாட்சன் இருவரும் 221 பி, பேக்கர்ஸ் ஸ்ட்ரீட் என்ற இடத்தில் வசிப்பதாக எழுதியிருந்தார். உண்மையில் இந்த முகவரியில் "அபே நாஷனல் பில்டிங் சொசைட்டி"யின் தலைமை அலுவலகம் இயங்கி வந்தது. இங்கிலாந்தில் மட்டுமன்றி அவுஸ்திரேலியா, ஜப்பான், அமெரிக்கா போன்ற நாடுகளில் உள்ள வாசகர்கள் ஷெர்லொக் ஹோம்ஸை ஓர் உண்மையான உயிருடன் வாழும் துப்பறியும் நிபுணராகக் கருதி காணாமற் போன தங்கள் உடைமைகள், தங்கள் வழக்குகளில் துப்பறிந்து உண்மையைக் கண்டுபிடிக்கும்படி நாள்தோறும் கடிதங்கள் எழுதத் தொடங்கினர்.

இவர்கள் அனைவருக்கும் தனிப்பட்ட முறையில் ஷெர்லொக் ஹோம்ஸின் காரியதரிசியாக வர்ணிக்கப்பட்ட அபே நாஷனல்ஸ் எரிகா ஹெப்பர் என்பவரிடமிருந்து பதில்களை அனுப்பத் தொடங்கினர்.

ஹோம்ஸிற்குப் பிடித்தமானது தேனீக்கள் வளர்ப்பது, வயலின் வாசிப்பது என்றும், ஒரு நாவலில் இவர் 1854ஆம் ஆண்டு பிறந்ததாக எழுதிப்போய் இவரது வாசகர்கள் இவரது பிறந்தநாளாக ஜன்வரி 6ஆம் திகதியை ஏற்றுக்கொண்டுள்ளனர்.


1891ஆம் ஆண்டில் தன்னுடைய 24ஆவது நாவலில் சண்டையொன்றில் ஷெர்லொக் ஹோம்ஸ் இறந்து போவதாக எழுதியதற்கு வாசகர்கள் அந்த முடிவை ஏற்க மறுத்து, பத்திரிகைக்கு நூற்றுக்கணக்கான கண்டனக் கடிதங்களை எழுதினர்.

வேறு வழியின்றி வாசகர்கள் வேண்டுகோளுக்கிணங்கி 1901ஆம் ஆண்டில் எழுதிய The Hound of the Baskervilles என்ற நாவலில் அவர் இறப்பதற்கு முன் நடந்த சம்பவங்கள்போல் சித்திரித்து எழுதினாரே தவிர அவர் உயிருடன் இருப்பதுபோல் ஏதும் குறிப்பிடவில்லை. ஆனால் 1903ஆம் ஆண்டு மீண்டும் Empty House என்ற நாவலில் ஷெர்லொக் ஹோம்ஸ் உயிருடன் இருப்பதுபோல் எழுதிய பின்னரே வாசகர்கள் திருப்தியடைந்தனர்.

ஷெர்லொக் ஹோம்ஸை கடைசிவரை திருமணமாகாதவராகவே உருவகப்படுத்தியிருந்தார் கொனன் டொயில். ஒரு நாவலில் ஷெர்லொக்கிடம் "தாங்கள் ஏன் இன்னமும் திருமணம் செய்து கொள்ளவில்லை?" என்று கேள்வி கேட்பது போலவும் அதற்கு அவர் "பெண்களை எப்போதும் முழுமையாக நம்பிவிட முடியாது" என்று பதிலளிப்பது போலவும் எழுதியிருந்தார்.

ஷெர்லொக் ஹோம்ஸ் நாவல்களுக்கு நூறாண்டுகள் ஆன போதிலும் என்றுமே அச்சடித்த பிரதிகள் மிஞ்சியதில்லை. தொடர்ந்து ஏதாவது ஒரு நாவல் மறுபதிப்பாக வந்து கொண்டேயிருக்கிறது.

## வியப்பூட்டும் விஷயங்கள்



- நமக்கு வரும் இருமலின் வேகம் என்ன தெரியுமா? மணிக்கு 5 கிலோ மீற்றர்.
- கொட்டாவி விடும்போது பிறர் சொல்வது நம் காதில் விழாது.
- ஒரு மணி நேரத்தில் 600 முறை கண்களை இமைக்கிறோம்.
- நம்மால் கண்களைத் திறந்து வைத்துக்கொண்டு ஒருபோதும் தும்ம முடியாது.
- ஒரு மனிதன் தன் வாழ்நாளில் சராசரியாக 72,000 முதல் 75,000 லீற்றர் தண்ணீர் குடிக்கிறான்.
- சராசரியாக ஒரு மனிதன் தன் வாழ்நாளில் 40,000 கிலோகிராம் உணவைச் சாப்பிடுகிறான்.
- நமது உடம்பில் 1,00,000 மீற்றர் நீளத்திற்கு ரத்தக் குழாய்கள் உள்ளன. 4,20,000 கியூபிக் மீற்றர் காற்றை ஒரு மனிதன் தன் வாழ்நாளில் சராசரியாக மூச்சாக விடுகிறான்.
- நம் கை விரல்களில் நடு விரல் நகம்தான் வேகமாக வளருகிறது. கட்டை விரல் நகம் மெதுவாக வளருகிறது.
- ஒரு மில்லியன் செங் குருதிச் சிறுதுணிக்கைகள் ஒரு விநாடியில் பிறக்கின்றன. அதிகபட்சமாக 120 நாட்கள் மட்டுமே வாழ்கின்றன.
- புதிதாகப் பிறந்த குழந்தையின் உடலில் மொத்தம் 350 எலும்புகள் இருக்கும். நன்கு வளர்ந்த பின் இந்த எண்ணிக்கை 206 ஆகக் குறைந்துவிடும்.
- குழந்தையாய் இருக்கும்போது கண் எந்த அளவுக்கு இருக்கிறதோ அதே அளவுதான் முதுமை வரை இருக்கும். வளராத ஒரே உறுப்பு கண்மணி மட்டும்தான்!
- பிறந்த குழந்தை எவ்வளவு அழுதாலும் கண்ணீர் மட்டும் வராது. அதற்குக் கண்ணீர் சுரப்பிகள் வளர்ந்து செயல்பட குறைந்தது 15 நாட்களாகும்.
- நமது உடம்பின் அனைத்து உறுப்புகளும் ஒரே நேரத்தில் தூங்கத் தொடங்காது. முதலில் கண்கள், பின்னர் வாசனையை உணரும் உறுப்புகள், பின்பு சுவை மொட்டுக்கள், காது, இறுதியாக தோல் ஆகியவை தூங்கும். ஆனால், நாம் விழிக்கும்போது இது தலைகீழாக நிகழும். முதலில் தோல் தன் வேலையைத் தொடங்கும். பின்னர் கேட்கும் உறுப்புகள், சுவை உணரும் உறுப்புகள், நுகரும் உறுப்புகள், கடைசியாக கண்கள் விழிப்படைகின்றன.

# சீதனம் பெண்களின் மரணவாசல்

**"மனிதன் வாழ்வதில்லை வாழத் தயாராகிக் கொள்வதுடன் மடிந்து போகின்றான்" என்ற ஓர் அறிஞர் கூற்றினை மெய்ப்பிப்பதைப் போல் யாழ்ப்பாணத்து தழிழர் வாழ்வில், சேமிக்கும் அல்லது செல்வத்தைத் திரட்டும் அவா ஒரு முக்கிய இடம் பெறுகின்றது.**

யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரையில் சீதனப்பிரச்சினையானது சமுதாயத்தின் சகல பகுதியினரதும் வாழ்க்கைப் பிரச்சினையாக அமைந்துள்ளது. இதனை ஒரு சமூக அநீதியாகவே மாத்திரம் அணுகாமல் யாழ்ப்பாணத்து சமூக பொருளாதார அமைப்புடன் சம்பந்தப்பட்ட பிரச்சினையாக அணுகவேண்டும்.

சீதனம், வரதட்சணை, சீர்வரிசை, ஸ்திரீதனம் எனப் பல பெயர்களில் வழக்கில் இருக்கும் சீதனமுறையானது தமிழர் தம் வாழ்வில் ஒரு குடும்பத்தில் பெண் பிள்ளைகள் பிறக்கின்றபோதும், திருமணவயதினை எட்டும்போதும் எதிர்நோக்கப்படுகின்ற ஒரு முக்கிய பிரச்சினை.

பண்டைய தமிழர் வாழ்வில் எட்டு வகையான திருமணமுறை மரபுகள் இருந்ததாக தொல்காப்பிய களவியலுரை மூலம் அறியக் கூடியதாக உள்ளது.

**1. பிரமம் :-** பால்ய விவாகத்தை ஒட்டிய முறையில் வயதுகுறைந்த ஒரு பெண்ணை உயர்தரமான ஆடை ஆபரணங்களினால் அலங்கரித்து கன்னிகாதானமாகக் கொடுத்தல்

**2. பிரசாபாத்தியம்:-** முறைப்படி பெண்கேட்டு வருபவர்களின் குலம் கோத்திரங்களைக் கவனித்து பெண்ணினது விருப்பத்தினையும் பெற்று திருமணம் நடத்துதல்.

**3. ஆரீடம்:-** பசு, எருது ஆகிய உருவங்களை பொன்னால் செய்து இவ்விரண்டிற்கும் இடையில் ஆடை, ஆபரணங்களினால் அலங்கரிக்கப்பட்ட பெண்ணை நிறுத்தி கோதானம், சொர்ணதானம் என்பவற்றுடன் கன்னிகாதானம் செய்தல்.

**4. தெய்வம்:-** முறைப்படி யாகங்களைச் செய்த ஒரு ஆசிரியருக்கு வேள்வித் தீ முன் பெண்ணை நிறுத்தி வரதட்சனையுடன் பெண்ணைக் கொடுத்தல்.

**5. காந்தர்வம்:-** ஆண், பெண் இருவரும் ஒருவரை ஒருவர் கண்டு மனமொத்து திருமணம் செய்துகொள்ளல்.

**6. ஆசுரம்:-** பெண்ணை பணயப் பொருளாக வைத்து பல்வேறு விதமான போட்டி பந்தயங்களை நடாத்தி வெற்றி பெறுபவர்களுக்கு திருமணம் செய்துவைத்தல்.

**7. இராக்கதம்:-** அந்தப்புரத்தில் இருக்கும் பெண்ணை அவளைச் சுற்றியுள்ள பல்வேறு தடைகளை உடைத்து கவர்ந்துசென்று மணம் செய்யும் மரபு.


**8. பைசாசம்:-** ஆண்மகன் ஒருவன் தனது வயதுக்கு மூத்தவளையோ, அல்லது கற்புநெறி தவறியவளையோ திருமணம் செய்து மனமொத்து வாழ்க்கை நடாத்துதல்.

தொடர்ந்து பின்னைய காலத்தில் பெண் என்பவள் "மென்மையானவள்", வயதுக்குவந்த பெண் ஆணின் துணையின்றி வாழமுடியாது, குடும்பத்தில் பெண் ஆணின் முடிபுகளுக்கும் தீர்மானங்களுக்கும் கட்டுப்பட்டவள் என்ற மனப்பான்மைகளை வாழ்க்கைப்படுத்துதலும், அவர்களின் புதுவாழ்க்கைக்கு அத்திவாரம் இடுவது போல தம்மால் இயன்ற சொத்துக்களையும் சன்மானங்களையும் வழங்குதலும் தமக்குரிய பொறுப்பும் கடமையும் என பெற்றோர் எண்ணுகிறார்கள்.

காலப்போக்கில் தொழிற்புரட்சிகளாலும் நாகரீகப் பண்பாட்டு முறை மாற்றங்களாலும் விஞ்ஞான வளர்ச்சிகளாலும் பல்வேறு வகையான தொழில்முறைகளும் வாழ்க்கை வசதிகளும் உருவாகியதுடன் மக்களுடைய வாழ்க்கை முறைகளும் மேல்வர்க்கம்,நடுத்தரவர்க்கம், கீழ்மட்டம் என பிரிவுக்குள்ளாகின.

ஒரு மனிதனின் கௌரவம், அந்தஸ்து என்பவற்றை அவன் சார்ந்த குடும்ப நிலைமை, நிதிவசதி, தொழிற்துறை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு கணித்துக்கொள்ளும் வழமை தமிழர்களிடையே மிகவும் பலமாக வேரூன்றத் தொடங்கியது.

இந்த வகையில்தான் சீதனமுறை அடிப்படையில் குடும்பத்தின் அந்தஸ்தினை எடைபோடும் மனப்பாங்கு எமது




சமுதாயத்தில் வந்தது.

"மனிதன் வாழ்வதில்லை வாழத் தயாராகிக் கொள்வதுடன் மடிந்து போகின்றான்"

என்ற ஓர் அறிஞர் கூற்றினை மெய்ப்பிப்பதைப் போல் யாழ்ப்பாணத்து தழிழர் வாழ்வில், சேமிக்கும் அல்லது செல்வத்தைத் திரட்டும் அவா ஒரு முக்கிய இடம் பெறுகின்றது.

மேலும் தொழில் புரட்சிகளின் விளைவாகவும், நவீன விஞ்ஞான அறிவியல் மாற்றங்களினாலும் பல்வேறு வகையான தொழில்துறைகள் உருவாகின. இதனால் உழைப்பின் முக்கியத்துவத்தினை ஆண் மூலமே உணரும் மனப்போக்கும் பெண்களின் திறமைகளை அசட்டையாக எண்ணும் நிலைமைகளும் உருவாகின. இதனால் சீதனமுறை நியாயப்படுத்தப்பட்டது.

சீதனமுறையானது பேரம்பேசும் நிலைமைகளை ஏற்படுத்தியது மட்டுமன்றி எமது சமுதாயத்தில் திருமண நடவடிக்கைகளை வர்த்தகமயமாக்கியும் உள்ளது. இளம் பெண்கள் மத்தியிலும் பெற்றோர் மத்தியிலும் மனோவியல் தாக்கங்களையும் சுமைகளையும் ஏற்படுத்தியுள்ள இச்சீதன பேரங்களினால் திருமண வயதினை எட்டியும் வாழ்க்கைப்பட முடியாது தவிக்கும் உள்ளங்கள் ஏராளம். மணவறை மட்டும் சென்று தடைப்படும் திருமணங்கள் ஏராளம்.

சீதனம் வழங்கப்பட்ட பின்னர் கூட அவர்களது வாழ்க்கை இன்பரசமானதாக அமைந்துவிடுகின்றதா? என்பதும் கேள்விக்குறி. ஒரு பெண் தன் தந்தையிடம் இருக்கும் பணத்துக்கு ஒத்த மணமகனை அடையமுடிகிறதே ஒழிய தன் மனமொத்த மணமகனை அடையமுடியாத துர்ப்பாக்கிய நிலைகளே மலிந்து செல்கின்றன.

அண்டைய நாடான இந்தியாவைப் போல் அல்லாது, இலங்கையில் திருமணத்திற்குப் பின்னர் ஏற்படும் தாக்கங்கள் குறைவாக இருந்தாலும் திருமண வயதை எட்டியும், திருமணம் செய்ய முடியாத நிலையிலுள்ள பெண்களினதும், திருமண வயது உயர்ந்து செல்லும் நிலையிலுள்ள பெண்களின் தொகை அதிகரித்துச் செல்வது ஒரு முக்கிய பிரச்சினையாகும்.

அடுத்த பக்கத்தில் பெண்களுக்கு சீதனம் கொடுப்பதற்காக தாய், தந்தையரும் ஆண் சகோதரர்களும் தமது உழைப்பை சந்தோசமாக செலவழிக்காமல் வயிற்றைக் கட்டி, வாயைக்கட்டி சேர்த்து பிள்ளைகளுக்கு கொடுத்துவிடுகிறார்கள். தமது பிற்காலத்துக்கு எதுவுமே இல்லாமல் அவதியுறும் தாய், தந்தையர்கள் எவ்வளவோ உள்ளார்கள்.

சீதனத்தை சேர்ப்பதற்காக தம்மை ஈடுவைத்து பிரமச்சாரியாக வாழும் ஆண் சகோதரர்களும் சர்வசாதாரணம். அதே நேரத்தில் சீதனம் வாங்கி தமது குடும்ப தேவைகளைப் பூர்த்திசெய்து கொண்ட ஆண்களும் சர்வசாதாரணம்.

இதன் கருத்தாக்கம் என்ன? சீதன முறையால் பெண்கள் மட்டுமோ அல்லது ஆண்கள் மட்டுமோ அல்லாத உறவில்லை. யாழ்ப்பாண சமூகத்தின் ஒவ்வொரு அங்கத்தவரும் அவதியுறுகின்றார். பெண் குழந்தைகளின் ஜனனம் குடும்பத்தின் ஒவ்வொரு அங்கத்தவரையும் பயமுறுத்துகிறது.

சீதனமுறையை ஒழிப்பது என்பது முற்போக்கான ஒரு கொள்கையாகவும், பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தாகவும் இருந்தாலும் கூட, சீதனத்தை சட்டரீதியாக தடைசெய்வது என்பது பின்வரும் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது.

1. இலங்கை "தேசவழமை சட்டத்தின்படி சீதனம் என்பது விலக்கப்பட்டதல்ல, சட்டத்தின் முறையின் கீழும் சீதனம் பெண்ணின் தனியான ஆதனமாக கருதப்படுகின்றது". திருமணத்தின் போது பெண்ணின் தரப்பிலிருந்து ஆதனத்தை பொறுப்பில் வைத்திருக்கின்றார் என்றும் அவளே அதன் சட்டப்படியான உரிமையாளர் எனவும் பெறுகின்ற ஆண் அந்த ஆதனத்தை அவளுக்காக நம்பிக்கை எனவும் குறிப்பிடுகிறது.

2. இனிவரும் காலங்களில் சீதன தடைச்சட்டம் கொண்டுவந்தாலும் சீதனம் கொடுக்க கூடிய நிலையிலுள்ள பெற்றோர்கள் சட்டத்திற்கு புறம்பாக மறைமுகமாக பேரம் பேசும் நிலைகளில் ஈடுபட முனைவதால் தடைச்சட்டம் பூரணமாக வெற்றியளிக்காது.

3. சீதனத் தடையினால் அழகற்ற, திறமையற்ற அல்லது விதவையாக்கப்பட்ட பெண்களின் வாழ்க்கை பாதிக்கப்படலாம்.

4. சீதனமுறைகளாலும், கூட்டுக் குடும்ப அமைப்புமுறை இறுக்கங்களாலும் எமது சமுதாயத்தில் விவாகரத்து போன்ற பிரச்சினைகள் மிகவும் குறைவாகவே இடம்பெறுகின்றன. சீதன முறை தடைசெய்யப்படுகையில் குடும்பங்களில் இறுக்கமான தொடர்புகள் குறைந்து போவதுடன் விவாகரத்து போன்றனவும் அதிகமாக இடம்பெறலாம்.

5. சீதனத் தடையால் திருமணத்தின் பின் குடும்ப வாழ்க்கையில் கஷ்ட நிலைமைகளின் போது பல பிரச்சினைகள் உருவாகலாம். பெண்களை பிறந்தவீட்டுக்கு விரட்டும் நிலைமைகளும் (பெண்களின் பெற்றோர் வசதிபடைத்தவர்களாக இருப்பின்) நிச்சயம் ஏற்படும்.

6. சீதனத் தடைச்சட்டம் இந்தியாவில் கொண்டுவரப்பட்ட போதும் சீதனப் பிரச்சினைகளின் தாக்கங்கங்கள் இன்றும் எதிர்நோக்கப்படுவனவாகவே உள்ளன.

7. தடைச்சட்டம் என்று கொண்டுவரப்படும்போது அது மீறப்படுமானால் தண்டனை வழங்குதல் தவிர்க்க முடியாத தாகும். ஆனால் சீதனவழங்கல்கள் குடும்பஅமைப்புடன் கூடிய ஒன்றாக அமைவதால் தண்டனை வழங்கல் என்பது அவர்களது வாழ்க்கையை பாதிப்பதாகவே அமையும். மேலும் எந்தவொரு பெற்றோரும் இந்தநிலையை விரும்பமாட்டார்கள்.

**சீதனமுறையால் பெண்கள் மட்டுமோ அல்லது ஆண்கள் மட்டுமோ அல்லல் உறவில்லை. யாழ்ப்பாண சமூகத்தின் ஒவ்வொரு அங்கத்தவரும் அவதியுறுகின்றார். பெண் குழந்தைகளின் ஜனனம் குடும்பத்தின் ஒவ்வொரு அங்கத்தவரையும் பயமுறுத்துகிறது.**

எனவே சீதன ஒழிப்பென்கையில் அது மக்களின் மனமாற்றத்தின் மூலமே பூரண வெற்றியைக் கொடுப்பதாக அமையும் என்பதும் மனமாற்றங்கள் என்பது உடனடியாக ஏற்படக்கூடிய ஒன்று அல்ல என்பதும் வெளிப்படையானதாகும். மறுகரையில் இது ஒரு வாழ்க்கையுடன் தொடர்புபட்ட அம்சமாக இருப்பதால் தடைச்சட்டங்கள், தண்டனைகள் என அமுல் நடாத்தப்படுதலும் பலபக்க பிரச்சினைகளுக்கும் மக்களை முகம் கொடுக்கச் செய்வதாக அமையும்.

எனவே இவ்விடயத்தில் மனமாற்றங்களை ஏற்படுத்தக் கூடிய திட்டங்களையும், சீதனப் பேரங்களை குறைக்கக் கூடிய திட்டங்களையும் இயன்றளவுக்கு விரைவாகவும் அதேநேரத்தில் பரவலாக எல்லா மட்டங்களுக்கும் சென்றடையக் கூடிய விதத்திலும் செயற்படுத்துவதே சிறந்ததாக அமையும்.

குறிப்பாக திருமண நடவடிக்கைகளில் ஆலோசனைகளையும், ஒத்துழைப்புக்களையும் வழங்கக்கூடிய நிறுவன அமைப்புக்களை உருவாக்குதல் அதன் மூலமாக சீதனப் பேரங்களை விரும்பாத ஆண்கள், பெற்றோர் பெண்கள் என்பவர்களை ஒன்றிணைத்தலும் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் இவ்வாறான மனப்போக்கு உடையவர்களின் அங்கத்துவத்தை படிப்படியாக அதிகரித்தலும் அமைப்புக்களின் கிளைகளை கிராம மட்டங் களுக்கும் விஸ்தரித்து செல்லுதலும் விழிப்புணர்ச்சியையும், மனமாற்றத்தையும் துரிதப்படுத்தக் கூடிய ஓர் நடவடிக்கையாக அமையும்.



**யோகநாதன் நிரோஜா**
3ஆம் வருடம் சிறப்புக்கலை
மெய்யியல்துறை
யாழ். பல்கலைக்கழகம்.

# அறுவடை செய்யப்படும் பொருட்களின் இறக்குமதியை தடுத்து நிறுத்த வேண்டும்

## – சந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு –



அறுவடை செய்யும் காலத்தில் அறுவடைப் பொருட்கள் இறக்குமதி செய்யக்கூடாது என பது அரசின் கொள்கை. அதற்கமைவாக கடந்த வருடம் யாழ். மாவட்டத்தில் சின்னவெங்காயம அறுவடை செய்யப்பட்ட காலத்தில் இறக்குமதி நிறுத்தப்பட்டது. ஆனால இம்முறை அச் செயற்பாடு மாறறப்பட்டுள்ளமை தொடர்பில் உண்மை நிலைமைகள் ஆராயப்பட வேண்டும் இருப்பினும இவ்வாறான இறக்குமதிகளை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு நாம் அரசாங்கத்திடம் வலியுறுத்துவோம். என நாடாளுமன்ற உறுப்பினரும நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

புத்தூரில் நடைபெற்ற. கமநலபுலமைப்பரிசில் வழங்குதல் மற்றும் விவசாய சம்மேளனங்களின் ஒன்று கூடலில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

கடந்த காலபோக பயிர்ச்செய்கை யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு மிகவும் ஏமாற்றத்தை அளித்திருக்கிறது. முற்றுமுழுதாக பயிர்கள் அனைத்தும் அழிந்து போனது. இதற்கு காலநிலை மாற்றமே காரணமாக அமைந்துள்ள அதேவேளை அத்ன் தொடர்ச்சியாக இவ்வருடமும் ஆறாம்மாத நடுப்பகுதியை எட்டியுள்ளபோதும் இயற்கை மக்களுக்கு பாரிய ஏமாற்றத்தையே அளித்திருக்கின்றது.

விவசாயிகளின் வாழ் நிலையை மேம்படுத்தும். சந்தையில் விற்பனை செய்யமுடியாத மக்களால் அரிதாக நுகரப்படு கின்ற பொருட்களை விவசாயிகள் உற்பத்தி செய்வதால் வருமானம் இழக்கப்படுகிறது. ஆகவே, இந்த விடயத்தில் அதிக அக்கறை செலுத்தப்பட வேண்டும்.

வடமாகாண கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் பற்றிக் ரஞ்சன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் வீரசிங்க யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம், கமநலஅபிவிருத்தித் திணைக்கள யாழ்.மாவட்ட உதவி ஆணையாளர் நிஸாந்தன், விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள், சம்மேளனத்தின் பிரதிநிதிகள், கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள், விவசாயிகள் மற்றும் பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# சுற்றுச்சூழல் தினத்தையொட்டி நடாத்தப்பட்ட போட்டி முடிவுகள்

வலி. மேற்கு பிரதேச சபை வேள்ட்விஷன் நிறுவனத்துடன் இணைந்து சர்வதேச சுற்றுப் புறச்சூழல் தினத்தையொட்டி நடாத்தப்பட்ட போட்டியில் பரிசில்களைப் பெற்ற பாடசாலை மாணவர்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

நேற்றைய தொடர்ச்சி...

மாணவர்களின் விபரம் வருமாறு

கவிதைப் போட்டி

மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம

வே.கீர்த்தனா, ஜெ.விதுசா, இ.திவாகரன்,சி.றக்சனா, கி.சானுகா, க.ஸ்வர்னா, சி.சிவப்பிரியா, து.கோபிகா, ச.விமல்ராஜ், வெ.மதிசா, தே.யசோதா, வி.கஸ்தூரி, த.திஹியா, க.பிரணவன், சி.பிரசாந்,ஜெ.கஜேந்தினி, மோ.கோபினா, க.கிருஸ்ணவேணி, ம.நிசாந்தன், ச.சுகன்யா

தொல்புரம் விக்கினேஸ்வரா வித்தியாசாலை

த. திலக்சிகா

பண்ணாகம் மெய்கணடான் மகாவித்தியாலயம்

பி.பிரதா, ர.ஜதுசா, ம.பகீரதி, அ.சங்கவி, து.தக்சனா, த.வர்ஹனா, தி.சுலக்சனா, கு.அபிராமி, செ.தர்சிகா, சி.லாவன்யா, வி.லாவன்யா, நி.நிசாந்தினி, இ.வசிதா,ர.சரன்யா

(தொடரும்) (25)

# சிறுகதைப்போட்டியில் சாதனை



பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி ஆக்கத் திறன்களை மதிப்பிடும் ஒரேயொரு தேசியவிருது விழாவான கவிதா ஆற்றல் 2013 - 2014 இறுதிப்போட்டிகள் அண்மையில் நடைபெற்று நிறைவடைந்துள்ளன.

இதில் மொறட்டுவ பலகலைக்கழக பொறியியல் பீடத்தைச் சேர்ந்த சிவகுமாரன் ஜனகன் தமிழ் மொழி மூல சிறுகதைப் போட்டியில் அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்று அதற்கான விருதினை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் இருந்து பெற்றுக்கொண்டார்.

இம்மாணவன் சிங்கள தமிழ், இருமொழி மூல மாணவர்களிடையே நடைபெற்ற புகைப்படப்போட்டியில் அகில இலங்கை ரீதியில் இரண்டாம் இடத்தைப் பெற்று அதற்கான பரிசினை தேசிய மொழிகள் ஒருமைப்பாடு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார வழங்கி வைத்தார் (இ)

# ஆயுர் வேதம்





## வாயுவின் சீற்றமும் நரம்புகளில் பாதிப்பும்!

கழுத்துப் பகுதியிலுள்ள குருத்தெலும்புகளிலிருந்து சில நரம்புகள் புறப்பட்டு கையினுள்ளே செல்கின்றன. இந்த நரம்புகளில் அதிக வேலைப் பளுவினால் ஏற்படும் சோர்வானது சரியானபடி கவனிக்கப்படாமல், ஓய்வு தராது தொடர்ந்து வேலை கொடுக்கப்படுமேயானால் கைகளில் உபாதைகள் தோன்றலாம்.

வ்யானன் என்ற ஒரு வாயு இதயத்திலிருந்து செயல்படு கிறது. உடல் அங்கங்களை உயர்த்துவது, தாழ்த்துவது, நீட்டுவது மற்றும் மடக்குவது போன்ற செயல்களுக்கு உறுதுணையாக விளங்குகிறது.

உணவில் வாயுவை அதிகரிக்கச் செய்யும் காரம், கசப்பு, துவர்ப்புச் சுவைகளின் அதிகமான சேர்க்கை, பருப்புவகைகள், கொண்டைக் கடலை, கிழங்குகள், வாழைக்காய, காராமணி, மொச்சை போன்றவற்றைச் சாப்பிட்டுவிட்டு மேலே குளிர்ந்த நீர் குடிப்பவர்களுக்கு குடலில் வாயுவின் சீற்றம் ஏற்பட்டு அதுவே வ்யான வாயுவிற்கு குந்தகம் விளைவிப்பதால் கைகளில் உள்ள நரம்புகளில் அந்தப் பாதிப்பு உணர்த்தப்படுகிறது. கைகளைச் சரிவர உபயோகிக்க முடி யாமல் போகக் கூடும்.

தலையில் அடிக்கடி குளிர்ந்த நீரை விட்டுக் குளித்தல், குளிரூட்டப்பட்ட அறையில் தலையில் தேங்காய் எண்ணெய்யை தடவிக் கொண்டு பல மணி நேரம் அமர்ந்து வேலை செய்தல், இரு சக்கர வாகனத்தில் தலைக்குக் கவசம் அணியாமல் நீண்ட தூரம் குளிர்ந்த காற்றில் பயணித்தல், தலைமாட்டுப் பகுதியில மின் விசிறியின் காற்று படும்படி இரவில் படுத்து உறங்குதல், தலை யணையை வெயிலில் போடாமல் அதனுடைய சில்லிப்பு கழுத்து மற்றும் பின் தலைப் பகுதியில் படுமாறு படுத்து உறங்குதல், கோடையில் உடல் சூடாக இருக் கையில் திடீரென்று குளிர்ந்த நீரை குடிப்பதும், குளிர்ந்த நீரில் குளிப்பது போன்ற சில செயல்களால் கையில் உள்ள நரம்புகளின் வலுவானது குறைந்து போய் கையை சாதாரண நிலையில் வைத்துக் கொள்ள முடியாமல் போவதற்கான வாய்ப்புக்கள் அதிகம.

இதைச் சிறு வயது முதலே அறியாது தவறு செய்திருக்கும் பட்சத்தில் இந்த நரம்புகளில் ஏற்படும் தாக்கம் வயோதிகத்தில் நிச்சயம் உணரப்படும். இதை இளைய சமுதாயத்தினரும் தவிர்த்துவிடுதல் நலமாகும்.

இந்த உபாதைகள் உள்ளவர்கள் கார்ப்பாஸாஸ்த்யாதி எனப்படும் மூலிகை தைலத்தை மூக்கினுள நான்கு சொட்டுகள் விட்டுக் கொண்டு, மெதுவாக உறிஞ்சிக் கொண்டு, அதன் பிறகு இந்த தைலத்தை வெதுவெதுப்பாக உச்சந் தலையில் தேய்த்து சுமார் அரை, முக்கால் மணி நேரம் காலையில் ஊறவிடவும்.

இந்த எண்ணெய்யையே வெதுவெதுப்பாக வலது கை முழுவதும் தடவி மிதமான வெந்நீரில் குளிப்பதால் கை நரம்புகள் வலுப்பெறக் கூடும். இது சாதாரணமாக வீட்டிலேயே செய்து கொள்ளக்கூடிய எளிய சிகிச்சை முறையாகும்.

இதே தைலத்தை மூக்கினுள் விட்டு தலையில் அதிக அளவில் ஊற வைக்கும சிரோவஸ்தி எனப்படும் சிகிச்சை முறையை ஆயுர்வேத ஆஸ்பத்திரியில் தங்கி எடுத்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும். இதன் மூலம் கை நரம்புகள் விரைவாக வலுப் பெறுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம்.

உள்ளே சாப்பிட வேண்டிய ஒரு சில ஆயுர்வேத மருந்துகளாகிய பிரசாரிண்யாதி கஷாயம், மஹாராஸ்னாதி கஷாயம், கந்த தைலம், மஹாரா ஜப்ரஸாரிணீ தைலம், அஸ்வகந்தாரிஷ்டம், தச மூலாரிஷ்டம், வாயு மற்றும் தான்வந்திரம் குளிகை போன்ற வற்றை ஆயுர்வேத மருத்துவரின் ஆலோசனைப்படி சாப்பிட்டு வரவும்.

கைகளுக்குச் சோர்வு ஏற்படாத வண்ணம் உங்களுடைய வேலைகளை அமைத்துக் கொள்ளவேண்டும் அல்லது சோர்வு தோன்றிய உடன் தக்க ஓய்வு தந்து நரம்புகளில் ஏற்படும் வாயுவின் வறட்சியை அண்டவிடாமல் பார்த்துக் கொளவதும நலமே.

### மூட்டுவலிக்கு வைத்தியம

* மூட்டு வலியினால் அவதிப்படுபவர்கள் மொசைக் தரையிலோ, வெறும் தரையிலோ, மாபிள் தரையிலோ படுத்துத் தூங்கக் கூடாது.

* நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு மூட்டுவலி அதிகமாகும். ஆகவே நீரிழிவு நோயைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும்.

* மூட்டுவலி உள்ளவர்கள் காரத்தைக் குறைக்க வேண்டும் குறிப்பாக பச்சைமிளகாய் கூடாது. சாதாரண கோப்பிக்கு பதில் சுக்குக் கோப்பி குடித்து வந்தால் மூட்டுவலி குறையும்.

* குளிர்ச்சி அதிகம் சேர்ந்தால் மூட்டுவலி அதிகரிக்கும். இதனால் மூட்டு வலி உள்ளவர்கள் ஈரத்தரையில் வெறும் காலால் நடக்கவும் கூடாது.

* உழுந்து எண்ணெய்யை மூட்டுவலி உள்ள இடத்தில் சூடேறும்படி தேய்த்துவிட்டால் மூட்டுவலி குறையும்.

* வாயுத்தொல்லை உள்ளவர்கள் அடிக்கடி முருங்கைக்காய், முருங்கைக் கீரையை உணவில் சேர்க்கக் கூடாது.

* சித்தரத்தையை இடித்து தண்ணீரவிட்டு நன்றாகக் காய்ச்சிச் சுண்ட வைத்து காலை, மாலை சாப்பாட்டுக்குப் பின்பு தொடர்ந்து 48 நாட்கள் குடித்து வந்தால் மூட்டு வலிக்கு முழுமையான நிவாரணம் கிடைக்கும்.

("மூட்டுவலிக்கு வைத்தியம் நூலிலிருந்து.")

# பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் சந்திப்பு



துணுக்காய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கிராம அபிவிருத்தி சங்கங்கள் மற்றும் மாதர் சங்கங்களின் பிரதிநிதிகள் தமது தேவைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் கலந்துரையாடியுள்ளனர்.

மேற்படி கலந்துரையாடல் துணுக்காய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன் தினம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது அம்பலப்பெருமாள் குளம், தென்னியர் குளம், கோட்டை கட்டிய குளம், துணுக்காய், புத்து வெட்டுவான், உயிலங்குளம், யோகபுரம்,கல்விளான், யோகபுரம் மத்தி, மல்லாவி, ஆரோக்கியபுரம், ஐயங்கன் குளம், உள்ளிட்ட பகுதிகளின் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துரையாடியுள்ளனர்.

இதன்போது மின்சாரம், போக்குவரத்து, சிறுவீதிகளின் புனரமைப்பு, கோவில் புனரமைப்பு, போக்குவரத்துக்கான பேருந்துகள், சுயதொழில் மற்றும் கைத்தொழில், குடிநீர், முன்பள்ளி, அடிப்படை வசதிகளை பெற்றுக் கொள்வதற்கு துறைசார்ந்தோர் ஊடாக நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சரிடம் அமைப்புக்களின் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

கோரிக்கை தொடர்பில் கவனம் செலுத்திய அமைச்சர் எதிர்காலங்களில் இவ்வாறான அபிவிருத்தி செயற்றிட்டங்களை புனரமைக்கும் வகையில் துறைசார்ந்த அரச அதிகாரிகளை வரவழைக்கும் அதேவேளை, உரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சுட்டிக் காட்டினார்.

இதனிடையே, குறித்த அமைப்புக்களின் ஏனைய தேவைகள் மற்றும் கோரிக்கைகள் தொடர்பிலும் அமைச்சர் குறித்த அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது துணுக்காய் பிரதேச செயலர் குணபாலன், அமைச்சரின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் ஜெயராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.

# வெள்ளாங்குளம் வீதி புனரமைப்பு குறித்து ஆராய்வு



(கிளிநொச்சி)

வெள்ளாங்குளம் வீதி புனரமைப்பு தொடர்பில் வர்த்தகர்களும், பொது மக்களும் எதிர்நோக்கி வருகின்ற இடர்பாடுகள் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேரில் சென்று ஆராய்ந்தறிந்து கொண்டார்.

மேற்படி விடயம் தொடர்பிலான கலந்துரையாடல் துணுக்காய் பிரதேச செயலகத்திலும், வணிகர் சங்கப் பணிமனையிலும் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதன்போது, வர்த்தக நிலையங்களுக்கு முன்பாகவுள்ள பிரதான வீதியானது வர்த்தக நிலையங்களுக்கு உயரமாக நிர்மாணிக்கப்பட்டுள்ள காரணத்தினால் வர்த்தகர்களும் பொதுமக்களும் பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதாக ஏற்கனவே சுட்டிக் காட்டப்பட்டது.

இது விடயம் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடமும் பெருந்தெருக்கள் அமைச்சோடும் கலந்துரையாடியதன் பிரகாரம் குறித்த அமைச்சின் உயரதிகாரிகள் துணுக்காய் பகுதிக்கு வருகை தந்திருந்தனர்.

இந்நிலையில் அந்த அதிகாரிகள் மத்தியில் பொதுமக்கள் மற்றும் வர்த்தகர்கள் எதிர்நோக்கி வரும் இடர்பாடுகளை அமைச்சர் அதிகாரிகளிடம் தெளிவுபடுத்தியிருந்தார்.

இதனடிப்படையில் பொதுமக்கள் மற்றும் வர்த்தகர்கள் பெருந்தெருக்கள் அதிகார சபை ஆகிய இருதரப்பும் பொது இணக்கப்பாட்டுடன் தீர்வினைக் காண முன்வருமாறு அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

அத்துடன் குறித்த விடயம் தொடர்பாக தாம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கவனத்திற்கு மீளவும் தெரியப்படுத்தி அதன்பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் துணுக்காய் நகர் பகுதியில் 400 கிலோமீற்றர் வரையிலான குறித்த வீதியினை செப்பனிடுவது தொடர்பில் முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் தாம் கவனம் செலுத்தி ஆராயவுள்ளதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இதன்போது சுட்டிக்காட்டினார்.

இதன்போது துணுக்காய் பிரதேச செயலர் குணபாலன், அமைச்சரின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் ஜெயராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.

# குறுக்காக பாய்ந்தது நாய்; அச்சுவேலியில் ஒருவர் படுகாயம்




(யாழ்ப்பாணம்)

அச்சுவேலியில் இருந்து மருதனார் மடம் சந்தைக்கு பொருட்களை மோட்டார் சைக்கிளில் எடுத்துச் சென்ற விவசாயி ஒருவரின் மோட்டார் சைக்கிளின் முன்பாக நாய் ஒன்று பாய்ந்ததில் அந்த விவசாயி விபத்திற்குள்ளாகி படுகாயங்களுக்குள்ளான நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று அதிகாலை 5.45 மணிக்கு இடம்பெற்ற இந்த விபத்தில் எம்.அஞ்சலோ (வயது-48) என்ற விவசாயியே படுகாயங்களுக்குள்ளாகியுள்ளார்.

இவரது மோட்டார் சைக்கிளும் சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (பா,25)



**கரவெட்டி கோவில் சந்தை சோனப்பு வீதியானது நீண்ட காலமாக புனரமைக்கப்படாத நிலையில் குண்டும் குழியுமாக இருப்பதைக் காணலாம். (85)**

# திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் தின பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றோர்

**(யாழ்ப்பாணம்)**

**வண்ணை-சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக்கழகம் நடாத்திய திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் தின பேச்சுப் போட்டியில் பரிசு பெற்றோர் விபரம் வருமாறு,**

தரம்-01

1ஆம் இடம் கு.யுகானா (யா/சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம், 2 ஆம் இடம் பீ.தீபனா (யா/வண்ணை.நாவலர் மகா வித்தியாலயம் 3 ஆம் இடம வ.பிருந்தா (காரைநகர் கிழவன் காடு கலாமன்றம்)

**சிறப்புப் பரிசு பெறுவோர்**

கி.வாகினி (தலையாழி ஞானவைரவர் கோவில் அறநெறி பாட, பி.லதுசனா (யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம், இ.கிருத்திகா (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), தி.சாய்பிரகாஷ் (யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம், ஜெ.தக்ஷனன் (யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை

**தரம்-2**

செ.சௌமியலக்ஷ்மி யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை, 2 ஆம் இடம் ச.வைஷ்ணவி (யா.இந்து ஆரம்ப பாடசாலை கு.சிறிசுபாங்கன் (யாழ். இந்து ஆரம்ப பாடசாலை)

**சிறப்புப் பரிசு பெறுவோர்**

பி.அகாஷ்வரசர்மா (காரைநகர் கிழவன்காடு கலாமன்றம்), மு.தேஜஸ்வினி (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை, அ.துஷியந்தா (யா/யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), ந.துவாரகி (தலையாழி ஞானவைரவர் கோவில் அறநெறி பாட), ர.ஷாரகா (தலையாழி ஞானவைரவர் கோவில் அறநெறி பாட)

**தரம் -03**

1 ஆம் இடம்-ச.பாமகள் (யா. இராமநாமபுரம் அ.த.க.பாடசாலை), 2 ஆம் இடம் கி.ஆர்த்திகா (காரைநகர் கிழவன்காடு கலா மன்றம்), 3 ஆம் இடம் (ம.சாலினி (காரைநகர் கிழவன் காடு கலா மன்றம்)

**சிறப்புப் பரிவு பெறுவோர்.**

வா.துகிலன் (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை, கோ.நிதுசன் (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), ச.துவாரகா (காரைநகர் கிழவன்காடு கலாமன்றம்), ம.அரன் (யா.புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம், சி.விதுசன் (காரைநகர் கிழவன் காடு கலாமன்றம்.

**தரம்-04.**

1 ஆம் இடம்- வ.ஆர்த்திகா (யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை. 2 ஆம் இடம் சு.தேனிதன் (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), ஈ.நிஷானா (யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்

**சிறப்புப் பரிசு பெறுவோர்.**

அ.விசாகன் யா/வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி), கு.ஜினோத் (யா/ வண்ணை நாவலர் மகாவித்தியால்யம், மு.மாதங்கி (யா.இந்து ஆரம்ப பாடசாலை, சி.நாகஅர்ஜின் (யாழ்.வண்ணை நாவலர் மகா வித்தியாலயம், சு.அனுஷிகா (யா.இந்து ஆரம்ப பாடசாலை)

# பாகிஸ்தான் இராணுவத்தளபதி விஜயம் பிற்போடப்பட்டது

(பாகிஸ்தான்)

பாகிஸ்தான் இராணுவத் தளபதி ஜெனரல் ரஹீல் ஷெரீபின் உத்தியோகபூர்வ இலங்கை விஜயம் பிற்போடப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.



பாகிஸ்தான் இராணுவத் தளபதி நாளை இலங்கை வரவுள்ளதாகவும் இம் மாதம் 21 ஆம் திகதி தியதலாவ இராணுவ கல்வியியற் கல்லூரி யின் கெடெட் பயிற்சி பெற்ற அதிகாரிகளின் பயிற்சி நிறைவு அணிவகுப்பில்- விசேட விருந்தினராகக் கலந்து கொள்வாரென்றும் பாதுகாப்பு அமைச்சு முன்னர் அறிவித்திருந்தது.

தவிர்க்க முடியாத காரணங்களை முன்னிட்டே இவரது இலங்கை விஜயம் பிற்போடப்பட்டதாக அறிவிக் கப்பட்டுள்ளது.

# க.பொ.த. (சா/த) மாதிரி வினாத்தாள்

# G.C.E. (O/L) Examination model Paper

## வரலாறு

1) இலங்கையை ஆட்சிசெய்த ஐரோப்பிய அரசுகளில் "அரசியல் நிலையில் துரித வளர்ச்சி "ஏற்படக்காரணமாக அமைந்துள்ளவர்கள் யார்?

1) ஒல்லாந்தர் 2) போர்த்துக்கேயர்
3) பிரித்தானியா 4) பிரான்சியர்

2) இலங்கையை அரசியல் யாப்பு சீர்திருத்தங்கள் தொடர்பான முக்கிய ஆண்டுகள் சில நிரல் - II இல் தரப்பட்டிருப்பதோடு அவற்றுக்குரிய அரசியல் யாப்பு சீர் திருத்தங்கள் நிரல் - I இல் தரப்பட்டுள்ளன. நிரல் - I இல் உள்ள ஒழுங்கிற்கேற்ப நிரல் - II இல் உள்ளவற்றை ஒழுங்குபடுத்தினால் வரும் சரியான விடை யாது?

| நிரல் - I | நிரல் -II |
|---|---|
| A - சர்வசன வாக்குரிமை வழங்கப்படல் | E- 1912 |
| B - I ஆவது தேசாபதி நாயகம் நியமிக்கப்படல் | F - 1947 |
| C - சட்டவாக்க கழகம் ஆரம்பிக்கப்படல் | G - 1833 |
| D - பாராளுமன்றம் நிறுவப்படல் | H - 1931 |
| | I - 1948 |

1) E.F.G.H 2) H.I.G.F 3) F.G.H.I 4) I.G.F.E

3) இலங்கையின் "டொனமூர் யாப்பின் படி" தேசியத்தலைவர்கள் செயற்பட்ட பணி எத்துறை தொடர்பானது

1) நீதி 2) நிர்வாகம் 3) பாராளுமன்றம் 4) யாப்பு சீர்திருத்தம்

4) A - இலங்கை முழுவதும் ஒரே ஆட்சியின் கீழ் கொண்டுவரப்படல்.
B - உத்தியோகம் சார்பற்ற தொகை அதிகரிக்கப்படல்.
C - பொருளாதாரத்தில் அரசின் ஏகபோக உரிமை ஒழிக்கப்படல்.
D - பிரதேசவாரி பிரதிநிதித்துவத்தின் அறிமுகம்
E - நிர்வாகக் குழு முறைமையின் அறிமுகம்
F - இராஜகாரிய முறை ஒழிக்கப்பட்டமை

மேலே A.B.C.D.E.Fஎன்பவற்றால் குறிக்கப்பட்டுள்ள சிபார்சுகளில் "கோல்புறூக் அரசியல்" சீர்திருத்தத்தின் மூலம் முன்வைக்கப்பட்ட சிபார்சுகள் எவை?

1) A.C.E 2) B.D.F 3) A.C.F 4) A.B.C

5) "டொனமூர் யாப்பின்படி" இலங்கை வாழ் மக்களுக்கு கிடைத்த நன்மைகளில் பின்வருவனவற்றில் பிழையானது எது?

1) மக்கள் அரசியல் அறிவு பெற்றனர்
2) சமுதாய ஏற்றத்தாழ்வுக்குள் குறைக்கப்பட்டமை
3) சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டமை
4) மக்களின் வாழ்க்கைத்தர வளர்ச்சியில் ஸ்தம்பிதம் ஏற்பட்டமை

6) A- சட்டவாக்க சபையின் அங்கத்தவர்களின் எண்ணிக்கை 21 ஆக அதிகரித்தல.
B - வரையறுக்கப்பட்ட வாக்குரிமை வழங்குதல்.
C - சட்டவாக்க கழகத்தின் அதிகாரங்கள் விரிவாக்கப்படல்.

மேற்குறித்த யோசனைகள் எவ்வரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் கீழ் நடைமுறைப் படுத்தப்பட்டது?

1) கோல்புறூக்கமரன் யாப்பு 2) குறுமக்கலம் யாப்பு
3) டொனமூர் யாப்பு 4) மணிங் யாப்பு

7) 1921 ஆம் ஆண்டு பிரித்தானியர்களால் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட மணிங் யாப்பின்படி உத்தியோகப்பற்றுள்ளோரின் எண்ணிக்கை என்ன?

1) 14 பேர் 2) 16 பேர் 3) 11 பேர் 4) 37 பேர்

8) இலங்கையில் பிரதரை தலைமையாக கொண்ட அமைச்சரவையை முதன் முதல் அறிமுகப்படுத்திய யாப்பு எது?

1) 1947 சோல்பரி யாப்பு 2) 1972 1வது குடியரசு யாப்பு
3) 1978 2 ஆவது குடியரசு யாப்பு 4) 1931 டொனமூர் யாப்பு

9) 1972, 1978 என்னும், 2 ஆவது அரசியல் யாப்பின் பிரதான இயல்புகள் கீழே காணப்படுகின்றன அவற்றில் 1978 ஆம் ஆண்டு யாப்புகக்கு பொருத்தமான விடயங்கள் கொண்ட விடை எது?

A - தேசிய அரசுப்பேரவை
B - பாராளுமன்றம்
C - பெயரளவிலான ஜனாதிபதி முறை
D - விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறை
E - நிறைவேற்று அதிகாரம் உடைய ஜனாதிபதி

1) A,B,C,D,E சரியானவை 2) B மட்டும் சரியானது
3) B,D,E சரியானவை 4) A,C சரியானவை

10) இலங்கையின் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி தனது பதவியேற்பின் போது யார் முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொள்வார்?

1) பிரதமர் முன்பாக 2) பிரதம நீதியரசர் முன்பாக
3) சபாநாயகர் முன்பாக 4) எதிர்க்கட்சித்தலைவர் முன்பாக

11) இலங்கையில் விகிதாசாரப்பிரதிநிதித்தவ தேர்தல் முறை பற்றிக் குறிப்பிடும் யாப்பு

1) 1972 ஆம் ஆண்டு 1 ஆவது அரசியல் கு பரசு யாப்பு
2) 1947 ஆம் ஆண்டு சோல்பரி யாப்பு
3) 1978 ஆம் ஆண்டு 2 ஆவது குடியரசு யாப்பு
4) 1931 ஆம் ஆண்டு டொனமூர் யாப்பு

12) 1972 ஆம் ஆண்டு 1 ஆவது அரசியல் குடியரசு யாப்புப்பற்றிய பிழையான கூற்று பின்வருவனவற்றில் யாது?

1) நாட்டின் பிரதான தலைவர் ஜனாதிபதி
2) இலங்கை "சிறிலங்கா" என அழைக்கப்படல்
3) பௌத்தமதம் யாப்பு மூலம் பாதுகாக்கப்படல்
4) சிங்கள மொழி அரசகரும மொழியாகப் பிரகடனப்படுத்தப்படல்

13) 1978 ஆம் ஆண்டு 1 ஆவது அரசியல் குடியரசு யாப்புப்பற்றிய பிழையான கூற்று பின்வருவனவற்றில் யாது?

1) D.S சேனநாயக்கா 2) S.W.R.D பண்டாரநாயக்கா
3) J.R.ஜெவர்த்தனா 4) S.W.W.கன்னங்கரா

14) இலங்கையில் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையில் காணப்படும் பண்புகளில் பின்வருவனவற்றில் சரியானது எது?

1. நாடு பல தேர்தல் தொகுதிகளாக பிரிக்கப்படாமை
2. நாடு முழுவதும் ஒரு தேர்தல் தொகுதியாகவோ பல பண்புகளில் பின்வருவன வற்றில் சரியானது எது?
3. தேர்தல் தொகுதியொன்றின் அதி கூடிய வாக்குகளை பெற்றவர் மட்டும் சட்டசபைக்கு செல்லலாம்
4. விருப்பு வாக்கு முறையானது இங்கு காணப்படாமை

15) இலங்கையில் பிரஜை ஒருவர் வாக்குரிமையை பெற வேண்டுமாயின் அவர் செய்யவேண்டிய பிரதான காரியம் பின்வருவனவற்றில் எது?

1. நல்ல தானதருமங்களைச் செய்யவேண்டும்.
2. அரசாங்கத்தின் கருமங்களை நேர்த்தியாக செய்து முடிக்க வேண்டும்.
3. யாப்புக்களைப்பற்றிய கல்வியில் A தரச்சித்தியைப் பெற வேண்டும்
4. 18 வயது பூர்த்தியடையும் போது கிராம சேவகரிடம் தனது வாக்குரிமை படிவத்தினை பூர்த்தி செய்து வாக்காளர் பதிவேட்டில் தனது பெயரை பதிவு செய்தல்

**கீழே A,B,C,D,E ஆகியவற்றின் கீழே கருத்துச் சோடி வீதம் காணப்படுகின்றன அச்சோடிகள் ஒவ்வொன்றிலும் தரப்பட்டுள்ள முதல் கருத்துக்கும், இரண்டாம் கருத்துக்குமிடையே உள்ள தொடர்பைப் பரிசீலித்து 16 தொடக்கம் 20 வரையான வினாக்களுக்கு விடை தருக**

A -1833 ஆம் ஆண்டு கோல்புறூக் அரசியல் யாப்பு
1978 ஆம் ஆண்டு 2 ஆவது அரசியல் குடியரசு யாப்பு

B - தேசிய அரசுப்பேரவை
மக்கலம் யாப்பு

C - ஜனநாயக வெற்றி
அரசியல் அறிவு படைத்த மக்கள்

D. தொகுதி வாரிப் பிரதிநிதித்துவ தேர்தல் முறை விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறை

E. நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி யுத்தத்தை சமாதானத்தை பிரகடனப்படுத்தல்

16) முதலாவதிற்கும் இரண்டாவதிற்கும் இடையே தொடர்புடைமை காணப்படாத சோடி எது?

1) A 2) B 3) D 4) E

17) இரண்டாவதன் நகர்வின் முதலாவதன் வளர்ச்சி தங்கியுள்ள சோடிப்பதம் எது?

1) A 2) B 3) C 4) E

18) முதலாவதில் ஆரம்பித்த வளர்ச்சியின் நகர்வின் இறுதி விளைவாக இன்றுவரை தாக்கத்தை உண்டுபண்ணும் விதத்தில் இரண்டாவது அமைந்துள்ளது அச்சோடி பதம் எது?

1) A 2) B 3) C 4) D

19) முதலாவது கைவிடப்பட்ட போது இரண்டாவது நடைமுறைப்படுத்தப்பட்டது அச்சோடி யாது?

1) B 2) C 3) D 4) E

20) இரண்டாவதினை நடைமுறைப்படுத்துகின்ற அதிகாரமே முதலாவது ஆகும். அச்சோடி எது?

1) A 2) C 3) D 4) E

## பகுதி - II

A - 1833
B -1931
C - 1947

ஆகிய ஆண்டுகளில் பிரித்தானியர்களால் நடைமுறைப் படுத்தப்பட்ட ஆட்சி மன்றங்களின் பெயரினை தரப்பட்டுள்ள அடைப்பிலிருந்து தெரிவு செய்து A, B,C ஒழுங்கில் விடை தருக?

(பாராளுமன்ற ஆட்சி, சட்டவாக்கக் கழகஆட்சி, அரசுக்கழக ஆட்சி, ஜனநாயக ஆட்சி)

2) D. பாராளுமன்றம்
E. நீதிமன்றம்
F. சர்வஜன வாக்கெடுப்பு

G. நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறை என்பவைகளை நாட்டில் நடைமுறைப்படுத்திய அறிமுகப்படுத்திய நபர்களின் பெயர்களை கேள்வி ஒழுங்கிலேயே குறிப்பிடுக?

3) நிர்வாகம் தொடர்பாக 1833 இல் முன்வைக்கப்பட்ட கோல்புறூக் சட்டவாக்கக் கழக ஆலோசனைகள் / சிபார்சுகள் இரண்டினைக் குறிப்பிட்டு அவற்றினை விளக்குக. 4.1931 ஆம் ஆண்டு டொனமூர் யாப்பின்படி இலங்கை வாழ் மக்கள் அநேக நன்மையான விடயங்களை பெற்றுக்கொண்டார்கள் அவ்வாறான நன்மைகள் ஏதாவது இரண்டு நன்மைகளைக் குறிப்பிட்டு விளக்குக.

2) 1.1972 ஆம் ஆண்டு 1 ஆவது அரசியல் குடியரசு யாப்பின் முக்கிய அம்சங்கள் ∴ அவ் யாப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் 3 குறிப்பிடுக?

3) 1978 ஆம் ஆண்டு 2 ஆவது அரசியல் குடியரசு யாப்பின் படி அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டால் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் இரண்டினை குறிப்பிட்டு அவற்றினை விளக்குக?

4) ஜனநாயக ஆட்சி நிலவும் இலங்கை நாட்டில் "நீர் ஒரு அரசியல் தலைவராக" மக்களால் தெரிவு செய்யப்படுகின்றீர் எனவே நீர் ஓர் நம்பிக்கையின் தலைவராக தலைவியாக நாட்டின் ஜனநாயகத்தை பாதுகாக்க எவ்வாறான செயற்பாடுகள்/ பணிகளை மேற்கொள்வீர்கள் என்பதினை மூன்று விடையங்களுக்கு ஊடாக விளக்குக.

1) பின்வரும் நாடாளுமன்றம் பற்றிய விடயங்களின் தகவல்களை கீழே அடைப்பில் தரப்பட்ட விடயங்களில் தெரிவுசெய்க.

A. நாடாளுமன்றம் முதல் முதல் அறிமுகப்படுத்தப்பட்டது.
நாடாளுமன்றத்தின் 225 உறுப்பினர்களும் தேர்தல் மூலமே தெரிவு செய்யப்படுவர்
நாடாளுமன்றத்தின் மிகமுக்கியமான ஊழியர்
(பிரதமர் சரியான கூற்று, 1972 ஆம் ஆண்டு யாப்பு, செயலாளர் நாயகம், பிழையான கூற்று, 1947 ஆம் ஆண்டு யாப்பு)

வாக்குரிமை விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் என்னும் பதத்தின் மூலம் நீர் விளங்கிக்கொள்வது என்ன என்பதை தனித்தனியாக குறிப்பிடுக

ஒரு வாக்குரிமையை பெற்றுக்கொண்ட நபர், தனது வாக்குரிமையை பயன்படுத்தும் போது கவனிக்க வேண்டிய இரண்டு விடயங்களினை குறிப்பிடுக
விகிதாசாரப் பிரதிநிதித்தவ தேர்தல் முறையின் மூலம் கிடைக்கும் இரண்டு நன்மைகளைக் குறிப்பிட்டு அவற்றினை விளக்குக.

**4) சுருக்கமான விடை தருக.**
1. வாக்குரிமையை கவனமாக பயன்படுத்த மக்களுக்கு என்ன தேவை?
2. இலங்கையின் மியுர் சட்டமன்றமாக கருதப்படுவது எது?
3. தற்போதைய நாட்டு யாப்பின் படி முப்படைகளின் தளபதி யார்?
4. ஜனாதிபதி பதவி வெற்றிடமாகும் சந்தர்ப்பம் ஒன்று குறிப்பிடுக?

5) 1972 ஆம் ஆண்டு 1 ஆவது அரசியல் குடியரசு யாப்பில் காணப்பட்ட ஒரு குறைபாடு?

6)"யாப்புக்கள்" ஒரு நாட்டின் ஆட்சிக்கும் அரசாங்கத்திற்றும் மக்களுக்கும் எப்படியான நன்மைகளைக் கொடுக்கின்றது அவற்றில் ஒன்று குறிப்பிடுக.

# தரம் - 10 மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்

## கணிதம்

1) 7 cm ஆரையுடைய வட்டம் ஒன்றின் சுற்றளவு யாது?

2) செவ்வக வடிவான மைதானம் ஒன்றின் நீளம் 30m அகலம் 20m ஆகும். அம் மைதானத்தை சுற்றி 3 வரி முட்கம்பி வேலி அமைப்பதற்கு தேவையான முட்கம்பியின் நீளத்தைக் காண்க?

3) ஒரு செவ்வகத்தின் நீளம் 20 cm அகலம் 15cm எனின் அதன் சுற்றளவு யாது?

4) ஒரு செவ்வகத்தின் நீளம் 40 cm அகலம் 20cm எனின் அதன் சுற்றளவு யாது?

5) ஒரு பக்க நீளம் 12 cm கொண்ட சதுரத்தின் சுற்றளவு யாது?

6) ஒரு பக்க நீளம் 15 cm கொண்ட சதுரத்தின் சுற்றளவு யாது?

7) சதுரம் ஒன்றின் சுற்றளவு 40 cm எனின் அதன் ஒரு பக்க நீளம் யாது?

8) நீளம் 20 cm உடைய ஒரு செவ்வகத்தின் சுற்றளவு 60 cm எனின் அதன் அகலம் யாது?

9) ஒரு செவ்வகத்தின் நீளம் 40cm அதன் சுற்றளவு 110 cm எனின் அதன் அகலம் யாது?

10) அரைவட்ட வடிவான தடாகம் ஒன்றின் சுற்றளவு 18 m எனின் அதன் ஆரையைக் காண்க?

11) அரைவட்டம் ஒன்றின் சுற்றளவு 72 cm எனின் அதன் ஆரை எவ்வளவு?

12) அரைவட்டம் ஒன்றின் சுற்றளவு 36 cm எனின் அதன் ஆரை எவ்வளவு?

13) ஒரு செவ்வகத்தின் நீளம் 8cm அகலம் 5 cm எனின் அதன் சுற்றளவு யாது?

14) 7cm ஆரையையுடைய ஒரு அரைவட்ட வடிவ தகரத்தின் சுற்றளவு யாது?

15) 14 cm ஆரையுடைய ஒரு கால்வட்ட வடிவ மீதி கல்லின் சுற்றளவு யாது?

16) ஒரு அரைவட்ட வடிவ மிதி கல்லின் சுற்றளவு 144cm எனின் அக்கல்லின் ஆரை யாது?

17) பக்கங்கள் 30m நீளமுள்ள சமபக்க முக்கோணி வடிவ விளையாட்டு இடத்தின் சுற்றளவும், அகலத்தைப் போல் 1 ½ மடங்கு நீளமுள்ள செவ்வக வடிவ விளையாட்டு இடத்தின் சுற்றளவும் சமனாயின் செவ்வக வடிவ விளையாட்டு இடத்தின் நீளம் யாது?


18) 7cm ஆரையுடைய ஒரு வட்டத்தின் சுற்றளவு யாது? அச் சுற்றளவின் இரு மடங்கு சுற்றளவுள்ள ஒரு வட்டத்தின் ஆரையைக் காண்க?

19) 40 m நீளமும் 9 m அகலமும் உள்ள செவ்வக வடிவ பூந்தோட்டத்தின் ஒருமூலை விட்டத்தின் நீளத்தைக் காண்க?

20) ஒரு மணிக்கூட்டின் மணி முள்ளும் நிமிடமுள்ளும் 4 cm, 6 cm நீளமுடையன. இரண்டு நாட்களில் அவற்றின் முனைகள் தனித்தனி சென்ற தூரத்தைக் காண்க?


21) வட்ட வடிவமான ஒரு ஓட்டப் பாதையின் உள் சுற்றளவும், வெளிச் சுற்றளவும் முறையே 352m, 396m ஆயின் அந்த ஓட்டப் பாதையின் அகலத்தைக் காண்க?

22)





(2x-1)cm, (x+1)cm, (3x-2)cm எனும் நீளங்களை உடைய பக்கங்களைக் கொண்ட முக்கோணி ஒன்று உருவில் காட்டப்பட்டுள்ளது. இம் முக்கோணியின் சுற்றளவு 64 cm எனின்.


1. x இன் பெறுமானத்தைக் காண்பதற்கான சமன்பாட்டைத் தருக?
2. x இன் பெறுமானத்தைக் காண்க?
3. x இன் பெறுமானத்தைக் கொண்டு ஒவ்வொரு பக்கங்களினதும் பெறுமானங்களை தனித்தனியே காண்க?





23) உருவில் உள்ள முக்கோணியின் சுற்றளவு 69cm எனின் அதன் ஒவ்வொரு பக்கங்களினதும் நீளங்களைக் காண்க?


24) உருவில் AB = AC ஆயின் முக்கோணி ABC இன் சுற்றளவு யாது?









26) படத்தில் காட்டப்பட்டிருப்பது ஆரை 3.5cm ஆகவும் கோணம் 150° ஆகவும் உள்ள ஒரு ஆரைச்சிறை ஆகும். அதன் சுற்றளவு யாது?




27) நிழற்றிய பகுதியின் சுற்றளவு யாது?


28) உருவின் சுற்றளவு யாது?





29) உருவின் சுற்றளவு 40 2/9 cm எனின் அதன் ஆரை யாது?


30) உருவின் சுற்றளவு யாது?









31) உருவில் காணப்படுவது காணி ஒன்றின் வரைபடம் ஆகும். அதனை சுற்றி 3 நிரை முட்கம்பி அடிப்பதற்கு தேவையான முட்கம்பியின் நீளத்தைக் காண்க?

**32 தொடக்கம் 48 வரையான உருக்களின் சுற்றளவுகளைக் காண்க?**



# பாரம்பரிய பண்பாட்டை பறைசாற்றும்
# வடமாகாணத்தின் பட்டமேற்றும் விழா

(யாழ்ப்பாணம்)

வடமாகாண ஆளுநர் செயலகத்தின் எற்பாட்டில் முதல் முறையாக மாகாண அபிவிருத்தியில் மக்களின் பாரம்பரியங்களையும், கலை, கலாசாரங்களையும் ஏற்படுத்தும் வகையிலான வடமாகாணத்தின் பட்டம் ஏற்றும் விழா எதிர்வரும் 21 ஆம் திகதி யாழ்.துரையப்பா விளையாட்டு அரங்கில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் தெரிவித்தார்.

கடந்த 30 வருடங்களாக மக்கள் இன்னல்களுக்கு மத்தியில் வடுக்களுடன் வாழ்ந்து வந்த நிலையில் தற்போது மக்கள் அதனை மறந்து பாரம்பரியங்கள், பண்பாடுகளையும் வளர்க்கும் நோக்குடன் ஈடுபட்டு வருகின்றனர். அதே நேரத்தில் புதிய பரிணாமங்களையும் உள்ளடக்கிய வளர்ச்சியின் ஊடாக சமுதாய அபிவிருத்தியை முன்னோக்கிய வடமாகாண ஆளுநரின் சிந்தனையிலும், வழிநடத்தலிலும் பல்வேறு கருத்திட்டங்கள் தற்போது வடமாகாணத்தில் நடைபெற்றுவருகின்றன.

இதன் ஊடாக பட்டம் ஏற்றும் விழா ஆரம்பித்திருப்பதாக ஆளுநரின் செயலாளர் குறிப்பிட்டார்.

இதில் உள்ளூர், மற்றும் வெளியூர் பட்டம் செய்யும் கலையில் புகழ்பெற்ற நிபுணர்களால் உருவாக்கப்பட்ட 100 வர்ணப்பட்டங்கள் ஒரே நேரத்தில் பறக்கவிடயிருப்பதாகவும் இதில் காலை, மாலை என இரு நிகழ்வுகளாக நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இதில் காலை பட்டம் கட்டுவது தொடர்பான பயிற்சிபட்டறையை தென் இலங்கை கலைஞர்கள் வழங்கயிருக்கின்றனர்.

மாலை வர்ணப்பட்டங்கள் ஏற்றும் விழா இடம் பெறும் எனவும் இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமா காண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி கலந்து கொண்டு விழாவை ஆரம்பித்து வைக்கயிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.(48)

## கச்சாய் பகுதியில் தங்கூசி வலைகள் மீட்பு

தென்மராட்சி கச்சாய்ப்பகுதியில் நேற்று யாழ்.கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலை அடுத்து அங்கு மேற்கொள்ளப்பட்ட திடீர் தேடுதல் நடவடிக்கையின் போது கடற்கரையோரமாகவும் படகுகளிலும் இருந்து தடை செய்யப்பட்ட 5 இலட்சம் ரூபா பெறுமதியான தங்கூசி வலைகள் 14 தொகுதிகள் அநாதரவாக கிடந்த நிலையில் கைபற்றப்பட்டுள்ளதாக யாழ்.கடற்றொழியல் வளததிணைக்களத்தின் சிரேஸ்ட தொழில் பரிசோதர் ரமேஸ் கண்ணா தெரிவித்துள்ளார்.

நேற்று அதிகாலை 6 மணியளவில் மேற்படி பகுதியில் இந்த தடை செய்யப்பட்ட தங்கூசிவலைகள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் இவற்றை சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்தில் பாரப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ரமேஸ்கண்ணா தெரிவித்துள்ளார். மேலும் தொடர்ந்து இவ்வாறான நடவடிக்கை திணைககளத்தால் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (பா,25)

## ஆன்மீக நிகழ்வு

தொண்டைமானாறு செல்வச் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டு பேரவையினால் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் ஆன்மீக நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

இதில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஆலய பூசை முடிவுற்றதுடன் ஆச்சிரமத்தில் தேவிபாகவதம் என்னும் விடயம் பற்றி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ.குமாரவேல் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

## வணிகப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயத்தால் நடாத்தப்படும் வணிகத்துறை சார் கோட்டமட்டப் போட்டிகள் எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இவ்வணிகத்துறைசார் போட்டிகள் தரம் 10, 11 மற்றும் உயர்தர மாணவர்களிடையே வணிக பாட அறிவை விருத்தி செய்யும் முகமாக குறுவினா விடை பேச்சு, கட்டுரை என மூன்று போட்டிகளாக நடத்தப்படவுள்ளன.

## பயிற்சிப்பட்டறை

(யாழ்ப்பாணம்)

சிறுவர் உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வுப் பயிற்சிப் பட்டறையொன்று நேற்று முன்தினம் திங்கட்கிழமை மானிப்பாய் இந்துக்கல்லூரியின் நூலக மண்டபத்தில் கல்லூரியின் உப அதிபர் பெ.வசந்தன் தலைமையில் இடம்பெற்றது.

மானிப்பாய் பொலிஸாரும் சண்டிலிப்பாய் பிரதேச சிறுவர் நன்நடத்தை உத்தியோகத்தர் மற்றும் வலிகாமம் வலய முறைசார பிரிவினரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில் 100 இற்கு மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். (63)

## முரசின் இன்றைய பலன்


(18.06.2014 புதன்கிழமை)



ஜய வருஷம் ஆனி மாதம் 03 ஆம் திகதி.
மரணயோகம் / சஷ்டி.
அவிட்ட நட்சத்திரம் காலை 06.10 வரை. பின் சதயம்.
இராகு காலம் 11.53 -01.23 வரை. சுபநேரம் 04.23 - 05.53 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | கைவிட்டிருந்த பிரச்சினைக்கு தீர்வு காண நேரடியாகச் சென்று மனம்விட்டுப் பேசியதால் சுமூகநிலைக்கு வருதல். புதிய ஒப்பந்தங்களைப் பெறுவதற்கு உரியகாலம் வருமளவும் பொறுமை பூணல். |
| ரிஷபம் | குடும்பத்தில் பிரச்சினை ஏற்பட்ட போது விட்டு கொடுப்பதினால் நன்மை ஏற்படும். முயற்சிகளில் இருந்துவந்த மந்தநிலை நீங்குவதினால் உற்சாகத்துடன் செயற்படல். |
| மிதுனம் | கௌரவக்குறைவு ஏற்பட்டவேளை நிகழ்வுக்கு சமூகம் கொடுக்கச் செல்லாமை. குடும்பத்தில் ஏற்பட்ட சுப நிகழ்வினைக்கொண்டாட கடன்படும் நிலைக்கு தக்கவைத்தல். |
| கடகம் | செய்யாத செயலுக்காக பழிசுமத்தப்பட்டு கௌரவம் பாதிக்கப்படல். மதிநுட்பத்தை பயன்படுத்தி அரிய செயல் ஒன்றைச் செய்து முடிப்பீர்கள் |
| சிம்மம் | சுபநிகழ்வு நடாத்துவதற்கு மண்டபம் கிடைக்காமையினால் மனையில் அரங்கேற்ற முயற்சி செய்தல். தம்பதியரின் சுமூக உறவு பாதிக்கப்பட்டமையால் கவலை. |
| கன்னி | பிரயாணத்தின் போது விழிப்புடன் இருப்பதால் திருட்டு போகாத நிலை ஏற்படல். நாய்களில் தொல் லையால் அச்சநிலை ஏற்படல். |
| துலாம் | ஞாபகமறதியினால் பொருளைக் கைவிட்டு அவதியடைதல். புத்திமதியை அலட்சியம் செய்ததால் துயர் நிலைக்குள்ளாகிவிடல். |
| விருச்சிகம் | உங்கள் எதிர்காலம் பற்றிச்சிந்தித்த வேளையில் சோதிடரை அணுகிபலன் அறிதல். தொழில் முயற்சிகள் பிறர் பாராட்டும் வகையில் திருப்பம் ஏற்படல். |
| தனுசு | காலாவதியான உணவுப்பொருட்களை உட்கொண்டதால் சௌக்கியம் பாதிப்படைதல். ஆளரவம் இல்லாத வீட்டில் திருடரின் கன்னக்கோல் நிகழ்வு பலிதமடைதல். |
| மகரம் | வேலைச்சுமையில் மூழ்கி இருப்பதினால் தேகநலன் கேடு ஆக்கிரமிக்கும். பணக்கொடுக்கல் வாங்கல்களில் சிக்கல் நேரிடமால் சமூகமாக நடந்தேறல். |
| கும்பம் | தொழிலைக் கெடுப்பதற்காக தேடிவந்த நபர்களை திசைதிருப்பி விடுதல். மங்கள நிகழ்வில் ஏற்பட்ட செலவினை ஏற்க இரு பகுதி யாருக்குமிடையே சச்சரவு உண்டாதல். |
| மீனம் | புதிய கற்கை நெறிகள் பயில விண்ணப்பிக்க ஆர்வம் பிறத்தல். செய் தொழிலில் சிறந்த பலன்கிடைத்தல். |



## குருப்பெயர்ச்சி பலாபலன்கள்

(13.06.2014 முதல் 04.07.2015 வரை)

### மீனம்

(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி)

**கருணை மனப்பான்மை கொண்ட மீனராசிக் காரர்களே!**

குருபகவான் இது வரை 4 இல் இருந்து பல்வேறு இன்னலைத் தந்திருப்பார். அவர் குடும்பத்தில் பல பிரச்சினைகளை உருவாக்கி இருப்பார். இந்த நிலையில் குரு பகவான் ராசிக்கு 5 ஆம் இடத்திற்குச் செல்கிறார். இது சிறப்பான நிலை. இதன் மூலம் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலைக்கும். திருமணம், கிரகப்பிரவேசம் போன்ற சுப நிகழ்ச்சிகளை நடத்தி வைப்பார். பொருளாதார வளத்தை அதிகரிக்கச் செய்வார். பெண்களால் மேன்மை கிடைக்கும். குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். வாழ்வில் பொருளாதார வளம் காணலாம். இது தவிர குருவின் 5,7 ஆம் பார்வைகளாலும் நன்மை அதிகரிக்கும். தடைகள் நீங்கி முயற்சி அனைத்தும் எளிதாக நிறைவேறும். பணப்புழக்கம் அதிகரிப்பதால் சேமிப்புக் கூடும்.

கடந்த ஆண்டு இருந்து வந்த குடும்ப பூசல் மறையும். கணவன், மனைவி இடையே ஒற்றுமை ஏற்படும். பிரிந்து இருந்த சொந்தங்கள் ஒன்று சேரும். தடைப்பட்டு வந்த திருமணம் இனி மளமளவென நிறைவேறும். சிலருக்கு வாகனம் வாங்க வாய்ப்பு கிடைக்கும். உறவினர் வகையில் விருந்து, விழா என்று அடிக்கடி சென்று வருவீர்கள். பெரியோர்களின் ஆலோசனையும் கிடைக்கப் பெறுவீர்கள். மனம் விரும்பிய வகையில் புத்தாடை அணிகலன் வாங்கி மகிழ்வீர்கள். உச்சவீடான கடகத்தில் இருக்கும் குருவின் 5, 7, 9 ஆம் பார்வைகள் மூன்றும் முறையே ராசி, 9, 11 ஆகிய இடங்களில் பதிகிறது. இதன் மூலம் வாழ்வில் நன்மை உண்டாகும். ராசியில் பதிவதால் செய்யும் எதிர்கால நன்மை கருதிச் செய்யும் புதிய முயற்சிகளில் வெற்றி உண்டாகும். தந்தையின் உடல்நலனில் அக்கறை காட்டுவீர்கள். அவரின் அன்பும், ஆசியும் வாழ்விற்கு துணை நிற்கும்.

**பணியாளர்கள்:**

பணியாளர்கள் சிறப்பான பலனை எதிர்பார்க்கலாம். இதுவரை தடைப்பட்டு வந்த பதவி உயர்வு இனி கிடைக்கும். மேல் அதிகாரிகளின் ஆதரவு இருக்கும். சிலர் அதிகார அந்தஸ்த்துக்கு உயர்த்தப்படுவர். விரும்பிய இடத்திற்கு பணி, இட மாற்றம் கிடைக்கும். சக ஊழியர்கள் உதவிகரமாக இருப்பர். வேலையின்றி இருப்பவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். சக பெண் ஊழியர்களால் நன்மை உண்டாகும்.

**பெண்கள்:**

வாழ்வில் சந்தோஷம் நிலைத்திருக்கும். கணவரின் அன்பும், அரவணைப்பும் கிடைக்கும். உறவினர் இல்ல விசேடங்களை தலைமையேற்று நடத்தி வைப்பீர்கள். கன்னியருக்கு விரும்பிய வகையில் மணவாழ்வு அமையும். புதுமண தம்பதியருக்கு குழந்தைப் பாக்கியம் கிடைக்கும்.

**கலைஞர்கள்:**

நல்ல புகழும் பெருமையும் கிடைக்கப் பெறுவர். புதிய ஒப்பந்தம் மூலம் நல்ல வருமானம் கிடைக்கும். சிலருக்கு அரசிடம் இருந்து விருது கிடைக்க வாய்ப்புண்டு.

**மாணவர்கள்:**

நன்கு படிப்பதால் இந்த ஆண்டு கல்வியில் சிறப்பான பலனை காணலாம். கடந்த ஆண்டில் இருந்த தேக்க நிலை மாறும். மேற்படிப்பு படிக்க நினைப்போருக்கு விரும்பிய கல்வி நிறுவனத்தில் படிக்கும் வாய்ப்பு கிடைக்கும். சிலருக்கு அயல்நாடு சென்று படிக்க யோகமுண்டாகும்.

**குரு அதிசார பலன்!**

குருபகவான் டிசம்பர் 3 இல் அதிசாரம் பெற்று சிம்ம ராசிக்கு மாறுகிறார். 22 அம் திகதி வரைஅதில் இருப்பார். இந்தக் காலத்தில் மன உளைச்சலையும், உறவினர் வகையில் பகையையும் உருவாக்குவார். பணத்தட்டுப்பாடும் உருவாகும். முயற்சியில் தடைகளும் உருவாகி மறையும்.

**பரிகாரம்!**

ராகு - கேது சாதகமற்ற நிலையில் உள்ளனர். சந்தர்ப்பம் கிடைக்கும்போது அர்ச்சனை செய்யுங்கள். துர்க்கை அம்மனை எலுமிச்சை விளக்கு ஏற்றி வணங்கி வாருங்கள். ஆதரவற்ற மூதாட்டிக்கு இயன்ற உதவி செய்யுங்கள். பௌர்ணமி நாளில் வீட்டில் விளக்கு ஏற்றி ஸ்ரீ ரங்கம் ரங்கநாதரை வணங்கி ஏழைகளுக்கு இயன்ற உதவி செய்யுங்கள். கணவரை இழந்த மூதாட்டிகளுக்கு இயன்ற உதவி செய்யுங்கள். ஆஞ்சநேயரை வணங்கி வாருங்கள். சந்தர்ப்பம் கிடைக்கும்போது நவக்கிர கங்களை சுற்றி வாருங்கள். பச்சைமா மலைபோல் மேனி பவளவாய் கமலச்செங்கண் அச்சுதா அமரரேறே ஆயர் தம் கொழுந்தே என்னும் இச்சுவை தவிர யான்போய் இந்திர லோகமாளும் அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே. என்ற தேவாரத்தை துதிசெய்யுங்கள்.

# தீவிரவாதிகளின் சரணாலயமாக பாகிஸ்தான் மாற அனுமதிக்க முடியாது

## பிரதமர் நவாஸ் ஷெரீப் தெரிவிப்பு




தீவிரவாதிகளின் சரணாலயமாக பாகிஸ்தான் மாறுவதற்கு அனுமதி அளிக்கப்படமாட்டாது என பிரதமர் நவாஸ் ஷெரீப் தெரிவித்துள்ளார்.

கராச்சி வானூர்தி தளத்தின் மீது போராளிகள் கடந்த வாரம் மேற்கொண்ட தாக்குதலுக்கு பதிலளிக்கும் வகையில் கடந்த சில தினங்களாக வடக்கு வசிரிஸ்தான் பகுதியில் உள்ள தாலிபான் மறைவிடங்கள் மீது பாகிஸ்தான் ராணுவ வானூர்திகள் கடும் தாக்குதல் மேற்கொண்டு வருகின்றது.

இந்த தாக்குதலில் நூற்றுக்கும் அதிகமான தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாகவும் பலர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் இராணுவம் தெரிவித்துள்ளது.


இந்த நிலையில், இந்தத் தாக்குதல் தொடர்பில் விளக்கம் அளித்து பாகிஸ்தான் நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில் பிரதமர் நவாஸ் ஷெரீப் நேற்று முன்தினம் உரையாற்றினார்.

தீவிரவாதத்தால் பாகிஸ்தான் பல பில்லியன் டொலர்களை இழந்துள்ளது.

தீவிரவாதத்தை ஒழிக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் இராணுவ நடவடிக்கை நாட்டின் அமைதிக்கான புதிய தொடக்கமாக இருக்கும் என்றும் பிரதமர் நவாஸ் குறிப்பிட்டார்.

# அமெரிக்காவை தாக்கியது இரட்டைச் சூறாவளி



(நியூயோர்க்)

அமெரிக்காவில் உள்ள ஒக்லகோமா மாகாணத்தில் இரட்டைச் சூறாவளி புயல் தாக்கியது. மணிக்கு 265 கி.மீற்றர் வேகத்தில் வீசிய புயலுக்கு பில்கர், ஒமாஹா, நார்போல்க், நெப்ராசகா, ஸ்டேன்டன் உள்ளிட்ட பகுதிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன.


பில்கர் நகரில் மின்சாரம், குடிநீர், சாக்கடை பணிகள் முற்றிலும் முடங்கின. ஒமாஹாலில் இருந்து பொது மக்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டனர்.

ஸ்டேன்டன், கமிங், வேயின் ஆகிய பகுதிகளில் பொது மக்கள் வெளியே செல்லாமல் வீடுகளுக்குள் முடங்கி கிடந்தனர். ரோடுகள் மூடப்பட்டதால் பில்கர் பகுதியில் வாகனங்கள் ஓடவில்லை.

பல வீடுகள் மற்றும் கட்டடங்கள் இடிந்து தரைமட்டமாயின. ரோடுகளில் இடிபாடுகள் சிதறிக் கிடந்தன. ரோட்டோரங்களில் வாகனங்கள் உடைந்து நொறுங்கிக் கிடந்தன.

இந்தச் சூறாவளிப் புயலுக்கு ஒருவர் பலியானார். 16 பேர் காயம் அடைந்தனர். அவர்கள் அனைவரும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# தி.மு.க.கட்சியிலிருந்து நடிகை குஷ்பு விலகல்



தி.மு.க.,வில் என் அர்ப்பணிப்பும் உழைப்பும் ஒருவழிப் பாதையாக இருப்பதால், கனத்த இதயத்துடன் விலகும் முடிவை மேற்கொள்கிறேன், என நடிகை குஷ்பு கூறியுள்ளார்.

இதுகுறித்து, அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியதாவது,

என்னை இல்லத்தின் ஒருத்தியாக ஏற்றுக் கொண்ட, தமிழ் மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு தி.மு.க.,வில் இணைந்து, பொது வாழ்வில் ஈடுபட்டேன். தி.மு.க.,வில் இணைந்த நாள் முதல், எனக்கு அளிக்கப்பட்ட பணியை, நூறு சதவீத சிரத்தையுடன் நிறைவேற்றியதை, தி.மு.க.,வில் பொறுப்பில் உள்ளவர்கள் முதல், அடிப்படைத் தொண்டர்கள் வரை, அனைவரும் அறிவார்கள். ஆனால், என் அர்ப்பணிப்பும், உழைப்பும் ஒரு வழிப்பாதையாக, தி.மு.க.வில் நீடிக்கிறது. இந்நிலையில், நான் தேர்ந்தெடுத்த பாதையும் பயணமும் தாங்க இயலாத மன அழுத்தத்தை ஏற்படுத்துகிறது. எனவே, தி.மு.க.விலிருந்தும் அதன் அடிப்படை உறுப்பினரிலிருந்தும் விலகுவது என்ற முடிவை, கனத்த இதயத்துடன் மேற்கொள்கிறேன். இவ்வாறு, குஷ்பு கூறியுள்ளார்.


# இந்தியா–பூட்டான் உறவு கலக்கம் அடையவில்லை

## என்கிறது சீனா

(ஷிங்குவா)

இந்தியா - பூடான் இடையேயான நல்லுறவு மேம்படுவதால் தங்கள் நாடு கலக்கம் அடையவில்லை என்று சீனா தெரிவித்துள்ளது.

இரு நாட்டுத் தலைவர்கள் சந்திப்பு தொடர்பாக சீன வெளியுறவுத்துறை அமைச்சக செய்தித் தொடர்பாளர் ஹவா சுவிங் கூறுகையில், பூடானுடன் எங்கள் நாட்டுக்கு ராஜாங்க உறவு இல்லையென்றாலும் இரு நாடுகளும் நட்புறவை கடைப்பிடித்து வருகின்றன. அண்டை நாட்டு நல்லுறவை மேம்படுத்தத் தயாராக உள்ளோம்.



இந்தியா - பூடான் இடையேயான நல்லுறவு மேம்படுவதால் எங்கள் நாடு கலக்கம் அடையவில்லை என்று தெரிவித்தார்.


# UNIVERSITY OF JAFFNA SRILANKA

## Vacancy

**Applications will be recived by me up to 14 th from suitably qualified candidates for the following post**

1.Post-STENOGRAPHER GRII (English)
(university of jaffna and vavuniya campus of the university of jaffna)

**QUALIFICATIONS**

I.G.C.E (Ordinary Level) Examination in six subjects at not more than two sitting with creadit passes in three subjects including English

II. proficiency in english stenagraphy with the following minium speeds
shorthand- 80 w.p.m
typing- 35 w.p.m. (manual type writer)
55 w.p.m (computer)

**Notes**

a) it suitable candidates are not available for recruitment according to the schme of recruitment. applicants with lesser proficience than speified. but who have successfully followed a course in english/Sinhala/tamil stenagraphy (as the case may be) of a recongnized insitution of which the duration is not less than one year may be recruited as a trainee english/ sinhala/ tamil stenographers (as the case may be) on a fixed salary equivalent to the initial of the salary scale carrying the salary code u-MN 1 (III) per month. they may be placed in grade II within three years if they attain the speciffied proficiency. A tranee who does not attain the specified proficiency three years shall be discontinued.

b) the trainee period will not be taken into consideration for reckoning the required period for promotions

Salary scale-UMS 1 (III A) Rs 16070-17X155-18705p.m)
selection: Test and by interview
Age Limit: Not more than 45 years
(Note-Age limit is not applications in the government /departments/ State corporation and statutory bodies)

**Statutory benefits**

1. Allowance approved by the university grants commission
2. Membership in universites provident fund and pension schime in the university system
3. gratuity payments
4.Employment trust fund benefits
5. free medicial care

Application forme may be obtained from the establishment branch (Non acadmic) university of jaffna, thirunelvely jaffna either in person or by post on a payment of Rs 100/= per application form

Those who wish to obtain application forms by post are requested to send a money order/postal order drawn in favour of Bursar,university of jaffna,Thirunelvely, jaffna together with a self addressed rs 5.00 stamped envelope of 23X10 cm in size

Application forms and other details will also be available in the university website www.jfn.ac.lk those who wish to send the application forms downloaded from the university website should attach a money order/postal order for Rs 100/= to the applications forms drawn in favor of the bursar university of jaffna.

Duly completed application form should be sent under registered cover to reach the senior Assistant registrar/ Establishment branch (Non Acadmic) university of jaffna thirunelvely, jaffna on or before 14.07.2014.

Applications sent on the specified form only will be accepted Applications received after the closing date or ilegible and incomplete applications will be rejected without intimation.

those who are in public service/corporations/statutory bodies should forward their applications through their respective heds of departments/corporations/boards

Advance copies of applications may be sent in the first instance. However no such applicant will be considered for the appointment if the applications routed through the head of department is not recived.

Registrar
2014.06.13

(C/3712)

# அடிப்படை வசதிகளுக்கு பஞ்சம் பூநகரி சந்தையில் தொடரும் அவலம்

(முழங்காவில்)

பூநகரி நகர்ப்பகுதியில் காய்கறி வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த வர்த்தகர்களை அண்மையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட சந்தை வளாகத்தில்தான் வியாபாரம் செய்யமுடியுமென பூநகரி பிரதேச சபை நிர்வாகம் கண்டிப்பான உத்தரவைத்தொடர்ந்து அங்கு வியாபாரத்தை மாற்றியதால் தினமும் வியாபாரமின்றி சேதமடையும் மரக்கறி வகையால் பல ஆயிரக்கணக்கான ரூபா நட்ட மேற்பட்டதாக சந்தை வியாபாரிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

சந்தை வளாகத்தில் கிணறு இல்லாத நிலையில் பிரதேச சபையால் தண்ணீரும் வழங்கப்படாமல் எதுவித வசதிகளுமில்லாமல் இருப்பதாக தெரிவிக்கின்றனர். மீண்டும் தமது வியாபாரத்தை நாளைமுதல் வாடியடிப்பகுதிக்கு மாற்ற உள்ளதாக தெரிவிக்கின்றனர்.

தமக்கு பிரதேச சபை அளித்த உறுதிப்பாட்டை மீறி பல கடைகளில் மரக்கறிவகைகள் விற்கப்படுவதை சபை நிர்வாகம் தடுக்கவில்லை என விசனம் தெரிவிக்கின்றனர். (112)

# கடல் நீரை சுத்திகரிக்கும் திட்டம் நெடுந்தீவில் விரைவில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவில் சுமார் அறுபது மில்லியன் ரூபா செலவில் கடல் நீரை நன்நீராக மாற்றும் திட்டம் ஒன்று நடை முறைப்படுத்தப்படவிருப்பதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை பொறியியலாளர் பாலேந்திரா. தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ். ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

இதற்கென நெடுந்தீவில் கடல் நீரை நன்நீராக மாற்றும் ஆர். 'ஓபிளாண்ட்' ஒன்று நிறுவப்படவுள்ளதாகவும் ஒருவருடத்திற்குள் இந்தப்பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு திட்டம் நடைமுறைப்படுத்தப்படவிருப்பதாகவும் மேலும் அவர் தெரிவித்துள்ளார். (பா)

# நிதிஉதவியை நிறுத்தியது பிரான்சிய நிறுவனம்
# இரணைமடு அபிவிருத்திக்கு ஆப்பு

(யாழ்ப்பாணம்)

இரணைமடு அபிவிருத்திக்காக நிதி உதவி வழங்க ஒப்புதல் வழங்கிய பிரான்சிய அபிவிருத்தி முகவர் நிறுவனம் தனது உதவியை நிறுத்தியுள்ளது.

இவ்வாண்டின் இரண்டாம் காலாண்டுக்கான மாகாண திட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று வவுனிக்குளம் நீர்ப்பாசனத் பொறியியலாள்ர் காரியாலயத்தில் நடைபெற்றது. பிரதம செயலாளர் திருமதி ரமேஸ் விஜயலட்சுமி இக்கூட்டத்திற்கு தலைமை தாங்கினார். நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி நடேசபிள்ளை ரஞ்ஜனியும் கலந்து கொண்டார். நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை என்பவற்றினால் நடைமுறைப்படுத்தப்படும் இரணைமடு குள அபிவிருத்தி மற்றும் யாழ்-கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டம் என்பன தொடர்பாக இங்கு கலந்துரையாடப்பட்டன.

இதன் போதே இந்தத் தகவல் அங்கு வெளியிடப்பட்டது.

கூட்டத்தில் நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சின் சார்பாக கலந்து கொண்ட திருமதி நடேசபிள்ளை ரஞ்ஜனி யாழ்.-கிளிநொச்சி நீர்வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டத்திற்கு நிதியுதவி வழங்கும் ஒரு நிறுவனங்களில் ஒன்றான பிரான்சிய அபிவிருத்தி முகவர் தமது கடனுதவியினை இரத்து செய்யப் போவதாக அறிவித்துள்ளதாக தெரிவித்தார். இரணைமடு குள விவசாய அமைப்புக்கள் இத்திட்டத்தின் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட மறுத்தமை மற்றும் இதற்காக நீண்ட காலமாக கால தாமதம் ஏற்பட்டமை போன்ற காரணங்களால் இந்நிதி நிறுவனம் இம்முடிவை எடுத்துள்ளதாக தெரியவருகின்றது.

இதனால் ஆசிய அபிவிருத்தி வங்கியும் இரணைமடு குள அபிவிருத்திக்கென ஒதுக்கப்பட்ட நிதியினை நிறுத்தி யாழ். மாவட்டத்திற்கான குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதார வசதியினை மேற்கொள்ளவுள்ளதாகவும் அத்துடன் திட்டம் தொடர்பாக சம்பந்தப்பட்ட எல்லோருடனும் கலந்துரையாடப்படும் எனறும் தெரிவித்தார். இதன்போது. மாகாண விவசாய நீர்ப்பாசன அமைச்சின் செயலாளர் கால்டீன், நீர்ப்பாசனத் திணைக்கள மாகாண பணிப்பாளர் சிவபாதம், இரணைமடுக்குளத்திலிருந்து நீரைப்பகிர்வதற்கு தாங்கள் எவ்விதத்திலும் எதிர்ப்பில்லை எனவும் பகிர்வதற்கு தயாராக உள்ளதாகவும் கூறினார்கள்.

இதன்போது சி. முருகதாஸ் இரணைமடுத்திட்டத்திற்கான நிதி திரும்பிப் போவதனால் இரணைமடுக்குள அபிவிருத்திக்கான நிதியினை எவ்வாறு பெறுவது அதன் புனரமைப்பு வேலைகளை எவ்வாறு செய்வது எனவும் கேட்டார் அத்துடன் நீர்ப்பாசனத் திணைக்களம் பகிரங்கமாகவும் நடுநிலைமையாகவும் இத்திட்டத்தினால் ஏற்படப் போகும் நன்மை தீமைகளை அறிவிப்பார்களானால் இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதா இல்லையா என்பதை தீர்மானிக்க ஏதுவாக இருக்கும் என்றும் தெரிவித்தார்.

# அளுத்கம சம்பவத்தை அடுத்து கிழக்கு மாகாணசபையில் குழப்பம்

அளுத்கம முஸ்லிம்கள் மீதான வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் பொதுபலசேனா இயக்கத்தையும் அரசாங்கத்தையும் கண்டித்து நேற்று கிழக்கு மாகாண சபை அமர்வில் மாகாண சபை உறுப்பினரும் சபையின் முஸ்லிம் காங்கிரஸ் குழுத் தலைவருமான ஏ.எம்.ஜெமீலினால் சமர்ப்பிக்கப்பட்ட அவசர விசேட பிரேரணை தவிசாளரினால் நிராகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து சபையில் குழப்பம் ஏற்பட்டதுடன் மு.கா. உறுப்பினர்களால் செங்கோலும் தூக்கிச் செல்லப்பட்டது.

கிழக்கு மாகாண சபையின் மாதாந்த சபை அமர்வு தவிசாளர் ஆரியபதி கலப்பதி தலைமையில் நேற்றுக் காலை 10.00 மணியளவில் ஆரம்பமானது.

இதன்போது அளுத்கம சம்பவத்தை கண்டித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் கறுப்புப் பட்டி அணிந்து சபைக்கு சமூகமளித்திருந்தனர்.

அதேவேளை கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் சபையின் முஸ்லிம் காங்கிரஸ் குழுத் தலைவருமான ஏ.எம்.ஜெமீல் அளுத்கம முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்பட்ட காட்டுமிராண்டித்தனமான வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் பொதுபல சேனா இயக்கத்தையும் அரசாங்கத்தையும் கண்டித்து முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் அவசர விசேட பிரேரணை ஒன்றை சமர்ப்பிக்க ஆயத்தமானார்.

இதற்கு அனுமதி வழங்க தவிசாளர் மறுப்புத் தெரிவித்து அப்பிரேரணையை நிராகரித்தார். இதனைத் தொடர்ந்து சபையில் பெரும் அமளி துமளி ஏற்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களும் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு ஆதரவாக கோஷமிட்டனர். இதனால் தவிசாளர் சபை முற்பகல் 11.30 வரை ஒத்திவைத்தார்.

மீண்டும் சபை கூடியபோது குறித்த பிரேரணையை விவாதத்திற்கு ஏற்குமாறு மு.கா. குழுத் தலைவர் ஜெமீல் மற்றும் மு.கா. உறுப்பினர்கள் வற்புறுத்திய போதிலும் அதற்கு தவிசாளர் உடன்படவில்லை. இதனால் சபையில் மீண்டும் அமளி துமளி, கூச்சல் குழப்பம் ஏற்பட்டதனால் சபை மீண்டும் 15 நிமிடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

அதன் பின்னர் சபை மூன்றாவது தடவையாக கூடியபோதிலும் குறித்த பிரேரணையை சபையில் சமர்ப்பிப்பதற்கு அனுமதி வழங்க வேண்டும் என்று மு.கா. குழுத் தலைவர் ஜெமீல் மற்றும் மு.கா. உறுப்பினர்கள் விடாப்பிடியாக நின்று கோஷமிட்டனர்.

எனினும் தவிசாளர் அதற்கு இடமளிக்கவில்லை. இதனைத் தொடர்ந்து மு.கா. உறுப்பினர்கள் செங்கோலை தூக்கிக் கொண்டு சபைக்கு வெளியே ஓடினர்.

இதனால் தவிசாளர் சபையை கால வரையறையின்றி மூன்றாவது தடவையாக ஒத்தி வைத்தார். அதனைத் தொடர்ந்து அங்கு மு.கா. குழுத் தலைவர் ஜெமீல், ஊடகவியலாளர் மாநாட்டை கூட்டி தமது தரப்பு நிலைப்பாட்டை விளக்கிக் கூறினார்.

இதன்போது தவிசாளரின் தன்னிச்சையான நடவடிக்கையை வன்மையாகக் கண்டித்த ஜெமீல், அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படும் என்றும் குறிப்பிட்டார்.

## இலங்கையரின்..

மீளவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

தீர்மானத்திற்கு அமைவாக சிறுபான்மை மதத்தைச் சேர்ந்தவர்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்படுவதனை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியமானது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அளுத்கம மற்றும் பேருவளை பிரதேசங்களில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையும் கண்டனம் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பதிவு செய்ய அறிவிப்பு

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செலயகப்பிரிவில் மீள்குடியேற விரும்புவோரை பதிவு செய்து கொள்ளுமாறு, கண்டாவளை பிரதேச செயலர் த. முகுந்தன் நேற்று அறிவித்துள்ளார்.

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் இருந்து இடம்பெயர்ந்து, கிளிநொச்சி மாவட்டத்திலும் வெளி மாவட்டங்களிலும் வசித்து வருவோர்களில், தமது சொந்த இடங்களில் மீளக்குடியேற ஆர்வமுள்ள குடும்பங்கள் தமது பெயர் விபரங்களை எதிர்வரும் 8.7.14 திகதிக்கு முன்னர் கண்டாவளை பிரதேச செயலகத்தில் பதிவு செய்து கொள்ள முடியும் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

## ஹன்ரர்..

சைப் பிரிவில் அனுமதித்த போது, சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

ஹன்ரர் வாகனத்தினை செலுத்தி வந்த தெல்லிப்பளை பகுதியைச் சேர்ந்த விமல்ராஜ் (வயது-25) சுன்னாகம் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

விபத்துச் சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொண்டு வருவதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர். (25,பா)

## நகரசபையில்...

அத்துடன் இச்சபையின் தவிசாளர் நோய்வாய்ப்பட்டு கொழும்பில் சிகிச்சை பெற்று வந்த காலப்பகுதியில் உபதவிசாளர் க.சதீஸ் அதிகாரத்தை தன்கையில் எடுத்து அங்கு மேற்கொண்ட அதிகார துஷ்பிரயோகங்களும், அடாவடிகளும் இப்போது நீண்டபட்டியல் இட்டு வெளிச்சத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளன. (25)

## மதக்கலவர...

பௌத்த மதத் தலைவர்களும் பங்குபற்றிய இந்தக் கூட்டத்தில் அனைத்து சமூக மக்களுக்கும் உள்ள உரிமை பாதுகாக்கப்பட வேண்டும், மத ஒற்றுமை ஏற்பட்டு இனியும் இப்படியான சம்பவங்கள் நடைபெறாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டதாக அமைச்சர் பௌசி பி.பி.சி. தமிழோசையிடம் தெரிவித்தார்.

பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலரின் மத உணர்வுகளைத் தூண்டும் பேச்சே அளுத்கமப் பகுதியில் ஏற்பட்ட அசம்பாவிதங்களுக்குக் காரணம் என்றும் அமைச்சர் பௌசி கூறுகிறார்.

இதனிடையே வெறுப்புணர்வைத் தூண்டும் வகையில் உரையாற்றுபவர்களை உடனடியாக கைது செய்ய வேண்டும் என, நேற்று நாடாளுமன்றத்தில் அனைத்து சமூகத்தைச் சேர்ந்த உறுப்பினர்களும் அமைச்சர்களும் கோரினர் என்று அமைச்சர் பௌசி தெரிவித்தார்.

## வடக்கில்...

வெட்டில் ஐவர் படுகாயமடைந்தனர். இதேவேளை, இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனக் கருதப்படும் மூன்று பேர் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். படுகாயமடைந்தவர்கள் கிளிநொச்சி, வவுனியா, யாழ்ப்பாணம் மற்றும் அநுராதபுரம் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் கூறினர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

## உரும்பிராயிலும்...

இராணுவத்தினரும் குவிக்கப்பட்டு நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதுடன், நேற்றும் பாதுகாப்பு வழங்கப்பட்டு வருவத்தாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

உரும்பிராயினைச் சேர்ந்த குழுவினர் கோண்டாவிலைச் சேர்ந்த பாடசாலை மாணவன் ஒருவனை வாளால் வெட்டிக் கொலை செய்ததன் எதிரொலியாகவே மேற்படி வீடுகள் உடைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (25)

## சர்வதேச...

பாடுகளையும், சமாதானத்தையும் பாதிக்கும் என இந்தப் பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த விசாரணை இலங்கையின் நற்பெயருக்கும் சுயாதீனத் தன்மைக்கும் பாதகமாக அமையலாம் எனவும் சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரேரணையை நேற்று சபையில் சமர்ப்பித்து உரையாற்றிய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜானக்க பண்டார, ஐக்கிய நாடுகள் சபைக்கு சவால் விடுக்கும் எண்ணத்தில் பிரேரணையை சமர்ப்பிக்கவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

எனினும், ஐ.நா. மனித உரிமைகள் பேரவை நாட்டின் அரசியல் அமைப்புக்கு முரணாக செயற்படுவதை அனுமதிக்க முடியாது எனத்தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் மக்களின் இறையாண்மைக்கும், நாட்டின் இறைமைக்கும் தாக்கத்தை செலுத்தும் என்பதால், ஜனாதிபதி அல்லது நாடாளுமன்றத்தினால் மாத்திரம் அது தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ள முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே கருத்துக்கணிப்பொன்று நடத்தப்பட வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## தொடரை வென்றது இந்தியா

58 ஓட்டங்களுக்குள் பங்களாதேஷை சுருட்டிய இந்திய அணி 47 ஓட்டங்களால் வெற்றி பெற்று தொடரையும் கைப்பற்றியது.

இரண்டாவது போட்டியில் இந்திய அணி துடுப்பெடுத்தாடிய வேளை 5 ஆவது ஓவரில் மழை குறுக்கிட 41 ஓவராக குறைக்கப்பட்டது. இந்திய அணி 25.3 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 105 ஓட்டங்களைப் பெற்றது. ரெய்னா 27 ஓட்டங்களைப் பெற்றார். தாஷ்கின் அகமது 5 விக்கெட்டை வீழ்த்தியுள்ளார்.

பதிலளித்தாடிய பங்களாதேஷ் அணிக்கு ஸ்ருவேர்ட் பின்னி, ரோகித் சம்மா விக்கெட்டுக்களை வீழ்த்த 17.4 ஓவரில் 58 ஓட்டங்களுக்குள் சுருண்டது அவ்வணி. பந்துவீச்சில் ஆட்டநாயகனான பின்னி 6, சர்மா 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

## உலகக்கிண்ண கால்பந்து


உலகக்கிண்ண கால்பந்தாட்டப் போட்டியில் நேற்று நடந்த பெல்ஜியம், அல்ஜீரிய அணிகளுக்கிடையிலான போட்டியில் பெல்ஜியம் 2:1 என வெற்றி பெற்றுள்ளது.

## சுழிபுரத்தில் இன்று வேள்வி

சுழிபுரம் ஆறுமுகம் காளியம்மபாள் ஆலயத்தில் இன்று காலை 7.30 மணிக்கு வருடந்த வேள்வித் திருவிழா இடம்பெறவுள்ளது.

வேள்வித் திருவிழாவில் மிருகங்கள் பலியிடப்படவுள்ளதாக ஆலயத்தலைவர் தயாபரன் தெரிவித்துள்ளார். இதற்காக அனுமதிப் பத்திரங்கள் ஏற்கனவே அதிகாரம் பெற்ற சபைகளிடம் பெற்றுள்ளதாக தெரிவித்தார். (92)

## விபத்தில் சிக்கி குடை சாய்ந்தது ஆட்டோ



(யாழ்ப்பாணம்)

நேற்று மாலை 5.30 மணிக்கு யாழ்.ஐந்து சந்தியில் லொறியும், முச்சக்கர வண்டியும் மோதியதில் முச்சக்கர வண்டி தூக்கி வீசப்பட்டுள்ளது.

யாழிலிலிருந்து மானிப்பாய் வீதி வழியாக வருகைதந்த சிறிய ரக லொறியும், யாழ். நோக்கி வந்த முச்சக்கர வண்டியும் மோதியதினால் முச்சக்கர வண்டி அருகிலுள்ள கடைக்குள் புகுந்துள்ளது.

அதேநேரம் பாதை ஓரமாக வருகைதந்த மோட்டார் சைக்கிளை முச்சக்கர வண்டி மோதியதில் மோட்டார் சைக்கிளும் கடைக்குள் புகுந்து விபத்துக்குள்ளானது.

யாழ். போக்குவரத்துப் பொலிஸாரும் உடன் ஸ்தலத்துக்கு வருகைதந்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்கள். (105)

# அளுத்கம உட்பட்ட பகுதிகளில் தொடர்ந்தும் நீடிக்கும் பதற்றம்

### ஊரடங்கு அமுல், இராணுவத்தினர் கடமையில்

(கொழும்பு)

அளுத்கம மற்றும் பேருவளைப் பகுதிகளில் தொடரும் வன்முறைச்சம்பவங்களை அடுத்து பதற்ற நிலையைத் தணிக்கும் வகையில் இராணுவத்தினர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பொலிஸார் விடுத்த வேண்டுகோளுக்கிணங்கவே இராணுவத்தினர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தேசிய பாதுகாப்பிற்கான ஊடக மத்தியநிலையம் தெரிவித்துள்ளது. இதன்படி அளுத்கம, வெலிப்பன, தர்காநகர் பேருவளை மற்றும் மாகோன ஆசிய பகுதிகளில் இராணுவத்தினர் கடமையில் உள்ளதாக பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்தார். முன்னர் இப்பகுதிகளில் பொலிஸாரும், பொலிஸ் விசேட அதிரடிப்படையினரும் கடமையில் இருந்தனர்.

இதேவேளை வெலிப்பன பகுதியில் நேற்று முன்தினம் இரவு முஸ்லிம்கள் மீது மீளவும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக ஏ.எவ்.பி. தெரிவித்துள்ளது. 9 வீடுகளும், 26 கடைகளும் 50 தொடக்கம் 60 வரையான கும்பல்களால் துப்பாக்கிகள், பெறறோல்குண்டுகள் மற்றும் கத்திகளால் தாக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

வெலிப்பன பகுதியில் பாதுகாப்புக் கடமைக்காக மூன்று பொலிஸ் கொன்ஸ்ரபிள்களே நிறுத்தப்பட்டுள்ளதாகவும் பாரியளவில் தாக்குதல் நடாத்தவரும் குழுவினரைத் தடுப்பதற்கு அவர்களால் எதுவுமே செய்ய முடியாதுள்ளதாகவும், எனவே கூடுதலான பாதுகாப்பை வழங்கவேண்டுமென பாடசாலை அதிபரான நகுமன் தெரிவித்தார்.

தனது வியாபார நிலையத்தையும், வீட்டையும் தாக்குதல் நடாத்தி குழுவொன்று தீ வைத்து எரித்துள்ளதாக சுத்திகரிப்பு நிலையமொன்றை நடாத்திவரும் அப்துல் காபர் (வயது 60) என்பவர் தெரிவித்தார்.

நாங்கள் 25 வருடமாக இங்கு வாழ்கின்றோம். இப்படியொரு அனுபவத்தை நாம் காணவில்லை எல்லாவற்றையும் இழந்து விட்டோம் என அவர் தெரிவித்தார்.

இதேவேளை தனது களஞ்சியசாலையை தாக்குதலாளிகள் தீ வைத்து எரித்துள்ளதாக கோழிப்பண்ணை உரிமையாளரான ஹிஜாசின் முஸ்தபா (வயது - 31) என்பவர் தெரிவித்தார்.


தாக்குதலாளிகள் முதலில் அயுதமற்ற பாதுகாப்பு வீரரைத் தாக்கினர். பின்னர் எமது காவலாளியையும் அதன்பின் ஊழியர் ஒருவரையும் தாக்கிவிட்டு களஞ்சிய சாலைக்கு தீவைத்தனர். எனத்தெரிவித்தர்.

இதனிடையே பேருவளை மற்றும் அளுத்கம பிரதேசங்களில் அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டம் தொடர்ந்தும் அமுலில் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணிவரையில் இந்த ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டிருந்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

பொதுமக்கள் தங்களின் அத்தியாவசியத் தேவைளை பூர்த்தி செய்து கொள்ளும் நோக்கில் இந்தத் தளர்வு ஏற்படுத்தப்பட்டிருந்தது. அந்தக் காலப்பகுதியில் எந்தவிதமான வன்முறைச் சம்பவங்களும் இடம்பெறவில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், ஊரடங்குச் சட்டத்தை புறக்கணித்து செயற்பட்ட 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.என அவர் மேலும் தெரிவித்தார்.



**ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு, சமாதானத்துக்கும் ஜனநாயகத்துக்குமான பங்களிப்புக்கான விருது பொலிவியாவில் வழங்கப்பட்டது. பொலிவியாவின் துணை ஜனாதிபதி அல்வரோ கார்சியா லினேராவினால் இந்த விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.**

## முஸ்லிம்கள் மீதான வன்முறை; கண்டிக்கிறது கனடா

(கொழும்பு)

இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வன்முறைகளை கண்டிப்பதாக கனடா தெரிவித்துள்ளது.

அத்துடன் எல்லா சமூகங்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு இலங்கை அரசாங்கத்திடம் கனடா கோரியுள்ளது. இந்த வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதாகவும், காயமுற்றவர்கள் விரைவாக குணம்பெற பிரார்த்திப்பதாகவும் கனடா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இத்தகைய தாக்குதல்களை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும், இது மத சுதந்திர உரிமை மீறல் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இந்தச் சம்பவங்கள் தொடர்பாக வெளிப்படையான விசாரணைகளை நடத்தி, இவற்றுக்குப் பொறுப்பானவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்றும் கனடா கோரியுள்ளது.

## விபத்தில் காயமடைந்த குடும்பப்பெண் மரணம்

(உடுவில்)

உடுவில் ஆலடிப்பகுதியில் கடந்த சனிக்கிழமை மாலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த குடும்ப பெண் நேற்றைய தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

தெல்லிப்பளையை நிரந்தர இடமாகவும், நாகம்மாள் கோவிலடி உடுவிலை தற்காலிக வதிப்பிடமாகவும் கொண்ட நாகேந்திரம் மங்கையக்கரசி (வயது - 48) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த சனிக்கிழமை மாலை 6.30 மணியளவில் குறித்த நபர் மோட்டார் சைக்கிளில் சென்ற வேளை பின்புறமாக வந்த மோட்டார் சைக்கிள் இவர் மீது மோதித்தள்ளியது.

இதில் படுகாயமடைந்த அவர் உடனடியாக யாழ். போதனா வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கிருந்து அநுராதபுரம் வைத்தியசாலைக்கு கொண்டு சென்று மீளவும் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கெண்டு வரப்பட்ட நிலையில் நேற்றைய தினம் உயிரிழந்தார். (17)


## விளம்பரம் சேகரிப்பாளர் தேவை

விளம்பரம் சேகரிப்பதில் முன் அனுபவமும், துடிப்புடன் பணியாற்றக்கூடிய செயற்திறனும் மிக்க இருபாலரும் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

அலுவலக நேரத்தில் சுய விபரக் கோவையுடன் சமுகமளிக்கவும்.

**ஆளணி முகாமையாளர்,**
**தினமுரசு,**
**இல. 373,பிரதான வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(இ)


## பயண எச்சரிக்கை விடுத்தது அவுஸ்ரேலியா

இலங்கைக்கு பயணம் செய்யும் தமது நாட்டுக் குடிமக்களுக்கு அவுஸ்ரேலிய அரசு நேற்றையதினம் பயண எச்சரிக்கை அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

இலங்கையின் சில பகுதிகளில் அமைதியின்மை நிலவுவதால், மிகவும் அவதானமாக இருக்கும்படி அவுஸ்ரேலிய அரசாங்கம் தனது பிரஜைகளை கேட்டுக் கொண்டுள்ளது. பொதுமக்கள் அமைதியின்மை மற்றும் அரசியல் பதற்றங்கள் காரணமாக, இரவு நேர ஊரடங்கு சில இடங்களில் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஊரடங்கை மதித்தும், உள்ளூர் அதிகாரிகளின் வழிகாட்டுதல்களை மதித்தும் நடக்க வேண்டும். எந்தவொரு போராட்டங்களையும், பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக அதிகபட்ச கவனத்துடன் செயற்பட வேண்டும் என்றும் அவுஸ்ரேலிய அரசாங்கம் அறிவித்துள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 யூன் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.